


# தமிழ்நாடு இபேப்பர்.காம்

www. tamilnaduepaper.com




CHENNAI | Volume- 3 | Issue:262 | 07-04-2026 | செவ்வாய்க்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி

## இன்றைய பஞ்சாங்கம்

07.04.2026 பங்குனி 24
செவ்வாய் கிழமை

---

சூரிய உதயம் 6.08

---

திதி:
இன்று மாலை 3.05 வரை
பஞ்சமி பின்பு சஷ்டி.

---

நட்சத்திரம்:
இன்று அதிகாலை 2.21 வரை
அனுஷம் பின்பு கேட்டை

---

யோகம் :
இன்று மாலை 3.27 வரை
வ்யாதீபாதம் பின்பு வரீயான்.

---

கரணம்
இன்று அதிகாலை 2.26 வரை
கௌலவம் பின்பு மாலை 3.05
வரை தைதுலம் பின்பு கரசை

---

அமிர்தாதி யோகம் :
இன்று முழுவதும்
சித்த யோகம்.

---

சந்திராஷ்டமம் :
இன்று அதிகாலை 2.21
வரை அசுவினி பின்பு பரணி

---

நல்ல நேரம்
காலை 7.30 – 8.00.
மாலை 4.30 – 5.30

---

இராகு காலம்
பிற்பகல் 3.00 – 4.30.

---

எமகண்டம்
காலை 9.00 – 10.30.

---

குளிகை
பிற்பகல் 12.00 – 1.30.

---

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

## தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் 2026

# நிறைவு நாளில் வேட்புமனு தாக்கல் செய்த அரசியல் கட்சித் தலைவர்கள்

### வேட்புமனுக்கள் மீது இன்று பரிசீலனை

**சென்னை, ஏப்.7:**

சட்டமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்புமனு தாக்கல் கடந்த 30-ந்தேதி தொடங்கியது. அன்றைய தினம் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் (கொளத்தூர்), த.வெ.க. தலைவர் விஜய் (பெரம்பூர்), நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் (காரைக்குடி) ஆகியோர் தங்கள் வேட்பு மனுவை தாக்கல் செய்தனர்.

வேட்புமனு தாக்கல் இன்றுடன் நிறைவடைகிறது. கடைசி நாளான இன்று அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனி சாமி (எடப்பாடி), தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா (விருத்தாசலம்), தமிழக காங்கிரஸ் கட்சி தலைவர் செல்வப் பெருந்தகை (ஸ்ரீபெரும்புதூர்) உள்ளிட்ட வேட்பாளர்கள் தங்கள் வேட்புமனுவை தாக்கல் செய்தனர். மேலும் காங்கிரஸ் மற்றும் பா.ஜனதா வேட்பாளர்களும் வேட்புமனு தாக்கல் செய்தனர்.

**எடப்பாடி பழனிசாமி:** சேலம் மாவட்டம் எடப்பாடி சட்டமன்றத் தொகுதியில் அதிமுக வேட்பாளர் எடப்பாடி பழனிசாமி வேட்பு மனுத்தாக்கல் செய்தார். 8-வது முறையாக எடப்பாடி தொகுதியில் பழனிசாமி போட்டியிடுகிறார். 1989, 1991, 2011, 2016, 2021 ஆகிய தேர்தல்களில் கே.பழனிசாமி வெற்றி பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

**வானதி சீனிவாசன்:-** கோவை வடக்கு தொகுதியில் பாஜக வேட்பாளர் வானதி சீனிவாசன் வேட்பு மனுத்தாக்கல் செய்தார். அப்போது ராஜஸ்தான் முதல்-மந்திரி பஜன்லால் சர்மா, பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை உடன் இருந்தார்

**நயினார் நாகேந்திரன்:** விருதுநகர் மாவட்டம் சாத்தூர் தொகுதியில் பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் தனது வேட்பு மனுத்தாக்கல் செய்தார். அப்போது மத்திய சட்டம் மற்றும் நீதித்துறை மந்திரி அர்ஜுன் ராம் மேக்வால் உடன் இருந்தார்.

**தமிழிசை சவுந்தரராஜன்:** மயிலாப்பூர் தொகுதியில் போட்டியிடும் பாஜக மூத்த



தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் வேட்புமனு தாக்கல் செய்தார். அப்போது மத்திய மந்திரியும், தமிழக பாஜக தேர்தல் பொறுப்பாளருமான பியூஸ் கோயல் உடனிருந்தார்.

**எல்.முருகன்:** அவிநாசி தொகுதியில் போட்டியிடும் மத்திய இணை மந்திரி எல்.முருகன் தனது வேட்புமனுவை தாக்கல் செய்துள்ளார். இந்நிகழ்வின்போது மத்திய மந்திரி கிஷன் ரெட்டி உடனிருந்தார். வேட்புமனு தாக்கல் செய்யும் முன்பு அவிநாசி லிங்கேஸ்வரர் கோவிலில் எல். முருகன் வழிபாடு செய்தார்.

மதுரை தெற்கு தொகுதியில் பாஜக மாநில பொதுச்செயலாளர் ராம சீனிவாசன் வேட்பு மனு தாக்கல் செய்தார். அப்போது மராட்டிய மாநில முதல்-மந்திரி தேவேந்திர பட்னாவிஸ் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**ஓ.பன்னீர்செல்வம்:**

* மதுரை தெற்கு தொகுதியில் மதிமுக வேட்பாளர் பூமிநாதன் வேட்பு மனுத் தாக்கல் செய்தார்.
* திருப்போரூர் தொகுதியில் பாமக வேட்பாளர் பாலு வேட்புமனு தாக்கல் செய்தார்.
* காட்பாடி தொகுதியில் துரைமுருகன் வேட்புமனுத் தாக்கல் செய்தார். 13-வது முறையாக காட்பாடியில் களம் காண்கிறார் துரைமுருகன்.
* தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் தொகுதியில் திமுக சார்பில் போட்டியிடும் முன்னாள் முதல்-அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் வேட்புமனு தாக்கல் செய்தார்.

**அமைச்சர் காந்தி:**

* சென்னை துறைமுகம் சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் அமைச்சர் சேகர்பாபு வேட்புமனு தாக்கல் செய்தார்.
* ராணிப்பேட்டை தொகுதியில் அமைச்சர் காந்தி வேட்பு மனு தாக்கல் செய்தார்.
* குன்னம் சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் திமுக வேட்பாளர் அமைச்சர் சிவசங்கர் வேட்புமனு தாக்கல் செய்தார்.
* தர்மபுரியில் பாமக சார்பில் போட்டியிடும் சவுமியா அன்புமணி தனது வேட்புமனுவை தாக்கல் செய்தார். ஆயிரக்கணக்கானருடன் ஊர்வலமாக சென்று தாக்கல் செய்தார்.
* கடலூர் விருத்தாசலம் தொகுதியில் போட்டியிடும் தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் தனது வேட்புமனு தாக்கல் செய்துள்ளார். வேட்புமனு தாக்கலுக்கு முன் விருத்தாசலம் கொளஞ்சியப்பர் கோயிலில் வேட்பு மனுவை வைத்து பிரேமலதா விஜயகாந்த் சாமி தரிசனம் செய்தார்.

**விஜய பிரபாகரன்:**

* மயிலம் தொகுதியில் வேட்பு மனுத் தாக்கல் செய்தார் அதிமுக வேட்பாளர் சி.வி. சண்முகம்.
* சிதம்பரம் சட்டமன்றத் தொகுதியில் வேட்பு மனுத் தாக்கல் செய்தார் மஜக வேட்பாளர் தமிமுன் அன்சாரி.
* திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதியில் வேட்பு மனுத் தாக்கல் செய்தார் திமுக வேட்பாளர் கௌதமசிகாமணி.
* தொண்டாமுத்தூர் தொகுதியில் போட்டியிடும் அதிமுக வேட்பாளர் எஸ். பி.வேலுமணி தனது வேட்புமனு தாக்கல் செய்தார்.
* விசிக தலைவர் திருமாவளவனுடன் வந்து வேட்புமனு தாக்கல் செய்தார் குறிஞ்சிப்பாடி திமுக வேட்பாளர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம்.
* விருதுநகரில் வேட்புமனுத் தாக்கல் செய்தார் தேமுதிக வேட்பாளர் விஜய பிரபாகரன்.
* மதுரை கிழக்கு சட்டமன்றத் தொகுதியில் வேட்பு மனுத் தாக்கல் செய்தார் திமுக வேட்பாளர் மூர்த்தி

இன்று கடைசி நாள் என்பதால் அரசியல் கட்சியைச் சேர்ந்த வேட்பாளர்கள் தங்களது வேட்புமனுவை தாக்கல் செய்து வருகின்றனர். இதனால் தேர்தல் நடத்தும் அதிகாரி அலுவலகங்களில் கூட்டம் அலைமோதியுள்ளது. எனவே கூட்ட நெரிசலை சமாளிக்க 'டோக்கன்' நடைமுறை பின்பற்றப்படுகிறது.

வேட்புமனுக்கள் முடிந்தவுடன் மனுக்கள் மீதான பரிசீலனை நாளை நடைபெற உள்ளது. இதில் தேர்தல் ஆணையத்தின் விதிமுறைகளை பின்பற்றாத மனுக்கள் நிராகரிக்கப்படும். உரிய மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும். மனுக்கள் ஏற்கப்பட் டும் கடைசி நேரத்தில் தேர்தலில் போட்டியிட விரும்பாதவர் கள் தங்கள் மனுக்களை திரும்ப பெறுவதற்கு 9-ந்தேதி கடைசிநாள் ஆகும்.

அன்றைய தினம் மாலையில் இந்த சட்டமன்ற தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் இறுதி பட்டியல் வெளியிடப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

# தாமரையுடன் இலையும் சேர்ந்து மலரும்

**சென்னை, ஏப்.7:**

தாமரை மலரும் அதனுடன் இரட்டை இலையும் சேர்ந்து மலரும் என மதுரை வந்துள்ள மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்தார்.

செய்தியாளர்களிடம் பேசிய மத்திய அமைச்சர் பியூஷ் கோயல், மயிலாப்பூர் சட்டப்பேரவை வேட்பாளர் தமிழிசை சௌந்தர்ராஜன் மனு தாக்கல் செய்த பொழுது மழை பெய்து வருண பகவானும் வாழ்த்தி உள்ளார். தாமரை மலரும் அதன் உடன் இரட்டை இலையும் சேர்ந்து மலரும்.

தமிழகத்தில் போதை புழக்கம் அதிகமாக உள்ளது. அம்மா ஜெயலலிதா ஆட்சியில் தமிழகம் சிறப்பாக இருந்தது. ஜெயலலிதா ஆட்சியில் சட்டம் ஒழுங்கு சிறப்பாக இருந்தது. நிச்சயம் மயிலாப்பூர் மக்கள் தமிழிசை சௌந்தரராஜன் வாக்களிப்பார்கள்.

வேளச்சேரியில் அதிமுக வேட்பாளர் அசோக் குமார் ஆகியோருக்கும், அதிமுக தலைமையிலான கூட்டணியில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு தமிழக மக்கள் வாக்களிக்க வேண்டும்.

தேசிய கல்விக் கொள்கையில் ஹிந்தி மொழி கட்டாயம் என எங்குச் சொல்லப்பட்டுள்ளது என முதல்வர் கூற வேண்டும். நான் அவருக்கு நேரடி சவாலாகச் சொல்கிறேன். தமிழைப் படிக்க வேண்டும் என்பதையும் நாங்கள் கூறியுள்ளோம் என அவர் தெரிவித்தார்.

# ஹோர்முஸ் நீரிணையைக் கடந்த 8-வது இந்திய கப்பல்!




**புதுடில்லி, ஏப்.7:**

'கிரீன் ஆஷா' என்கிற இந்திய கப்பல் மேற்காசிய போர் காரணமாக ஹோர்முஸ் நீரிணைப் பகுதியில் சிக்கியிருந்தது. ஹோர்முஸ் நீரிணையைக் கடக்க இந்திய உள்ளிட்ட சில நாடுகளுக்கு மட்டும் ஈரான் அனுமதி வழங்கியுள்ள நிலையில் 8-வது இந்தியக் கப்பலாக 'கிரீன் ஆஷா' எல்பிஜி கப்பல் நீரிணையைக் கடந்து இந்தியா நோக்கி வந்துகொண்டிருக்கிறது.

முன்னதாக இந்தியக் கொடியேந்திய எரிவாயு கப்பலான கிரீன் சான்வி எனும் கப்பல் 46,650 மெட்ரிக் டன் எல்பிஜி-யுடன் பாதுகாப்பாக ஏப்ரல் 3 அன்று ஹோர்முஸ் நீரிணையைக் கடந்தது.

கடந்த மார்ச் 28 அன்று, 47,000 மெட்ரிக் டன்களுடன் ஹோர்முஸ் நீரிணையைக் கடந்த ஒரு கப்பல் குஜராத்தின் ஜாம்நகர் துறைமுகம் வந்தடைந்தது.

பாதுகாப்பு காரணங்களுக்காக அவ்வழியே வரும் வர்த்தக கப்பல்களுக்கு பாதுகாப்பளிக்கும் விதமாக இந்திய கடற்படையின் போர்க் கப்பல்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

மேற்காசிய போர் தீவிரமாக நடைபெற்று வரும் நிலையில் ஹோர்முஸ் நீரிணை வழியே இந்தியக் கப்பல்களை அனுமதிக்க ஈரானுடன் இந்தியா நடத்திய தொடர் பேச்சுவார்த்தையின் காரணமாக இந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

18 இந்தியக் கப்பல்களுடன் 485 மாலுமிகள் ஹோர்முஸ் நீரிணைப் பகுதியில் தற்போது சிக்கியிருப்பதாக இந்திய கப்பல் போக்குவரத்துத் துறை தெரிவித்துள்ளது. அவர்களுடன் தொடர்ந்து இணைப்பில் உள்ளதாகவும் அவர்களுக்குத் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சகத்தின் கூடுதல் செயலாளர் முகேஷ் மங்கல் கூறுகையில், "இதுவரை 964-க்கும் மேற்பட்ட மாலுமிகள் இந்தியாவுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். மேலும், இந்திய துறைமுகங்கள் வழக்கம் போல் இயங்கி வருகின்றன. அதுமட்டுமின்றி, போர்ச்சூழலில் வளைகுடா நாடுகளில் இருந்து 5.98 லட்சம் பயணிகள் இந்தியா திரும்பியுள்ளனர்" என்று அவர் தெரிவித்தார்.




# 19 பேர் மாநிலங்களவை உறுப்பினர்களாக பதவியேற்பு

**புதுடெல்லி, ஏப்.7:**

தமிழகத்தைச் சேர்ந்த அன்புமணி, எல்.கே.சுதிஷ், திருச்சி சிவா உட்பட 19 பேர் மாநிலங்களவை உறுப்பினர்களாக இன்று பதவியேற்றனர்.

மாநிலங்களவை தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் முன்னிலையில், இந்த பதவியேற்பு விழா நடைபெற்றது. அப்போது, மாநிலங்களவைத் துணைத் தலைவர் ஹரிவன்ஷ் மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு ஆகியோர் உடனிருந்தனர்.

தமிழ்நாட்டில் இருந்து ஆறு பேர், மகாராஷ்டிரா மற்றும் மேற்கு வங்கத்தில் இருந்து தலா ஐந்து பேர், ஒடிசாவில் இருந்து மூன்று பேர் என மொத்தம் 19 பேர் மாநிலங்களவை உறுப்பினர்களாக பதவியேற்றனர்.

தமிழகத்தைச் சேர்ந்த தம்பிதுரை (அதிமுக), அன்புமணி



ராமதாஸ் (பாமக), திருச்சி சிவா (திமுக), எல்.கே. சுதிஷ் (தேமுதிக), கிறிஸ்டோபர் மாணிக்கம் (காங்கிரஸ்), கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் (திமுக) ஆகியோர் தமிழகத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் உறுப்பினர்களாக பதவியேற்றனர். மகாராஷ்டிராவில் இருந்து சரத் பவார் (தேசியவாத காங்கிரஸ் (சரத்பவார்) கட்சி), மாயா சிந்தமான் இவ்னேட்(பாஜக), ராம்ராவ் சக்காரம் வட்குடே (பாஜக), ஜோதி நாக்நாத் வாக்மாரே (சிவ சேனா), மத்திய அமைச்சர் ராம்தாஸ் அதாவலே (இந்திய குடியரசு கட்சி(அதாவலே)) ஆகிய ஐவர் மாநிலங்களவை உறுப்பினர்களாக பதவியேற்றனர்.

மேற்கு வங்கத்தில் இருந்து பாபுல் சுப்ரியா பரல்(திரிணமூல் காங்கிரஸ்), விஸ்வஜித் சின்ஹா (பாஜக), மேனகா குருசாமி (திரிணமூல் காங்கிரஸ்), ராஜீவ் குமார் (திரிணமூல் காங்கிரஸ்), ருக்மணி மல்லிக் (திரிணமூல் காங்கிரஸ்) ஆகிய 5 பேர் மாநிலங்களவை உறுப்பினர்களாக பதவியேற்றனர்.

மேலும், ஒடிசாவைச் சேர்ந்த மன்மோகன் சமல் (பாஜக), சன்ருப்ட் மிஸ்ரா (பிஜேடி), திலிப் குமார் ரே (சுயேட்சை) ஆகிய மூவர் மாநிலங்களவை உறுப்பினர்களாக பதவியேற்றனர். உறுப்பினர்கள் பெரும்பாலும் தங்கள் தாய்மொழியிலேயே உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர். புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து உறுப்பினர்களுக்கும் அவைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் வாழ்த்து தெரிவித்தார்.



# திருக்குறள் குறள்-582

**எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை எஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் தொழில்**



எல்லாரிடத்திலும் நிகழ்கின்றவை எல்லாவற்றையும் எக்காலத்திலும் (ஒற்றரைக் கொண்டு) விரைந்து அறிதல் அரசனுக்குரிய தொழிலாகும்.

## சிந்திக்க ஒரு நொடி



வறுமைக்கு பின் வரும்
செல்வமும்...
அழுகைகக்குப் பின்
வரும் தைரியமும்...
தோல்விக்குப்பின்
வரும் வெற்றியும்....
எப்போதும் நிலைத்து
நின்று நம்மை நல்வழி
நடத்தும்

**உஷாமுத்துராமன்**

## பள்ளி ஆண்டு விழா



பனைக்குளம் ஹாஜி எஸ்.ஓ முகம்மது யூசுப் மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளியின் 18 வது ஆண்டு விழா, வட்டார சுகாதார ஆய்வாளர் மகேந்திரன் தலைமையில் நடைபெற்றது. பனைக்குளம் முஸ்லிம் பரிபாலன் சபை, முஸ்லிம் நிர்வாக சபை, மற்றும் சோகையன்தோப்பு, கிருஷ்ணாபுரம், புதுக்குடியிருப்பு, பொன்குளம், தாமரை ஊரணி, ஊர் நிர்வாகிகள் முன்னிலை வைத்தனர். தாளாளர் நூருல் கரீம் வரவேற்றார். முதல்வர் ஜுஹைரதா பர்வீன், ஆசிரியை லாவண்யா ஆண்டறிக்கை வாசித்தனர். விழாவில் மாணவ மாணவிகளின் கண்கவர் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. விழாவில் சிறப்பு விருந்தினராக திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக கல்வியியல் துறை தலைவர் டாக்டர் முத்துசாமி, சென்னை ஆசிரியர் டாக்டர் குருமூர்த்தி, இன்வர்ட் ஷாப்ட்லேப் பிரைவேட் லிமிடெட் மேலாளர் திருநாவுக்கரசு, சென்னை சைக்கிள் லிஸ்ட் பாஸ்கரன், துறையூர் பக்கிரி சாமி மற்றும் புதுவலசை சுகாதார ஆய்வாளர் கணேசமூர்த்தி ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டனர். விழாவில் ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 25 பள்ளிகளின் தாளாளர்கள் கலந்து கொண்டு, வாழ்த்துரை வழங்கி சிறப்பித்தனர். ஆசிரியை சாந்தி நன்றியுறை கூறினார். விழாவிற்கான ஏற்பாடுகளை டாக்டர் முகமது ரஸ்மி செய்திருந்தார்.

## வள்ளுவர் முன்னேற்றக் கழகத்தினர் திமுக கூட்டணிக்கு ஆதரவு



**கிருஷ்ணகிரி,ஏப்.07:**
கிருஷ்ணகிரியில் திமுக மாவட்ட செயலாளர் திரு மதியழகனை சந்தித்து வள்ளுவர் முன்னேற்றக் கழகத்தினர் வரும் சட்டமன்றத் தேர்தலில் திமுக கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்தனர். இந்நிகழ்வில் வள்ளுவர் முன்னேற்றக் கழகத்தின் மாநில தலைவர் குமார்,செயலாளர் மருத்துவர்.சதிஷ்குமார், பொருளாளர் கலைவாணி மற்றும் வெங்கடேஷ், செந்தில், சிவக்குமார், பார்த்திபன்,சங்கரன்,பூபாலன் உள்ளிட்ட ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் கலந்துக்கொண்டனர்.

## சையத் பாருக் வேட்புமனு தாக்கல்



திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர் சையத் பாருக் வேட்புமனு தாக்கல் செய்ய கடைசி நாளான இன்று கூட்டணி கட்சியினருடன் மேளதாளத்துடன் தனது வேட்புமனுவை தாக்கல் செய்தார்.

## செய்யாறில் தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் 26 ஆவது வார திருக்குறள் பயிற்சி வகுப்பு



**செய்யாறு ஏப்.07:**
செய்யாறில் தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் 26 வது வார திருக்குறள் பயிற்சி வகுப்பு நேற்று முன்தினம் நடைபெற்றது.

திருவண்ணாமலை மாவட்டம், தமிழ் வளர்ச்சித் துறையால் திருக்குறள் திருப்பணிகள் திட்டம் சார்பில் 26வது வார திருக்குறள் பயிற்சி வகுப்பு செய்யாறு அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நேற்று முன்தினம் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு திருக்குறள் பயிற்சியாளர் கவிஞர் எறும்பூர் கை. செல்வகுமார் தலைமை தாங்கி வரவேற்புரை நிகழ்த்தினார். 18 மாணவிகள், 5 மாணவர்கள், 2 பயிற்சியாளர்கள், 4பெரியவர்கள் என மொத்தம் 29 பேர் நேற்றைய நிகழ்வில் கலந்து கொண்டனர்.

முடிவில் புலவர் ந. கனகசபை நன்றி கூறினார்.

## உலக சுகாதார தினம் - 2026




உலகளாவிய சுகாதார பிரச்சினைகள் பற்றி மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி ஆரோக்கியமாக வாழ ஊக்குவிப்பதற்காக ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 7ஆம் தேதி உலக சுகாதார தினம் கடைபிடிக்கப்படுகிறது.

ஒவ்வொரு மனிதரும் தூய்மையாக இருந்தாலே, இந்த ஒட்டுமொத்த பூமியும் நலம் பெறும் என்பது உண்மை . உடலும் மனமும் தூய்மையாக இருந்தாலே, பெரும்பாலான நோய்கள் நம்மை அணுகாமலிருக்கும். சுகாதாரம், மனித வாழ்வின் ஆதாரம்.

இதை மனதில் கொண்டுதான் 1948-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட உலக நலவாழ்வு அமைப்பு, 1950-ம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஏப்ரல் மாதம் 7-ம் தேதி, உலக சுகாதார தினமாகக் கடைப்பிடிக்கிறது. ஒவ்வோர் ஆண்டும் ஒரு கருப்பொருளைக்கொண்டுஇந்த தினம் கொண்டாடப்படுகிறது.

இந்த ஆண்டு உலக சுகாதார தினத்தின் கருப்பொருள் 'எனது ஆரோக்கியம், எனது உரிமை' ஆகும். அதாவது அத்தியாவசிய சுகாதார சேவைகளை பெறுவது ஒருவரின் உரிமை சார்ந்தது என எடுத்துக்காட்டுகிறது.

ஆரோக்கியத்திற்கான பொருளாதாரம் பற்றிய உலக சுகாதார அமைப்பின் கூற்றுபடி குறைந்தபட்சம் 140 நாடுகள் தங்கள் அரசியலமைப்பில் ஆரோக்கியத்தை மனித உரிமையாக அங்கீகரித்துள்ளன.

இன்னும் பல நாடுகள் தங்கள் மக்களுக்கு சுகாதார சேவைகளை அணுகுவதற்கான உரிமையை உறுதிப்படுத்த சட்டங்களை நிறைவேற்றவில்லை. இந்த ஆண்டின் கருப்பொருள் பல விஷயங்களை உள்ளடக்கியது. அனைவருக்கு எல்லா இடங்களிலும் தரமான சுகாதார சேவைகள், கல்வி, பாதுகாப்பான குடிநீர், சுத்தமான காற்று, நல்ல ஊட்டச்சத்து, சுகாதாரமான வசிப்பிடம், பாதுகாப்பான பணியிடம் மற்றும் சுற்றுச்சூழல் ஆகியவற்றை உலக சுகாதார அமைப்பு வலியுறுத்துகிறது.

**தொகுப்பு: பா. சீனிவாசன், செயலாளர், இந்தியன் ரெட் கிராஸ் சங்கம், வந்தவாசி கிளை.**

## அண்ணாமலையார் உண்ணாமலை அம்மன் அலங்காரத்துடன் பாலிகை விடுதல் உற்சவம்



**திருவண்ணாமலை ஏப்,07:**
அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயிலில் அண்ணாமலையார் உண்ணாமலை அம்மனுக்கு திருக்கல்யாண உற்சவம் வண்ண மலர் மாலைகளால், தங்க ஆபரணங்களால் அலங்கரித்து தாமரைக் குளம் புறப்பாடு பாலிகை விடுதல் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தார்கள். **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## கொடிசியா திருப்பதி ஸ்ரீஸ்வாமி மலையப்பன் திவ்ய சேவை



கோவை கொடிசியா திருப்பதி ஸ்ரீஸ்வாமி மலையப்பன் திவ்ய சேவை.

## மயிலை கேசவர் சிம்கா வாகனம்



மயிலை கேசவர் சிம்கா வாகனம்.

## ஜே.ஜே.எபினேசர் வாக்கு கேட்டு பிரச்சாரம்



நேற்று 06/04/2026, மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பாக, ஆர்.கே.நகர் சட்டமன்றத் தொகுதி வெற்றி வேட்பாளர் ஜே.ஜே.எபினேசர் அவர்கள் ஆர்.கே.நகர் 1வது சர்க்கிள், 39-வது வட்டத்தில் வாக்கு கேட்டு பிரச்சாரத்தை தொடங்கினார். இந்நிகழ்ச்சியில் வடசென்னை கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் திருமதி.மதாரம்மா கனி பாருக் அவர்கள் வேட்பாளருடன் கலந்துகொண்டு வீதி வீதியாக சென்று பொதுமக்களிடம் வாக்கு சேகரித்தார். உடன் ஆர்.கே.நகர் தொகுதிக்கு உட்பட்ட அனைத்து நிலை காங்கிரஸ் பேரியக்க நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டு வாக்கு சேகரித்தனர்.

## சோழவந்தான் தொகுதியில் தி.மு.க., அ.தி.மு.க., த.வெ.க., சார்பில் முன்னாள் எம்.எல்.ஏ.,க்கள் உட்பட 25 பேர் வேட்புமனு தாக்கல்



**வாடிப்பட்டி, ஏப்.07:**
மதுரை மாவட்டம் சோழவந்தான் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் தேர்தல் வேட்பு மனு தாக்கல் வாடிப்பட்டி தாலுகா அலுவலகத் தில் கடந்த 30 ந்தேதி தொடங்கி நேற்று 6 ந்தேதி வரை நடந்தது. இந்த வேட்புமனுக்களை சோழவந் தான் தொகுதி தேர்தல் நடத்தும் அதிகாரிமாவட்ட பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறுபான்மை நலத்துறை அலுவலர் சண்முக வடிவேல் காலை 11 மணி முதல் மதியம் 3 மணி வரை தொகுதி பொறுப்பு அலுவலர் ஆவின்பொது மேலாளர் வீராச்சாமி முன்னிலை யில் பெற்றார். உடன் உதவி தேர்தல் அதிகாரி தாசில்தார் ராமச்சந்திரன், மண்டல துணை தாசில்தார் செந்தில்குமார்,தேர்தல் துணை தாசில்தார் கருப்பையா, வருவாய் ஆய்வாளர்கள் ரகுபதி, கௌதம் குமார் ஆகியோர் இருந்தனர். வேட்புமனு தாக்கல் செய்தவர்கள் பெயர் விவரம் வருமாறு:-

1. தி.மு.க. - எம்.எல்.ஏ., வெங்கடேசன், (மாற்று) மணி மேகலை.
2. அ.தி.மு.க. -முன்னாள் எம்.எல்.ஏ., மாணிக்கம், (மாற்று) ஆதிராதீப்தி .
3. த. வெ.க. - முன்னாள் எம்.எல்.ஏ., கருப்பையா (மாற்று) தாமோதரன்.
4. புரட்சித்தலைவர் எம்ஜிஆர் மக்கள்முன்னேற்ற கழகம் -டாக்டர் பாலமுருகன். (மாற்று) அஜய் சுபாஷ்.
5. நாம் தமிழர் -நாகலட்சுமி (மாற்று) பவித்ரா.
6. புதிய தமிழகம் - ரகு ,
7. வாழ்வுரிமைக் கட்சி - தங்கப்பாண்டி
8. ராமதாஸ் (சுயே)
9. கோபால் (சுயே)
10. சிவாய ஆதித்யா (சுயே)
11. ரஞ்சித்குமார் (சுயே)
12. குணசேகரன் (சுயே)
13. பாபு (சுயே)
14. நாகராஜன் (சுயே)
15. பாலமுருகன் (சுயே)
16. கிருஷ்ணசாமி (சுயே)
17. பாலமுருகன் (சுயே)

இதில் அதிமுக வேட்பாளர் மாணிக்கம் கூடுதலாக 2 மனுவும் நாம் தமிழர் வேட்பாளர் நாகலட்சுமி கூடுதலாக 1 மனுவும் தாக்கல் செய்துள்ளதால் மொத்தம் 25 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## தோழர் திரு.L.சுந்தர்ராஜன் தேர்தல் பிரச்சாரம்



சட்டமன்ற தேர்தலையொட்டி திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி வெற்றி வேட்பாளர் தோழர் திரு.L.சுந்தர்ராஜன் 06/04/2026 அன்று காலை திருவொற்றியூர் தெற்கு பகுதி 14வது வட்டத்தில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். இந்நிகழ்வில் வடசென்னை கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் திருமதி.மதாரம்மா கனி பாருக் அவர்கள் உட்பட திருவொற்றியூர் தொகுதிக்கு உட்பட்ட அனைத்து நிலை காங்கிரஸ் பேரியக்க நிர்வாகிகளுடன் கலந்து கொண்டு பொதுமக்களிடம் வாக்கு சேகரித்தார்.

# தேர்தல் கொண்டாட்டம் 2026



## தேர்தல் களப்பணியில்...

### தென் மாவட்டங்களில் இன்று முதல் சசிகலா பிரச்சாரம்



சென்னை: அதிமுக ஒருங்கிணைப்பு முயற்சியில் ஈடுபட்டு வந்த சசிகலா, இறுதியாக அனைத்திந்திய புரட்சித் தலைவர் மக்கள் முன்னேற்றக் கழகம் என்ற புதிய கட்சியை தொடங்கினார்.

இக் கட்சி, இந்த தேர்தலில் பாமக நிறுவனர் ராமதாஸூடன் கூட்டணி அமைத்து போட்டியிடுகிறது. சசிகலா இதுவரை 5 கட்டங்களாக 80 வேட்பாளர்களை அறிவித்துள்ளார். நேற்றுடன் வேட்புமனு தாக்கல் நிறைவடையும் நிலையில் இன்று (ஏப்.7) பிரச்சாரத்தை தொடங்குகிறார்.

இது தொடர்பாக கட்சி தலைமை அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: அனைத்திந்திய புரட்சித் தலைவர் மக்கள் முன்னேற்றக் கழக பொதுச்செயலாளர் சசிகலா, இன்று முதல் 10-ம் தேதி வரை, இக்கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரம் மேற்கொள்கிறார். அதன்படி நாளை, திருப்பரங்குன்றம், மதுரை மத்தி, திருமங்கலம், சோழவந்தான், உசிலம்பட்டி, ஆண்டிபட்டி தொகுதிகளிலும், 8-ம் தேதி போடி, நிலக்கோட்டை, திண்டுக்கல், மேலூர், தொகுதிகளிலும், 9-ம் தேதி சிவகங்கை, மானாமதுரை, திருச்சுழி, அருப்புக்கோட்டை, சாத்தூர் தொகுதிகளிலும், 10-ம் தேதி சிவகாசி, ஸ்ரீவில்லிப்புத்தூர், ராஜபாளையம், வாசுதேவநல்லூர், சங்கரன்கோவில் ஆகிய தொகுதிகளிலும் பிரச்சாரம் மேற்கொள்கிறார். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

### பாஜகவில் சண்டையை ஏற்படுத்த முயற்சி: ஹெச்.ராஜா புகார்

பாஜக மூத்த தலைவர் எச்.ராஜா தனது குடும்பத்தினருடன் திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி சுப்பிரமணிய சுவாமி கோயிலில் சிறப்பு பூஜைகள் செய்து வழிபாடு செய்தார்.

பின்னர், செய்தியாளர்களிடம் எச்.ராஜா கூறியதாவது: தமிழகத்தில் திமுக அரசு அரசியல் சட்டத்தின் அனைத்து கரங்களையும் முடக்கி போட்டுள்ளது. தமிழகத்தில் இந்தியை திணிக்கின்ற முதல் குடும்பம், முதல்வர் மு.க. ஸ்டாலின் குடும்பம். சமச்சீர் கல்வியை புறக்கணிக்கிற தமிழ் விரோத தீய அரசு மு.க.ஸ்டாலின் அரசு.

பாஜகவின் முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலை, கடந்த சட்டப்பேரவை தேர்தலில் போட்டியிட்டார். தற்போது அவர் போட்டியிடவில்லை. அதை பெரிதாக்கி பாஜகவுக்குள் சண்டையை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர். தமிழக வெற்றிக்கழகத்தால் திமுகவுக்குதான் பாதிப்பு. விஜய் திமுக கூட்டணியின் வாக்குகளை தான் பிரிப்பார்.

குறிப்பாக, திருமாவளவன் கட்சியின் வாக்குகளை தான் விஜய் பிரிப்பார். தே.ஜ. கூட்டணிக் கட்சிகளின் வாக்குகளை விஜய்யால் பிரிக்க முடியாது. எனவே, விஜய்யின் வருகை திமுகவுக்கு பாதிப்பை ஏற்படுத்தும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

### விஜய் வேட்புமனுவில் திருத்தம் மேற்கொள்ள கூடுதல் பிரமாண பத்திரம் தாக்கல்



தவெக தலைவர் விஜய் பெரம்பூரில் தாக்கல் செய்த வேட்புமனுவில் திருத்தம் மற்றும் கூடுதல் விவரம் சேர்க்க 3 பிரமாணப் பத்திரங்களையும், திருச்சி கிழக்கு வேட்புமனுவில் ரூ.6 கோடி பிரச்சார வாகனம் தொடர்பாக கூடுதல் விவரம் சேர்க்க ஒரு பிரமாணப் பத்திரத்தையும் வழக்கறிஞர்கள் தாக்கல் செய்தனர். சட்டப்பேரவைத் தேர்தலில் பெரம்பூர், திருச்சி கிழக்கு தொகுதிகளில் தவெக தலைவர் விஜய் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்துள்ளார். இதில், வயது மற்றும் வழக்குகள் குறித்து திருத்தம் செய்ய வேண்டியிருந்தது. மேலும், அவர் 2 தொகுதிகளிலும் அளித்த பிரமாணப் பத்திரத்தில், சொத்து விவரப் பகுதியில் தற்போது அவர் பயன்படுத்தி வரும் ரூ.6 கோடி மதிப்பு பிரச்சார வாகனம் குறித்து குறிப்பிடவில்லை. இதையடுத்து, தவெக வழக்கறிஞர்கள் பிரிவினர் நேற்று முன்தினம் பெரம்பூர் தொகுதியில் 2 வழக்குகள் உள்ள விவரம், வயது திருத்தம் தொடர்பாகவும் பிழைத் திருத்தல் பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்தனர். மேலும் இரு தொகுதிகளிலும் பிரச்சார வாகனத்தை சொத்துவிவரத்தில் கூடுதலாக சேர்க்கக்கோரி கூடுதல் பிரமாணப் பத்திரமும் தாக்கல் செய்தனர்.

## "கண்ணுக்கு தெரியாத காற்றிலும் ஊழல் செய்கின்ற ஒரே கட்சி..." - பழனிசாமி கடும் தாக்கு

கண்ணுக்குத் தெரியாத காற்றிலும் ஊழல் செய்த கட்சி திமுக என்று அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி பேசினார்.

புதுச்சேரி சட்டப்பேரவை தேர்தலில் அதிமுக சார்பில் உப்பளம் தொகுதியில் போட்டியிடும் மாநில செயலாளர் அன்பழகன், உருளையன்பேட்டை தொகுதியில் போட்டியிடும் காந்தி ஆகியோரை ஆதரித்து அக்கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி நேற்று மாலை பிரச்சாரம் மேற்கொண்டார்.



அவர் பேசியதாவது: மாநிலத்தில் ஒரு கட்சியும், மத்தியில் ஒரு கட்சியும் ஆட்சி செய்தால், மாநிலத்துக்கு தேவையான திட்டங்களும் கிடைக்காது. நிதியும் கிடைக்காது. ஒரு வண்டிக்கு இரண்டு சக்கரம் இருந்தால் தான் இலக்கை அடைய முடியும். அந்த அடிப்படையில் தேசிய ஜனநாயக கூட்டணி அமைந்திருக்கிறது.

திமுக தலைவர் ஸ்டாலின் இங்கு தேர்தல் பிரச்சாரத்துக்கு வருவார். தமிழகத்தில் கொள்ளையடித்தது போதாது என்று இங்கும் கொள்ளையடிக்கப் பார்க்கிறார். தமிழகத்தில்கலெக்ஷன், கமிஷன், கரப்ஷன் நடக்கிறது. டாஸ்மாக்கில் மட்டும் பல்லாயிரக்கணக்கான கோடிக்கு ஊழல் செய்துள்ளனர். புதுச்சேரியில் மதுபான விற்பனை அதிகமாக இருக்கிறது. அது ஸ்டாலினுக்கு கண்ணை உறுத்திக்கொண்டு இருக்கிறது.

கண்ணுக்கு தெரியாத காற்றிலும் ஊழல் செய்கின்ற ஒரே கட்சி திமுக. மத்தியில் ரூ.1 லட்சத்து 74 ஆயிரம் கோடி கொள்ளையடித்த 2 ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல் நாட்டையே உலுக்கி விட்டது. உலகளவில் கூட இந்த அளவுக்கு ஊழல் நடக்கவில்லை. நாடு முழுவதும் நம்மை தலைகுனிய வைத்த கட்சி திமுக. இவ்வாறு அவர் பேசினார்.

பிரேமலதாவுக்கு பதில்: மாநிலங்களவை எம்.பி. பதவியை தேமுதிகவுக்கு ஒப்பந்தப்படி அதிமுக கொடுக்கவில்லை என்று பிரேமலதா கூறியதற்கு பழனிசாமி பதிலளித்துள்ளார். நெய்வேலி பிரச்சாரக் கூட்டத்தில் பேசிய பழனிசாமி, "திமுகவை விஜய்காந்த் கடுமையாக எதிர்த்தார். திமுகவை கடுமையாக எதிர்த்த கட்சி தேமுதிக. ஆனால், இன்று நம்மைப் பார்த்து மாநிலங்களவை பதவியை தேமுதிகவுக்கு கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். 2026-ல் அதிமுகவுடன் கூட்டணி அமைத்து தேமுதிக போட்டியிட்டால் மாநிலங்களவை எம்.பி. பதவி வழங்கப்படும் என்று நான் தெளிவாகச் சொன்னேன். கருணாநிதியை மேடையில் வைத்துக் கொண்டே அவர் முன்னிலையில் விஜய்காந்த்தை நடிகர் வடிவேலு கடுமையாக விமர்சித்தார். அப்படிப்பட்ட திமுகவுடன் ஏதோ காரணங்களுக்காக இன்று தேமுதிக கூட்டணி அமைத்திருக்கிறீர்கள். அது உங்கள் சொந்த விஷயம். அதற்குள் நான் செல்லவில்லை" என்றார்.

## 'பெண்மணி சொன்னதில் அர்த்தங்கள் ஆயிரம்' - புதிர் போட்ட செல்வப்பெருந்தகை



என்னைத் தொலைக்காட்சியில் மட்டுமே பார்க்க முடிகிறது என ஒரு பெண்மணி ஆதங்கப்பட்டார். அதில் ஆயிரம் அர்த்தங்கள் இருந்தன என்று தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ஸ்ரீபெரும்புதூரில் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: முன்பெல்லாம் தொகுதி மக்களுடன் நேரடியாகக் கலந்து பழகினேன். தற்போது மாநிலத் தலைவர் பொறுப்பில் இருப்பதால், என்னைத் தொலைக்காட்சியில் மட்டுமே பார்க்க முடிகிறது என ஒரு பெண்மணி ஆதங்கப்பட்டார். அதில் ஆயிரம் அர்த்தங்கள் இருந்தன. தொகுதி மக்களின் பிள்ளையாக இருந்த என்னை, காங்கிரஸ் தலைமை இன்று தமிழகத்தின் பிள்ளையாக மாற்றி 234 தொகுதிகளிலும் பணியாற்றும் பொறுப்பை வழங்கியுள்ளது.


இருப்பினும், எனது தொகுதி மக்கள் விரும்பினால் இந்தத் தலைவர் பதவியைத் துறந்துவிட்டு, ஸ்ரீபெரும்புதூர் தொகுதி மக்களுடனேயே ஒரு சாதாரணக் குடிமகனாக வாழ நான் தயாராக இருக்கிறேன். ராகுல் காந்தி வரும் ஏப்ரல் 6-ம் தேதி சென்னை வழியாகப் புதுச்சேரிக்குச் சென்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்கிறார். அதனைத் தொடர்ந்து, ஏப்ரல் 9-ம் தேதி தமிழகத்திற்கு அவரை வரவழைப்பதற்கான திட்டமிடல்கள் நடைபெற்று வருகின்றன.

இது குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## அதிமுகவை தங்கள் அணியில் பாஜக சேர்த்திருப்பது ஏன்? - டி.ராஜா விளக்கம்

தமிழக அரசியலில் தனக்கென்று ஒரு இடத்தை பெற்றுக் கொள்ள வேண்டும் என்று பாஜக போராடுகிறது. அதற்காக அதிமுக உள்ளிட்ட சில கட்சிகளை தன் பக்கம் அணி சேர்த்திருக்கிறது என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய பொதுச் செயலாளர் டி.ராஜா தெரிவித்துள்ளார்.



இதுதொடர்பாக சென்னையில், செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: தமிழகத்தில் நடைபெற உள்ள சட்டப்பேரவை தேர்தல் தமிழக வரலாற்றில் மிக முக்கியமான ஒன்றாகும். தேர்தலுக்காக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அமைக்கப்பட்டிருக்கும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி, வெறும் தேர்தல் கூட்டணி அல்ல. தமிழகத்தின் நலன், வளர்ச்சி, சமத்துவம் மற்றும் சமூக நீதியைக் காக்கும் கொள்கைக் கூட்டணியாகும். இந்த அணியின் வெற்றிக்காக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி முழுமையாகப் பணியாற்றி வருகிறது.

அதேநேரம் தமிழகத்தில் எப்படியாவது காலூன்றிவிட வேண்டும், தமிழக அரசியலில்தனக்கென்று ஒரு இடத்தை பெற்றுக் கொள்ள வேண்டும் என்று பாஜக போராடுகிறது. அதற்காக அதிமுக உள்ளிட்ட சில கட்சிகளை தன் பக்கம் அணி சேர்த்திருக்கிறது. எந்த அணி தமிழகத்தின் நலனுக்கு ஏற்றது? என்பதை மக்கள் யோசிக்க வேண்டும். பாஜக தமிழத்தில் காலூன்ற கூடாது.

பாஜகவோடு அதிமுக அணி சேர்ந்தாலும் சரி, வேறு எந்த கட்சி அணி சேர்ந்தாலும் சரி அவர்களும் இந்த தேர்தலில் வீழ்த்தப்பட வேண்டும். தமிழக நலன் காக்க, திமுக கூட்டணியை மக்கள் ஆதரிக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## "திமுக தேர்தல் அறிக்கை ஹீரோ அல்ல ஜீரோ; ஹீரோயின் இல்லை ஹெராயின்" - நயினார் கடும் தாக்கு

திமுகவினர் தங்கள் தேர்தல் அறிக்கையை ஹீரோ தேர்தல் அறிக்கை என்றும், ஹீரோயின் தேர்தல் அறிக்கை என்றும் சொல்கிறார்கள். ஆனால், அதை ஒரு ஜீரோ தேர்தல் அறிக்கையாகவும், ஹெராயின் தேர்தல் அறிக்கையாகவும்தான் பார்க்கிறேன் என தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் கடுமையாகத் தாக்கியுள்ளார்.

பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் திருநெல்வேலியில் நேற்று செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

பாஜகவின் தேர்தல் அறிக்கை இன்னும் இரண்டு தினங்களில் வெளியாகும். திமுக கூட்டணியில் பெரும் சலசலப்பு நிலவி வருகிறது. காங்கிரஸ் கட்சி அந்த கூட்டணியில் சேர்ந்ததே பெரிய போராட்டமாகத்தான் இருந்தது.

மாணிக்கம் தாகூர், மூத்த தலைவர்கள் என திமுக கூட்டணி தொடர்பாக காங்கிரஸில் பெரும் கருத்து வேறுபாடுகள் உள்ளன. அதேபோல், விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் தான் போட்டியிடுவதாக அறிவித்த தொகுதியில் தற்போது போட்டியிடவில்லை என்று கூறியிருப்பது அவர்களின் கூட்டணியில் நிலவும் சலசலப்பை காட்டுகிறது.

திமுகவினர் தங்கள் தேர்தல் அறிக்கையை ஹீரோ தேர்தல் அறிக்கை என்றும், ஹீரோயின் தேர்தல் அறிக்கை என்றும் சொல்கிறார்கள். ஆனால், அதை ஒரு ஜீரோ தேர்தல் அறிக்கையாகவும், ஹெராயின் தேர்தல் அறிக்கையாகவும்தான் பார்க்கிறேன். தமிழகம் முழுவதும் கஞ்சா மற்றும் போதைப் பொருட்கள் புழக்கத்தை உருவாக்கியது திமுக. சொத்துவரி, மின்கட்டணத்தை திமுக ஆட்சியில் உயர்த்தினர். மாதம் ஒருமுறை மின் கட்டணம் வசூலிப்போம் என்ற வாக்குறுதியை நிறைவேற்றாமல் மக்களை ஏமாற்றிவிட்டார்கள்.

பிரதமர் நரேந்திர மோடி விரைவில் கன்னியாகுமரி மற்றும் கோவைக்கு வருகை தர உள்ளார். நடிகர் விஜய்க்கு கூடும் கூட்டத்துக்கும் ஓட்டுக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. அவர் ஒரு சினிமா நடிகர், அவ்வளவு தான். தேர்தல் முடிந்த பிறகு

## ரூ.50 ஆயிரம் செலுத்திய 60 பேருக்கு திருப்பி தர மாட்டோம்: தேர்தலில் போட்டியிடாத மநீம விளக்கம்

விருப்ப மனு கட்டணம் ரூ.50 ஆயிரம் திருப்பித் தரக்கூடியது அல்ல. 60 பேர் கட்டிய விருப்பமனு தொகை கட்சி நிதிக்கு சென்று விட்டது என்று மக்கள் நீதி மய்யம் நிர்வாகிகள் விளக்கம் அளித்தனர்.




தேர்தலில் போட்டியிட விரும்பும் தொண்டர்கள் மற்றும் நிர்வாகிகளிடம் கட்சி சார்பில் விருப்ப மனு கட்டணம் பெறப்படுவது வழக்கம். அந்த வகையில், திமுக கூட்டணியில் இடம்பெற்றுள்ள கமல்ஹாசன் தலைமையிலான மக்கள் நீதி மய்யம் கட்சி சார்பில் விருப்ப மனு கட்டணம் ரூ.50 ஆயிரம் என நிர்ணயிக்கப்பட்டிருந்தது. தேர்தலில் போட்டியிட வாய்ப்பு கிடைக்கும் என்று கருதி மநீம தொண்டர்கள், நிர்வாகிகள் 60 பேர் விருப்ப மனு கட்டணம் செலுத்தினர்.

ஆனால், திமுக தொகுதி பங்கீட்டுக் குழுவுடன் 3 சுற்று பேச்சுவார்த்தை முடிவடைந்த நிலையில் கட்சியின் சொந்த சின்னத்தில் போட்டியிட வாய்ப்பு கிடைக்காததால் தேர்தலில் கட்சி போட்டியிடவில்லை என்று மநீம தலைவர் கமல்ஹாசன் அறிவித்தார்.

இதனால், தேர்தலில் போட்டியிடலாம் என்று விருப்ப மனு கட்டணம் செலுத்திய கட்சி நிர்வாகிகளும் தொண்டர்களும் அதிர்ச்சி அடைந்தனர். இந்த சூழலில், மநீம தேர்தலில் போட்டியிடாததால் விருப்ப மனு கட்டணத்தை திருப்பித்தர வேண்டும் என்று கட்டணத்தை செலுத்திய நிர்வாகிகள் கோரிக்கை வைத்துள்ளதாக சமூக ஊடகங்களில் செய்திகள் வெளியாயின. இதுதொடர்பாக மநீம நிர்வாகிகளிடம் கேட்டபோது, "விருப்ப மனு கட்டணம் என்பது திருப்பித்தரக்கூடிய கட்டணம் அல்ல (NON--REFUNDABLE) என்பதும் அந்த கட்டணம் கட்சி நிதியாக கருதப்படும் என்பதும் அனைவருக்கும் நன்கு தெரியும்.

அந்த வகையில், தேர்தலில் கட்சி சார்பில் போட்டியிட 60 பேர் விருப்ப மனு கட்டணம் செலுத்தியிருந்தனர். அந்த கட்டணம் கட்சி நிதிக்கு சென்றுவிட்டது. விருப்ப மனு கட்டணம் செலுத்திய எந்த தொண்டரும், நிர்வாகியும் அதை திரும்ப தருமாறு கட்சி தலைமையிடம் எந்த கோரிக்கையும் வைக்கவில்லை. ஆனால், எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்கள் திட்டமிட்டு இதுதொடர்பாக தவறான தகவல்களை பரப்புகிறார்கள்" என்று விளக்கம் அளித்தனர்.

## சென்னையின் பல்வேறு பகுதிகளில் கனமழை - வெப்பம் தணிந்ததால் மக்கள் மகிழ்ச்சி

**சென்னை, ஏப்.7:**

சென்னையில்கடந்தசிலநாட்களாகவே வெயில் வறுத்தெடுத்து வருகிறது. அக்னி வெயில் தொடங்குவதற்கு முன்பே சூரியன் ருத்ர தாண்டவம் ஆடுகிறதே என்று பலரும் சொல்வதை கேட்க முடிகிறது. வெயிலுக்கு ஆறுதல் அளிக்கும் வகையில் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் இன்று (திங்கட்கிழமை) முதல் 11-ந்தேதி வரை மழைக்கு வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்து இருந்தது.

இந்த நிலையில், சென்னையின் பல்வேறு பகுதிகளில் கனமழை பெய்து வருகிறது. சென்னை சென்டிரல், எழும்பூர், நுங்கம்பாக்கம், கோடம்பாக்கம், கிண்டி, புரசைவாக்கம், கோயம்பேடு, தாம்பரம், குரோம்பேட்டை, பல்லாவரம், வடபழனி, ஈக்காட்டுதாங்கல், ஆவடி, அம்பத்தூர், சைதாப்பேட்டை, அண்ணா நகர், மயிலாப்பூர், அடையாறு உள்ளிட்ட பகுதிகளில் இடியுடன் கூடிய கனமழை பெய்து வருகிறது. காலையில் இருந்து கருமேகங்கள் சூழ்ந்திருந்த நிலையில், பல்வேறு இடங்களில் மழை பெய்து வருகிறது. இதனால் கோடை வெப்பம் தணிந்து குளிர்ச்சியான சூழல் நிலவியுள்ளது. இந்த திடீர் மழையால் மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## விஜய் பிரசாரம் ரத்து: காவல் அதிகாரிகள் மீது ஆதவ் அர்ஜுனா குற்றச்சாட்டு

சென்னையில் போட்டியிடும் த.வெ.க. வேட்பாளர்களை ஆதரித்து அக்கட்சியின் தலைவர் விஜய் (திங்கட்கிழமை) பிரசாரம் செய்வதாக இருந்தது. வில்லிவாக்கம், அண்ணாநகர், விருகம்பாக்கம், தியாகராயநகர் ஆகிய தொகுதியில் பிரசாரம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதற்காக தேர்தல் அதிகாரிகள் மற்றும் போலீசாரிடம் அனுமதி கோரி விண்ணப்பித்து இருந்தனர்.

விஜய் பிரசாரத்திற்கு நேற்று முன்தினம் இரவு போலீசார் அனுமதி வழங்கினர். இதில் வில்லிவாக்கம் தொகுதியில் பகல் 12 மணி முதல் மதியம் 1 மணிக்குள் பிரசாரம் செய்து முடிக்கவும், தியாகராயநகர் தொகுதியில் மதியம் 2 மணி முதல் 3 மணிக்குள் பிரசாரம் செய்யவும் அனுமதி வழங்கப்பட்டதாக கூறப்படுகிறது. இந்த அனுமதிக்கப்பட்ட நேரத்தில் விஜய் பிரசாரம் செய்து முடிக்க போதுமானதாக இருக்காது என்பதால் பிரசாரம் ரத்து செய்யப்பட்டது. இந்த நிலையில், தவெக தேர்தல் பிரசார மேலாண்மை பொதுச்செயலாளர் ஆதவ் அர்ஜுனா இன்று செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:- சென்னை காவல் ஆணையர் மாற்றப்பட்டால் தான் தேர்தல் ஜனநாயகமாக நடக்கும். தி.நகரில் எங்கள் தலைவர் விஜய் 2 மணி முதல் 6 மணி வரை பிரச்சாரம் செய்ய முதலில் அனுமதி அளித்தனர் . சில மணி நேரங்களிலேயே 1 மணி நேரம் தான் பிரச்சாரம் செய்ய வேண்டும் என கூறுகின்றனர். விஜய் பிரச்சாரம் செய்யக்கூடாது என்ற நோக்கத்தோடு காவல் அதிகாரிகள் செயல்படுகின்றனர். விஜய் பரப்புரைக்கு அனுமதி மறுத்த விவகாரத்தில் சென்னை காவல் ஆணையர் உள்ளார் என்றார்.

## திருப்பதியில் இந்த ஆண்டு பௌர்ணமி கருட சேவை நடைபெறும் நாட்கள்

**சுவாமிமலை, ஏப்.7:**



திருப்பதி ஏழுமலையான் கோவிலில் நடைபெறும் உற்சவங்களின்போது நடைபெறும் வாகன சேவைகளில் கருட வாகன சேவை மிகவும் முக்கியமானது. தங்க கருட வாகனத்தில் மலையப்ப சுவாமி எழுந்தருளி, கோவிலின் நான்கு மாட வீதிகளில் வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலிப்பார். இதேபோன்று ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி அன்று கருட சேவை நடைபெறும்.

கருட சேவையில் பெருமாளை தரிசனம் செய்து வேண்டிக்கொண்டால், அந்த வேண்டுதல்கள் நிறைவேறும் என்பது ஐதீகம். கருட சேவை அன்று பெருமாளிடம் பக்தர்கள் முன்வைக்கும் கோரிக்கைகள் அல்லது வேண்டுதல்களை பெருமாளை சுமந்து செல்லும்போது கருடன், பெருமாளிடம் கூறுவார் என்பது நம்பிக்கை. எனவே, கருட வாகன சேவையையும் காண பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் திருமலையில் கூடுவார்கள்.

அவ்வகையில், 2026ஆம் ஆண்டுக்கான பௌர்ணமி கருட சேவைகள் குறித்த விவரங்களை திருமலை திருப்பதி தேவஸ்தானம் அறிவித்துள்ளது.

2026ஆம் ஆண்டு கருட சேவை நடைபெறும் தேதிகள்:

*மே 1 (வெள்ளிக்கிழமை).

*மே 31 (ஞாயிற்றுக்கிழமை).

*ஜூன் 29 (திங்கட்கிழமை).

*ஜூலை 29 (புதன்கிழமை).

* ஆகஸ்ட் 28 (வெள்ளிக்கிழமை).

* செப்டம்பர் 26 (சனிக்கிழமை). * அக்டோபர் 26 (திங்கட்கிழமை).

## தென்திருப்பேரை மகர நெடுங்குழைக்காதர் கோவிலில் கருட சேவை

**தென்திருப்பேரை, ஏப்.7:**



தூத்துக்குடி மாவட்டம், ஏரல் வட்டம், தென்திருப்பேரையிலுள்ள மகர நெடுங்குழைக்காதர் கோவிலில் பங்குனி திருவிழா கடந்த 1ம் தேதி காலையில் கொடியேற்றத்துடன் தொடங்கியது. தினமும் அதிகாலையில் நடை திறக்கப்பட்டு சிறப்பு பூஜைகள் நடைபெற்று வருகின்றன. விழா நாட்களில் காலையிலும் மாலையிலும் சுவாமி அம்பாளுடன் வீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார்.

5ம் நாள் திருவிழாவான நேற்று இரவு கருடசேவை நிகழ்ச்சி நடைபெற்றது. காலை 6 மணிக்கு விஸ்வரூபம். 7.30 மணிக்கு நித்தியல், 7.45 மணிக்கு தோளுக்கினியானில் மாடவீதி, ரதவீதி புறப்பாடு நடைபெற்றது.

மாலை 4 மணிக்கு நாலாயிர திவ்வியப் பிரபந்தம், சாத்துமுறை தீர்த்தம், சடாரி, பிரசாதம் பக்தர்களுக்கு வழங்கப்பட்டது. மாலை 5.30 மணிக்கு சாயரட்சை நடைபெற்றது.

இரவில் உற்சவர் நிகரில் முகில் வண்ணன் கருட வாகனத்திலும் தாயார் திருப்பேரை நாச்சியார் அன்ன வாகனத்திலும் எழுந்தருளினர். பின்னர் இரவு 9.50 மணிக்கு வாகன சேவை நடைபெற்றது. அலங்கரிக்கப்பட்ட வாகனங்களில் வீதியுலா வந்த சுவாமி மற்றும் தாயாரை ஏராளமான பக்தர்கள் தரிசனம் செய்தனர்.

ஏப்ரல் 8ம் தேதி மாலை 4 மணிக்கு குதிரை வாகனத்தில் உற்சவர் நிகரில் முகில் வண்ணன் எழுந்தருளி புறையூர் ஆணையப்ப பிள்ளை சத்திரம் வீதி புறப்பாடு நடக்கிறது. 9ம் தேதி காலை 8.55 மணிக்குள் தேரோட்டமும், 20ம் தேதி காலை 8 மணிக்கு தாமிரபரணி ஆற்றில் தீர்த்தவாரியும் நடைபெறுகிறது.

## பரமத்திவேலூர்: விநாயகர் கோவில்களில் சங்கடஹர சதுர்த்தி சிறப்பு வழிபாடு

**பரமத்தி வேலூர், ஏப்.7:**



சங்கடஹர சதுர்த்தியை முன்னிட்டு கோவில்களில் விநாயகப் பெருமானுக்கு சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. அன்றைய தினம் விநாயகர் கோவில்களில் பக்தர்கள் திரளாக கலந்துகொண்டு விநாயகரை தரிசனம் செய்தனர்.

அவ்வகையில் நாமக்கல் மாவட்டம், பரமத்திவேலூர் பேட்டையில் உள்ள பஞ்சமுக ஹேரம்ப விநாயகர், கோப்பணம்பாளையம் பரமேஸ்வரர் ஆலயத்தில் உள்ள விநாயகப் பெருமானுக்கு சங்கடஹர சதுர்த்தியை முன்னிட்டு பால், தயிர், பன்னீர், இளநீர், சந்தனம், மஞ்சள், திருமஞ்சனம், பஞ்சாமிர்தம் உள்ளிட்ட 18 வகையான திரவியங்களால் அபிஷேகம் நடைபெற்றது.

அதனை தொடர்ந்து மலர்களால் அலங்காரம் செய்யப்பட்டு தீபாராதனை காட்டப்பட்டது. பின்னர் சிறப்பு அலங்காரத்தில் விநாயகப் பெருமான் பக்தர்களுக்கு காட்சியளித்தார். இதில் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு விநாயகப் பெருமானை தரிசனம் செய்தனர். பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது.

அதேபோல் பொத்தனூர், வெங்கமேடு வல்லப கணபதி கோவில், பரமத்திவேலூர் சக்திநகரில் உள்ள விநாயகர், பரமத்திவேலூர் காவிரி கரையில் அமைந்துள்ள சத்திரத்து விநாயகர், பொத்தனூர் மகா பகவதியம்மன் கோயிலில் உள்ள விநாயகர் மற்றும் பரமத்திவேலூர் சுற்றுவட்டாரப் பகுதிகளில் உள்ள விநாயகர் கோவில்களில் சங்கடஹர சதுர்த்தியை முன்னிட்டு சிறப்பு அபிஷேக ஆராதனைகளும், சிறப்பு அலங்காரமும், மகா தீபாராதனையும் நடைபெற்றது.

இதில் அந்தந்த பகுதிகளை சேர்ந்த பக்தர்கள் கலந்து கொண்டு விநாயகப் பெருமானை தரிசனம் செய்தனர். பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது.



வறுமை, நோய், அறியாமை மூன்றும் முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை பூமியில் இல்லாமல் ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528



## நலம் தரும் மருத்துவம்

## பெயருக்குதான் இது அரைக்கீரை; பலன் தருவதில் முழு கீரை!

அரைக்கீரைக்கு கிள்ளுக்கீரை என்ற பெயரும் உண்டு. மிகவும் எளிதாகக் கிடைக்கும் இந்தக் கீரையின் இலையை பொரித்தோ, கடைந்தோ சாதத்துடன் அப்படியே பிசைந்து உண்ணலாம். சத்து மிகுந்த தண்டுகள் கீரை வகையைச் சேர்ந்த அரை கீரைக்கு அபாரமான மருத்துவ குணங்கள் உண்டு. குழந்தை பெற்ற பெண்களுக்கு உடலில் சீதளம் எனும் குளிர்ச்சி ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இந்தக் கீரையை எந்த விதத்தில் சமைத்து உண்பதாலும் இதனைத் தடுக்கலாம். இந்த கீரை வாதம், கபம் முதலியவற்றை விலக்குவதுடன் ஆண்களுக்கு ஆண்மையை அதிகரிக்கும். சளியுடன் சேர்ந்த கப இருமலைப் போக்க உதவும்.

கீரையுடன் சாதாரணமாக சேர்க்கும் பருப்புடன் வெங்காயம், பூண்டு, பெருங்காயம், மிளகு மற்றும் சுக்கு போன்றவற்றை சேர்த்து கீரையை கடைந்து சாப்பிட குடைச்சல் தரும் வாயு கோளாறுகள், உடல் வலி, நடுக்கம் நீங்கும். குழந்தைகளுக்கு இக்கீரை உணவை ஊட்ட அவர்களின் உடல் நன்றாக வளரும். கீரையைத் தொடர்ந்து சாப்பிட்டு வர, ஜீரண சக்தி அதிகரிக்கும். உடலின் கெட்ட நீர் வெளியேறிவிடும். உடலானது பொலிவும், அழகும் சுறுசுறுப்பு பெறும்.

அரை கீரையில் கால்சியம், பாஸ்பரஸ், இரும்புச் சத்துக்கள் மிகுதியாக உள்ளது. இதனால் எலும்புகள் பலம் பெறுவதுடன், தலைமுடி அடர்ந்து கருகருவென்று வளரும். தலைமுடி மயிர் கால்களுக்கு பலம் சேர்க்க அரை கீரை விதையை நல்லெண்ணெய் சேர்த்து காய்ச்சி அவ்வப்போது தலைமுடியை மசாஜ் செய்ய தலை முடி வலுவாகும்.

அரைக்கீரையில் வைட்டமின் ஏ, சி, ஈ மற்றும் இரும்பு, கால்சியம், பொட்டாசியம் போன்றவை நிறைந்துள்ளது. இதில் ஆன்டி ஆக்ஸிடன்ட்கள், பைட்டோ நியூட்ரியண்ட்ஸ் மற்றும் டயட்டரி ஃபைபர் உள்ளது. இதில் வைட்டமின் கே உள்ளது. இது இதய ஆரோக்கியத்திற்கு முக்கியமானது. அரை கீரை இரத்த அழுத்தத்தை குறைக்க உதவும். இது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க உதவும் ஆன்டி ஆக்ஸிடன்ட்களையும் கொண்டுள்ளது.

அரைக்கீரையில் நார்ச்சத்து அதிகம் உள்ளது. இது மலச்சிக்கலை போக்கவும், இரைப்பை குடல் ஆரோக்கியத்தை பராமரிக்கவும் உதவும். இது வீக்கம் மற்றும் நாள்பட்ட நோய்களின் அபாயத்தைக் குறைக்க உதவும்.

அரை கீரை இலைகளை பேஸ்ட் செய்து, முன்கூட்டிய நரை மற்றும் முடி உதிர்வை தடுக்கலாம். புதிய அரை கீரை இலைகளின் சாறு முடி அமைப்பை பராமரிக்கவும், பொலிவு சேர்க்கவும் உதவும். இது அரிக்கும் சரும அழற்சி மற்றும் முகப்பரு போன்ற சருமப் பிரச்னைகளுக்கு ஒரு துவையலாக பயன்படுத்தலாம்.

## டைனோசர் தோலால் செய்யப்பட்ட உலகின் முதல் ஹேண்ட்பேக்... விலையோ...!



கோடிக்கணக்கான வருடங்களுக்கு முன்பே உலகை விட்டு முற்றிலுமாக அழிந்துபோன டைனோசர்களை நாம் திரைப்படங்களில் மட்டுமே பிரம்மாண்டமாகப் பார்த்திருப்போம். ஆனால் அந்த டைனோசரின் தோலில் செய்யப்பட்ட ஒரு கைப்பையை நீங்கள் நேரில் பார்த்தால் எப்படி இருக்கும்?

இதுகேட்பதற்குஹாலிவுட் சினிமா கதை போல இருந்தாலும் அறிவியலின் அபார வளர்ச்சியால் இப்போது நிஜமாகவே நடந்துள்ளது. விலங்குகளைக் கொல்லாமல் சுற்றுச்சூழல் பாதுகாப்பை மேம்படுத்தும் ஒரு புதிய முயற்சியாகவே உலக நாடுகள் இதைப் பார்க்கின்றன. ஆய்வகத்தில் உருவாக்கப்பட்ட டி-ரெக்ஸ் (T-REX) டைனோசரின் கொலாஜனை வைத்து உலகின் முதல் லெதர் ஹேண்ட்பேக்கை விஞ்ஞானிகள் தற்போது வெற்றிகரமாக உருவாக்கியுள்ளனர்.

ஆய்வகத்தில் உருவான டைனோசர் தோல்!

பல கோடி ஆண்டுகள் பழமையான ஒரு உயிரினத்தின் தோலை உருவாக்குவது என்பது சாதாரண காரியம் கிடையாது. பல வருடங்களாக மண்ணுக்குள் புதைந்துகிடந்த டி-ரெக்ஸ் டைனோசரின் தொல்லுயிர் எச்சங்களில் இருந்து சில குறிப்பிட்ட புரதத் துணுக்குகளை ஆராய்ச்சியாளர்கள் தனியாகப் பிரித்தெடுத்தனர்.

பிறகு அதை வேறொரு விலங்கின் செல்களுக்குள் செலுத்தி, அதன் மூலம் ஆய்வகத்திலேயே கொலாஜனை வளர்த்து இந்த லெதரை உருவாக்கியுள்ளார்கள். இதற்குப் பின்னால் ஏராளமான தொழில்நுட்பச் சவால்கள் இருந்ததாகக் கூறுகிறார்கள். இவர்கள் ஏற்கனவே பல வருடங்களுக்கு முன் அழிந்துபோன மாமூத் யானையின் மரபணுவை வைத்து ஒரு மீட்பால் தயாரித்து உலகையே அதிர வைத்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

விலை என்ன தெரியுமா?

பார்க்கவே கவர்ச்சியாக இருக்கும் இந்த நீல நிற கைப்பை, நெதர்லாந்து நாட்டின் ஆம்ஸ்டர்டாம் நகரில் உள்ள ஆர்ட் ஜூ மியூசியத்தில் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. அங்கு ஒரு பிரம்மாண்டமான டி-ரெக்ஸ் டைனோசர் எலும்புக்கூட்டின் கீழே 2026, மே 11-ம் தேதி வரை இதை நீங்கள் நேரில் சென்று ரசிக்கலாம்.


கண்காட்சி முடிந்த பிறகு இந்த பை ஏலத்திற்கு வரவுள்ளது. இதன் ஆரம்ப விலையே சுமார் அரை மில்லியன் டாலர்கள், அதாவது இந்திய மதிப்பில் பல கோடி ரூபாய்க்கு மேல் இருக்கும் என அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. பணக்காரர்கள் பலரும் இந்த அரிய பொருளை வாங்க இப்போது முதலே பெரிய அளவில் போட்டி போட ஆரம்பித்துவிட்டார்கள்.

ஆய்வாளர்களின் விமர்சனம்!: து ஒரு பக்கம் பெரிய சாதனையாகப் பார்க்கப்பட்டாலும், மற்றொரு பக்கம் பல அறிவியலாளர்கள் இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். பழங்கால எலும்புகளில் மிஞ்சியிருக்கும் வெறும் சிதைந்த புரதங்களை வைத்துக்கொண்டு உண்மையான டைனோசர் தோலை நூறு சதவீதம் அப்படியே உருவாக்க முடியாது என நெதர்லாந்தை சேர்ந்த தொல்லுயிர் ஆய்வாளர் ஆணித்தரமாகக் கூறுகிறார்.

அதேபோல, விலங்குகளின் உண்மையான தோலில் இருக்கும் நரம்பு மற்றும் நார்களின் அமைப்பு இந்த ஆய்வக தோலில் சுத்தமாக கிடையாது என மற்றொரு நிபுணரும் தனது விமர்சனத்தை முன்வைத்துள்ளார். இது வெறும் புரதங்களின் கலவை மட்டுமே தவிர, இதை உண்மையான தோல் என்று ஏற்றுக்கொள்ள முடியாது என்பதே பலரின் வாதமாக உள்ளது.

இதுவரை மனித வரலாற்றில் டைனோசரின் பொருளை உருவாக்குவதில் யாரும் இந்த அளவுக்கு நெருக்கமாகச் சென்றதில்லை என்பது இதை உருவாக்கியவர்களின் அசைக்க முடியாத நம்பிக்கை. எது எப்படி இருந்தாலும், மிருகங்களை வேட்டையாடி தோலை உரிப்பதற்குப் பதிலாக, இப்படி ஆய்வகத்தில் லெதரை உருவாக்குவது எதிர்கால அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்திற்கு ஒரு மிகப்பெரிய மைல்கல் என்பதில் எந்த ஒரு சந்தேகமும் கிடையாது.

# "மூடிய லஞ்சம்"




"சார்... சின்ன உதவிதான்..." ஃபைலுடன் ஒரு கவரும் மேசை மீது மேல் நழுவியது.

அரசு அலுவலகம். "கர...கர" சத்தத்துடன் சுழலும் விசிறி. அதன் கீழே அமர்ந்திருந்த அதிகாரி மணியம், அந்தக் கவரை "வேண்டாம்" என்பது போல் தள்ளினார்.

"ஃபைலை மட்டும் வைங்க." எதிரிலிருந்தவர் சிரித்தார். 'சார்... இது வழக்கமான முறைதான்... இது இல்லேன்னா ஃபைல் நகராது" மணியம் மூக்குக் கண்ணாடியை சரி செய்தபடி, "இந்த ஃபைல் நகரக் கூடாது." அந்த மனிதன் முகம் மாறினான்.

"சார்... இது ஒரு கன்ஸ்ட்ரக்ஷன் ப்ராஜெக்ட்... மத்த எல்லா அப்ரூவல்ஸூம் ரெடி" மணியம் ஃபைலைத் திறந்தார். சில விநாடிகள் பார்த்தார். பின் ஒரு வரி மட்டும் எழுதினார். "ரிஜக்ட்டட்" "சார்! இதுல எவ்வளவு இன்வெஸ்ட்மெண்ட் பண்ணியிருக்கோம் தெரியுமா?" அவன் கத்தினான்.

"இந்த கட்டிடம் கட்டினாலும் நிச்சயம்நாளைக்கு விழும்." என்றார் மணியம்."அது தெரியும் சார்... எல்லாரும் கையெழுத்துப் போட்டுட்டாங்க... நீங்க மட்டும் நேர்மையா இருந்தா என்ன கிடைக்கும்?" மணியம் சொன்னார், "ஒரு கட்டிடம் விழும் போது... அங்க கான்கிரீட் மட்டும் விழாது பல உயிர்களும் விழும்." அவன் கோபமாய் வெளியேறினான்.

"பார்ப்போம் சார்... எவ்வளவு நாள் இப்படி இருக்க முடியும்!னு" மாதங்கள் கழிந்தன. தொலைக்காட்சியில் செய்தி. "புதிய ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் திறப்பு விழா நாளிலேயே இடிந்து விழுந்தது! பலர் பலி..." அந்தக் கட்டிடம் மணியம் மறுத்த கட்டிடம். ஆனால், ... மற்றொரு அதிகாரி கையொப்பம் இட்டிருக்கிறார்.

அடுத்த நாள்...மணியம் அலுவலகம் வந்தார்... அதே மேசை....அதே விசிறி. ஒரு புதிய ஃபைல். அதிலும் ஒரு கவர். அவர் அதைத் திறக்காமலே தள்ளி விட்டார். அவரது உதவியாளன் கேட்டான், "சார்... அன்னிக்கு அந்த ஃபைலை ரிஜெக்ட் பண்ணினது சரிதானே சார்?" "நான் ரிஜெக்ட் பண்ணினது... ஒரு ஃபைலை இல்லை.. ஒரு பெரும் விபத்தை...!.. லஞ்சத்தை மறுத்தால் பல உயிர்கள் காப்பாற்றப்படும்!"



-முகில் தினகரன்
கோயமுத்தூர்.

# கோகிலாவின் மறுமணம்



பிரிவின் வருத்தம் முகத்தில் தெரிந்தது. மனதில் வலியை வெளிப்படுத்த முடியாமல் வாழ்ந்து வந்தான் எழிலன். வாரத்திற்கு ஒருமுறை கிராமத்தில் வசிக்கும் அம்மா அப்பாவைப் பார்த்து நலம் விசாரித்துவிட்டு வருவான் ஆச்சரியமாய் அவளிடமிருந்து குறுஞ்செய்தி எழிலனின் கைப்பேசிக்கு வந்தது. 'உங்களை அவசியம் சந்திக்கவேண்டும். நாம் முதன்முதலில் சந்தித்த இடத்தில் உங்களுக்காகக் காத்துக்கொண்டிருப்பேன்' அனைத்தும் கனவுபோலவே நொடியில் நடந்து முடிந்தது. சிரிப்பு, நட்பு, பழக்கம், சந்திப்பு, விசாரிப்பு, திருமணம், குழந்தைகள், கருத்துவேறுபாடு, சலசலப்பு, குடும்பநல நீதிமன்றம் படிகளை ஏறிப் பரிதவித்தது, இவை அனைத்தும் அவன் மனதில் கடல்அலை போல் வந்துசென்றது.

கோகிலாவிடமிருந்து வந்த குறுஞ்செய்தியை எழிலனால் நம்ப முடியவில்லை. 'கண்டிப்பாகத் திங்கள் அன்று காலை 10 மணிக்குTH தங்களை சந்திக்கிறேன்' என்ற பதிலைப் படித்த கோகிலாவின் வாடிய முகத்தில் மகிழ்ச்சி படர்ந்தது. புரிதலற்ற உரிமையை வலியுறுத்தியதின் விளைவே பிரிவுக்குக் காரணம் என்பதை நன்றாக உணர்ந்தாள் கோகிலா. எப்படியாவது புதுவாழ்வை துவக்கி விட வேண்டும் என்ற ஆசையில் எடுத்த முயற்சிதான் குறுஞ்செய்தியில் அழைப்பு விடுத்தது.

இரவு 10 மணி தூக்கம் இல்லை கோகிலாவுக்கு. எங்குத் தொடங்கியது, எப்படி வளர்ந்தது, எப்பொழுது முடிந்தது என்று எதையும் அவளால் நினைவுக்குகொண்டு வரமுடியவில்லை.'இது என்னுடைய தனிப்பட்ட விஷயம். இதுல நீங்கத் தலையிடாதீங்க' என்று கோபமானச் சொற்கள்தான் பிரிவுக்குக் காரணமாக இருக்கலாமெனக் கோகிலா நினைத்தாள்.

பழைய நினைவுகள் கோகிலாவின் மனதை கலவரப்படுத்தியது.'நான் உன்னைக் கட்டுப்படுத்துவது அன்பின் வெளிப்பாடு.'என்றான் எழிலன். 'இல்லை என்னை அடிமைப்படுத்தி அடக்கியாள வேண்டும் என்ற ஆணாதிக்க புத்தி' என்றாள் கோகிலா. 'இது வேண்டாம் தேவை இல்லை' என்பது பாசத்தின் உச்சம் என்றான். 'இல்லை பயத்தின் வெளிப்பாடு என்றாள்' கோகிலா. இருவருக்கும் நடந்த சண்டையில் புரிதலற்றவர்களாய் மௌனமாய் வேடிக்கை பார்த்தன குழந்தைகள். சண்டை தினமும் நடந்தது. இருவரும் ஒரு முடிவுக்கு வந்தனர். குடும்ப நீதிமன்றத்தில் சோகமான முகத்தோடு எழிலன் 'எங்கே பிழை என்று எனக்கு இன்னும் தெரியவில்லை. உன் பிரிவு வலியைத் தருகிறது' என வருத்தமாகச் சொல்லிவிட்டு நடந்த எழிலனின் முகம் கோகிலாவின் கண்ணுக்குள் காட்சியாய் தோன்றி மறைந்தது.

மறுநாள் காலை 10 மணி. பழமுதிர்ச்சோலை தேநீர் கடையில் தனி அறையில் கோகிலா எழிலனுக்காகக் காத்துக்கொண்டிருந்தாள். பத்து வருடங்களுக்கு முன்பு உடுத்தியிருந்த அதே கருப்பு வெள்ளை ஆடையில். முகத்தில் வழிக்காத தாடியுடன் உள்ளே நுழைந்தான் களைத்து கலையிழந்திருந்தாள் கோகிலா. நாற்காலியில் உட்கார்ந்தவன்'என்ன சாப்பிடலாம் என்றான்' பதில் இல்லை. ' இரண்டு டீ' எனத் திரும்பிச் சொல்லிவிட்டு கோகிலாவின் முகம் பார்த்தான். அமிதியாகக் கண்ணீர் சிந்தியபடி கீழேமுகம் பார்த்து உட்கார்ந்திருந்தாள். மேசையில் டீ வந்தது. ஒன்றை எடுத்தான். கோகிலா எழிலனின் கையை இறுக்கமாகப் பற்றித் தேம்பி அழுதாள். தன்னுடைய மறுகையை கோகிலாவின் கையில் வைத்து அமைதியாக அவளைப் பார்த்தபடியே உட்கார்ந்துதான். கோகிலா கைக்குட்டையால் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு மனதுக்குள் இருந்ததை ஏழிலனிடம் கொட்டித்தீர்த்தாள் ' அது ஒரு வயசு எனக்குப் புரியல. எனக்குள்ள இருந்த ஆசைய தவறான உரிமையா எடுத்துக்கிட்டு, உங்ககிட்ட அதிகமா வாதாடிட்டேன். உன் மனச காயப்படுத்திட்டேன். வெளிய வந்தபிறகுதான் தெரியுது இந்த உலகம் பக்குவபடாத உலகம். எதுவா இருந்தாலும் நீ என் கூட இருந்தாகனும். நான் உன்கூடதான் வாழனும். குழந்தைகள் நலனுக்காக நாம வாழ்ந்தாகனுமுன்னு புரிஞ்சுகிட்டேன். நீங்க எனக்கு வேணும்' என்று கோகிலா பேசி முடித்தவுடன், எழிலன் அமைதியானான் மறுநாள், எழிலன் - கோகிலா மறுமண அழைப்பிதழ் அச்சிடப்பட்டு,'வாழ்த்த வாருங்கள். இப்படிக்கு எழிலன் கோகிலாவின் அன்புச் செல்வங்கள்' என்று அனைவருக்கும் வழங்கப்பட்டது.

எளிய முறையில் எழிலனின் வீட்டு மொட்டைமாடியில் எழிலனுக்கும் கோகிலாவுக்கும் மறுமணம் நடந்து முடிந்தது. அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் வந்திருந்து வாழ்த்திவிட்டுச் சென்றனர். கோகிலாவின் குழந்தைகள் மகிழ்ச்சியில் திளைத்தனர்.

வாழ்த்தியதில் ஒருவர் 'என்னப்பா நீதிமன்றத்தின் மூலமா பிரிஞ்சாங்க, இப்ப ஒன்னா சேர்ந்திருக்காங்களே, எப்படிப்பா?' எனக் கேட்க, இன்னொருவர் சொன்னார் 'ஒருவர் சட்டபூர்வமாகப் பிரிவதற்குதான் நீதிமன்றத் தீர்ப்பு அவசியம். பிரிந்தவர் மனம்ஒத்து வாழ்வதற்கு நீதிமன்றம் வழிவிட வேண்டும் என்ற அவசியம் இல்லை" என்றார்.




- கயப்பக்கம்
இரா.இரமேஷ்

# அகத்தியனின் பயணம் 17



- கயப்பக்கம்
இரா.இரமேஷ்

## எளியோர்க்கு துணையாய் நில்"



வழக்கமாக காலை எட்டு மணிக்கு தொழிலாளர்கள் தங்கியிருக்கும் அறையினைப் பார்வையிட்டு செல்லும் காவலாளி, இன்று வழக்கத்துக்கு மாறாக மணி பத்துக்கு, தொழிலாளர் தங்கியிருக்கும் அறையை நோக்கி நடந்து வந்தார்.

அகத்தியன் தங்கியிருக்கும் அறையின் வெளியே உள்ள அழைப்பு மணியை அழுத்தினார். " சார் வணக்கம். உங்கக்கூட அஞ்சு நிமிஷம் பேசலாமா?. இப்பதான் நேரம் கிடைக்கும். அதுக்கு அப்புறம் நேரம் கிடைக்காது. உங்க பேர்ல உள்ள அக்கறையால சொல்றேன். உங்ககிட்ட பேசியே ஆகணும். பேசாம விட்டுட்டா, இதுக்கப்புறம் நல்ல சூழல் அமையாதுது. நேரம் ஒதுக்க முடியுமா சார்" என்றார் காவலாளி அழகுமாறன்.

சற்று தயக்கத்துடன் நின்றிருந்தான் அகத்தியன். சிறிது நேரத்திற்கு பிறகு, " வாங்க.." என்று கதவைத் திறந்து, அவரை உட்காரச் சொல்லிவிட்டு, உள்ளே சென்று " இந்தாங்க தண்ணி சாப்பிடுங்க" என கட்டிலில் உட்கார்ந்தான் அகத்தியன்.

சற்று மௌனமாக இருந்த அழகுமாறன், மெல்ல பேசத் தொடங்கினார். " சார் நான் உங்களுடைய வேலையையும், நீங்க மத்தவங்ககிட்ட பழகுற விதத்தையும், இங்கே இருக்கிற சூழலுக்குத் தகுந்தமாதிரி நடந்துக்கிற நல்ல பண்பும், உங்க மேல உள்ள மதிப்ப கூட்டியிருக்கு. எனக்கு மட்டும் இல்ல, நம்ம கம்பெனி அம்மாவோட பார்வையும் உங்க மேல திரும்பியிருக்கு. முதலாளியம்மாவோட அன்பிலும், உங்கமீது அவங்க வச்சிறுக்கிற மதிப்பிலும் சுயநலமும் இருக்கு." சிறிது நேரம் அமைதியாக இருந்துவிட்டு மீண்டும் பேசத் துவங்கினார். "ஆனா, அதுல ஒரு நியாயம் இருக்கு. அவங்க எதை செய்தாலும் சரியா செய்வாங்க. எனக்கு என்ன நடந்ததுன்னு தெரியாது. ஆனா உங்ககிட்ட சில கோரிக்கைய வச்சிருப்பாங்க. அதை மட்டும் ஏத்துகிட்டிங்கனா, உண்மையிலேயே உங்களுடைய வாழ்க்கை திருப்புகணையை இருக்கும். அவங்க வைக்கிற கோரிக்கைய மறுக்காம ஏத்துக்கங்க. எனக்காக ப்ளீஸ், முயற்சி பண்ணுங்க" என்று கையெழுத்து கும்பிட்டுவிட்டு எழுந்த அழகுமாறன், தனது கையில் வைத்திருந்த புத்தகத்தை அகத்தியனிடம் கொடுத்துவிட்டு வெளியே நடந்தார். அகத்தியன் எதுவும் பேசவில்லை. அமைதியாக நின்றிருந்தான். அவர் கொடுத்த புத்தகத்தின் மேல் அட்டையைப் பார்த்தான். எளியோர்க்குத் துணையாய் நில்" என்ற தலைப்பில், அட்டைப்படத்தைப் பார்த்தவுடன் கவர்ந்திருக்கும் தன்மையை பெற்றிருந்தது. இதை படித்தால் எப்படி இருக்கும் என நினைத்துக்கொண்டு நின்றிருந்தான் அகத்தியன்

புத்தகத்தினுள்ளே சில ஏடுகளைப் புரட்டி பார்வையிட்டு,புத்தகத்தை கட்டிலில் வைத்துவிட்டு வெளியே வந்து நின்றான். காவலாளி அழகுமாறன் சாலையில் நடந்துப் போய்க்கொண்டிருப்பதை பார்த்துக்கொண்டே இருந்தான் அகத்தியன்.

காவலாளி அழகுமாறன் நடந்துச் சென்றதும், கட்டிலில் உட்கார்ந்த அகத்தியன் ஒரு நிமிடம் படுத்து, கண்மூடி அமைதியாக இருந்தான். அகத்தியன் மனதிற்குள் எந்த குழப்பமும் இல்லை. தெளிவாக இருந்தான். வாழ்க்கையைப் பற்றியப் புரிதல் அகத்தியனுக்கு, காவலாளி அழகுமாறன் பேசிய பிறகு தெரிந்தது. மேலோட்டமான பார்வையில் இங்கு வாழ்கின்ற அனைத்து மனிதர்களும் நலமாக இருக்கிறார்கள் என்றும், மகிழ்ச்சியாக வாழ்கிறார்கள் என்றும் புரிந்து கொள்வதே தவறு என்று நினைத்துக் கொண்டான். ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் ஏதோ சொல்லப்படாத கதை ஒன்றை மனதிற்குள் மறைத்து வைத்திருக்கிறார்கள். அந்தக் கதையினைச் சொல்வதற்கானத் தருணங்களுக்காக அனைவருமே காத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை அகத்தியன் புரிந்துகொண்டான்.

வேலைக்காக இங்கு வந்ததும், வேலையில் சேர்ந்ததும், அதற்கு அடுத்தடுத்து நடந்த சிறு சிறு நிகழ்வுகளும், அதை அவன் சாதுரியமாக கையாண்ட முறையும், அவனுக்கு ஒரு புதிய படிப்பினை வழங்கியதாக நினைத்துக்கொண்டான். இருந்தும் இன்னும் நீடித்துக் கொண்டே இருக்கின்ற சிக்கல்களைப் எப்படி கையாள்வது என்று யோசித்துக் கொண்டிருந்தான்.

இங்கு வாழ்க்கை பணத்தை வைத்து தீர்மானிக்கப்படுவதில்லை. அதைத் தாண்டி ஏதோ ஒன்று ஒவ்வொருவருடைய வாழ்க்கையையும் தீர்மாணிக்கிறது என்பதை அவனால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

மற்றவருடையப் பலவீனங்களைத், தன் வாழ்க்கையோடு ஒப்பிட்டுப் பார்த்து ஆறுதல் அடைபவர்கள் இங்கு அதிகம். தனக்கும் கீழே உள்ளவர்களைப் பார்த்துத், தனக்கான வலி அளவில் சிறியதுதான் என்றும், தன் மனதை தேற்றிக்கொண்டு வாழ்பவர்கள்தான், கால வெள்ளத்தில் கரை சேர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இருந்தும் அவர்களுக்கு என்றாவது ஒரு நாள் நம் வாழ்க்கையின் சிக்கலை தீர்க்கக் கூடிய ஒரு சக்தி, நம் கண்முன் தோன்றி அதனைத் தீர்த்து வைக்காதா என்ற ஏக்கம் இருந்துகொண்டுதான் இருக்கிறது.

காவலாளி அழகுமாறனின் கோரிக்கை நியாயமானதுதான். அவர் முதலாளியின் மீது வைத்துள்ள அளவு கடந்த அன்பின் வெளிப்பாடாகக்கூட இருக்கலாம். முதலாளி அம்மாவின் கதை காவலாளிக்கு தெரிந்ததால் இந்த கோரிக்கையை அகத்தியன் இடத்தில் வைத்தார்.

அகத்தியனுக்குள் இருக்கின்ற கதை முதலாளிக்கும் காவலாளிக்கும் தெரியாமலே இருக்கிறது. அந்தக் கதையை யார் சொல்வது? எப்படி வெளிப்படுத்துவது? வெளிப்படுத்தக்கூடிய தருணங்களும், வாய்ப்புகளும் கிடைக்காமல் அகத்தியன் அமைதியாக வேலை செய்து கொண்டிருந்தான் இந்த நிறுவனத்தில்.

மெல்ல காலநிலைச் சூழல் மாறியது. வெளிச்சம் இருட்டுப் போர்வைக்குள் மறைத்துக்கொண்டது. இயற்கையைப் போல் ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையிலும் ஏற்ற இறக்கமும், வெப்பமும் குளிரும் தோன்றி மறைந்துகொண்டே வருகிறது. வானத்தில் நிலவின் தோற்றம் சிறுக சிறுக வெளிப்பட்டு கொண்டேயிருந்தது.

பலமுறை அகத்தியனை அலுவலக அறையில் சந்தித்து, தனது மனதில் உள்ள வலியை கொட்டிவிட முயற்சி செய்த முதலாளியம்மாவின் செயல்கள் தோல்வியையே கண்டுள்ளது. எப்படியாவது தனது கோரிக்கையை அகத்தியனிடம் சொல்ல முயன்றும் முடியாமல் போய்விட்டது. இன்று கடைசி வாய்ப்பாக சொல்வதென்று தீர்மானித்தாள் முதலாளியம்மா.

(தொடரும்)

# குபேரர் வழிபாடு..!!

அள்ள அள்ள குறையாத செல்வத்தை பெற... குபேரர் வழிபாடு..!!

செல்வத்தின் அதிபதியாக திகழும் குபேரனுக்கு பல்வேறு பெயர்கள் இருந்தாலும் அவரை நினைவூட்டுவது என்னவோ அவர் கையில் வைத்திருக்கும் பணம் தான். பணம், பொருள், நகைகள் போன்ற அத்தனை செல்வங்களையும் வாரி வழங்கக்கூடிய குபேர பகவானுக்கு உகந்த கிழமை வியாழக்கிழமை ஆகும்.

வெள்ளிக்கிழமையில் எப்படி மகாலட்சுமியை வேண்டி வழிபடுகிறோமோ, அதேபோல வியாழக்கிழமையில் குபேர வழிபாடு செய்வது சிறப்பு.

குபேரர் செல்வத்தின் கடவுள் என்பதால், அவரை வழிபடுவதன் மூலம் செல்வ வளம் பெருகும் என்பது நம்பிக்கை. வியாழக்கிழமையில் குபேரனை எவ்வாறு வழிபடலாம்?

வியாழக்கிழமையன்று காலை குளித்து முடித்து விட்டு, வீட்டை சுத்தம் செய்து, வாசலில் பச்சரிசி மாவில் கோலம் போட வேண்டும்.

வாசல் நிலைப்படிக்கு சந்தனம் தெளித்து, மஞ்சள் குங்குமம் வைக்க வேண்டும்.

பின்னர் வீட்டில் எப்போதும் விளக்கேற்றும் பூஜையறையில் குபேரர் படத்தை வைத்து, தாமரை மலர், சங்கு ஆகியவற்றை இருபுறமும் வைத்து விளக்கு ஏற்றி வழிபட வேண்டும்.

நெல்லி மரத்தில் மகாலட்சுமி வாசம் செய்வதாக ஐதீகம் உண்டு. எனவே குபேர பூஜையின் பொழுது கட்டாயம் நெல்லிக்கனியை வைத்து வழிபட வேண்டும் என்பது சிறப்பிற்குரியது.

பிறகு அவலுடன் சிறிதளவு பால் மற்றும் சர்க்கரை சேர்த்து நைவேத்தியமாக படைக்க வேண்டும். ஏனென்றால் குபேரருக்கு மிகவும் பிடித்த உணவு அவல் ஆகும்.

இப்படி செய்வதால் நமக்கு குபேரரின் அருள் கிடைத்து குடும்பத்தில் அனைத்து செல்வங்களும் கிடைக்கும் என்பது ஐதீகம்.

**குபேர விளக்கு பூஜை வழிபாடு :**

குபேரருக்கு உகந்த நாளான வியாழக்கிழமை அன்று இந்த விளக்கு பூஜையை நாம் செய்ய வேண்டும்.

குபேர விளக்கு (அல்லது அகல் விளக்கு) மற்றும் மனை



அல்லது தட்டிற்கு மஞ்சள், குங்குமத்தை ஒற்றைப்படையில் வைத்து அலங்கரித்து கொள்ளுங்கள்.

குபேர விளக்கு வைக்கும் மனை அல்லது தட்டில் பச்சரிசியை பரப்பி, அதில் ஐந்து ரூபாய் நாணயத்தை வைத்து கொள்ளுங்கள்.

பின்பு குபேர விளக்கில் நெய் அல்லது நல்லெண்ணெய் சேர்த்து குபேரருக்கு உகந்த பச்சை நிற திரி கொண்டு விளக்கு ஏற்றுவது மிகச்சிறப்பு. பச்சை நிற திரி இல்லையெனில் பஞ்சு திரியையும் பயன்படுத்தலாம்.

குபேரருக்கு உகந்த வடக்கு திசை நோக்கி குபேர விளக்கை (அல்லது அகல் விளக்கு) ஏற்ற வேண்டும். குபேர விளக்கில் ஐந்து கற்கண்டு சேர்த்து விளக்கை சுற்றி வாசனை மலர்கள் வைக்க வேண்டும். கற்கண்டு சேர்ப்பது பணவரவை அதிகரிக்க செய்யும்.

குபேர விளக்கு ஏற்றிய பின் வீட்டின் நிலை வாசலில் குபேரருக்கு உகந்த வடக்கு திசையில் விளக்கை வைக்க வேண்டும். ஏன் இந்த விளக்கை நிலை வாசலில் ஏற்ற வேண்டும்?

செல்வத்தின் அதிபதியான குபேரனை வீட்டின் வாசலில் வைத்து பூஜித்தால், நமது செல்வத்திற்கு பாதுகாப்பும், செழிப்பும் உண்டாகும்.

குபேர மந்திரத்தை மனதில் உச்சரித்துக் கொண்டு விளக்கு ஏற்றினால் மிகவும் நல்லது.

ஒவ்வொரு வியாழக்கிழமையும் மாலை 5 மணியிலிருந்து 8 மணிக்குள் உங்கள் வீட்டு நிலை வாசற்படியில் இவ்வாறு வடக்கு திசை நோக்கி குபேர விளக்கு ஏற்றி வர உங்கள் வீட்டில் எப்போதும் செல்வம் குறையாமல் பெருகிக் கொண்டே இருக்கும்.

வீட்டில் குபேரர் சிலையை எந்த பக்கம் வைக்க வேண்டும்?

குபேரர் செல்வத்திற்கு அதிபதி. இவர் வடக்கு திசைக்கு உரிய காவல் தெய்வம் ஆவார். இவர் வடக்கு திசையில் இருந்து உலகை பாதுகாக்கிறார். இவர் பூமியில் உள்ள பொக்கிஷங்கள் அனைத்திற்கும் அதிபதி. இவர் பிரம்மாவின் பேரனான விச்வரஸ் என்பவருக்கு மகனாக பிறந்தவர். வடக்கு திசையானது குபேரனுக்காக இருப்பதால் வீடுகளில் பணம் அல்லது நகைகள் வைக்கும் பெட்டி அல்லது 'பீரோ' வடக்கு திசை பார்த்து திறப்பது போல இருக்கவேண்டும். தென்கிழக்கு பகுதியில் உள்ள அறை அல்லது மற்ற அறைகளில் உள்ள தென்கிழக்கு மூலையில் பணம் அல்லது நகைப்பெட்டியை வைக்க கூடாது. அக்னி பாகம் தவிர மற்ற அறைகளில் பணம் வைக்கும் 'பீரோவை' வைப்பதென்றால், அதன் தென்மேற்கு பகுதியில் வடக்கு அல்லது கிழக்கு நோக்கியபடி வைக்க வேண்டும். குபேரரின் திசையான வடக்கு திசையில் குபேர சிலையை வைத்து வழிபடுவது மேலும் செல்வம் சேர வழிவகுக்கும்.

**பலன்கள் :**

குபேரர் செல்வத்தின் அதிபதியாக இருப்பதால், அவரை வழிபடுவதன் மூலம் செல்வம் பெருகும். கடன் சுமையால் அவதிப்படுபவர்கள் குபேரரை வழிபட்டால் கடன் பிரச்சனைகள் தீர்ந்து நிம்மதி பெறுவார்கள். தொழில்/வியாபாரத்தில் லாபம் அதிகரிக்க குபேர வழிபாடு உதவும். குடும்பத்தில் ஒற்றுமை, மகிழ்ச்சி, செழிப்பு நிலவுவதற்கு குபேர வழிபாடு சிறந்தது. நோய் நொடிகள் இல்லாத ஆரோக்கியமான வாழ்க்கை பெற குபேர வழிபாடு உதவும்.

-பாலசந்தர்
மண்ணச்சநல்லூர்

**தினம் ஒரு தலைவர்கள்**

# பீரா சுரேந்திர சாய் வரலாறு

பீரா சுரேந்திர சாய் (23 ஜனவரி 1809 - 28 பிப்ரவரி 1884) தற்போதைய ஒடிசாவைச் சேர்ந்த ஒரு இந்திய புரட்சியாளரும் சுதந்திரப் போராட்ட வீரரும் ஆவார். சம்பல்பூர் மாநிலத்தின் ஆட்சியாளர்களை அரியணையிலிருந்து இறக்கிய பின்னர், இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்துப் போராடினார் .

பீரா சுரேந்திர சாய் மற்றும் அவரது கூட்டாளிகளான மாதோ சிங் , குஞ்சல் சிங், ஐரி சிங், பைரி சிங், உத்தந்த் சாய், உஜ்ஜல் சாய், ககேஸ்வர் தாவோ, கருணாகர் சிங் , சலேக்ராம் பாரிஹா, கோபிந்தா சிங், பஹார் சிங், ராஜீ காசியா, கமல் சிங், ஹாதி சிங், சாலிக் ராம் பாரிஹா, லோக்நாத் பாண்டா/காடியா, மிருதுஞ்சய பாணிக்ராஹி, ஜகபந்து ஹோட்டா, பத்மநாப குரு, திரிலோச்சன் பாணிக்ராஹி மற்றும் பலர் இந்தியாவில் பிரிட்டிஷ் காலனித்துவ விரிவாக்கத்தை எதிர்த்து ஒன்றாகவும் தனித்தனியாகவும் பணியாற்றினர், இதனால் பிரிட்டிஷ் அதிகாரிகள் மேற்கு ஒடிசா பிராந்தியத்தின் பெரும்பகுதியை கணிசமான காலத்திற்கு கட்டுப்பாட்டில் எடுத்துக்கொள்வதைத் தடுத்தனர். அவர்களில் பலர் காலனித்துவ அதிகாரிகளால் விசாரிக்கப்பட்டு தூக்கிலிடப்பட்டனர்; ஹட்டே சிங் அந்தமானில் உள்ள செல்லுலார் சிறையில் (காலா பானி என்றும் அழைக்கப்படுகிறது) இறந்தார் . சம்பல்பூர் சிங்கம் வீர் சுரேந்திர சாய் 1884 பிப்ரவரி 28 அன்று ஆசிர்கர் சிறையில் இறந்தார்.

ஆரம்பகால வாழ்க்கை மற்றும் பின்னணி

சாய் 1809 ஜனவரி 23 ஆம் தேதி ஒடிசாவின் சம்பல்பூருக்கு வடக்கே சுமார் 40 கி.மீ தொலைவில் உள்ள கிண்டா என்ற சிறிய கிராமத்தில் பிறந்தார் . அவர் தர்ம சிங்கின் ஏழு குழந்தைகளில் ஒருவராகவும், சம்பல்பூர் மாநிலத்தின் ஆளும் குலத்தைச் சேர்ந்தவர் . அவர் சௌஹான் வம்சத்தின் நான்காவது மன்னரான மாதேகர சாயின் மகனான அனிருத சாயால் தொடங்கப்பட்ட கிளையைச் சேர்ந்தவர்.

அரியணைக்கு நடிப்பவர்

சம்பல்பூரின் கடைசி மகாராஜாவான மகாராஜ் சாய், சௌஹான் வம்சத்தைச் சேர்ந்தவர். இந்த வம்சத்தில் பல உறுப்பினர்களும் பல கிளைகளும் இருந்தன. சம்பல்பூரில், மகாராஜா ஒரு ஆணாக மட்டுமே இருக்க முடியும், மேலும் மகாராஜ் சாய்க்கு



மகன்கள் இல்லாததால், அவர் சுரேந்திர சாயை தனது சட்டப்பூர்வ வாரிசாகத் தேர்ந்தெடுத்தார். சுரேந்திர சாய் பல ஆண்டுகளுக்கு முன்பு சம்பல்பூரை ஆண்ட மகாராஜா மதுக்கரின் சகோதரர் இளவரசர் அனிருத்த சாயின் வழித்தோன்றல் ஆவார். இருப்பினும், சுரேந்திர சாய் முழுமையான சுதந்திர நிர்வாகத்தை விரும்பியதாலும், ஆங்கிலேயர்களுடன் எந்த வகையிலும் இணைந்திருக்க விரும்பாததாலும் இந்தக் கோரிக்கையை ஆங்கிலேயர்கள் நிராகரித்தனர்.

அரியணைக்கான கிளர்ச்சி

1827 ஆம் ஆண்டில் சம்பல்பூரின் ஆட்சியாளரான ராஜா மகாராஜா சாய், வாரிசு இல்லாமல் இறந்தார். பிரிட்டிஷ் அரசாங்கம் தனது விதவை ராணி மோகன் குமாரியை மாநிலத்தின் ஆட்சியாளராக நியமித்தது. இது ஆண் ஆட்சியாளர்கள் மட்டுமே மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்ற நிறுவப்பட்ட விதிமுறைகளுக்கு முரணானது. இதன் விளைவாக, கலவரங்கள் வெடித்தன, மேலும் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சியாளருக்கும் சம்பல்பூரின் சிம்மாசனத்திற்கு உரிமை கோருபவர்களுக்கும் இடையே மோதல் அதிகரித்தது. ஆளும் குலத்தின் வழித்தோன்றல்களில் ஒருவரான சுரேந்திர சாய், மிக முக்கியமான உரிமையைக் கொண்டிருந்தார். காலப்போக்கில் ராணி மோகன் குமாரி பிரபலமடையவில்லை. அவரது நில வருவாய் கொள்கை, ஆங்கிலேயர்களிடம் அதிகாரம் இழக்க நேரிடும் என்று சந்தேகித்த கோண்ட் மற்றும் பிஞ்சால் பழங்குடி ஜமீன்தார்களையும் குடிமக்களையும் திருப்திப்படுத்தவில்லை. பிரிட்டிஷ் அதிகாரிகள் ராணி மோகன் குமாரியை அதிகாரத்திலிருந்து நீக்கி, அரச குடும்பத்தைச் சேர்ந்த ஆனால் குறைந்த சாதியைச் சேர்ந்த நாராயண் சிங்கை சம்பல்பூரின் மன்னராக நியமித்தனர். சுரேந்திர சாயின் வாரிசுரிமைக்கான கோரிக்கையை பிரிட்டிஷ் அரசாங்கம் புறக்கணித்தது. நாராயண் சிங்கின் ஆட்சியில் கிளர்ச்சி வெடித்தது. சுரேந்திர சாயும் அவரது நெருங்கிய கூட்டாளிகளான கோண்ட் ஜமீன்தார்கள் பல தொந்தரவுகளை உருவாக்கினர். பிரிட்டிஷ் துருப்புக்களுடன் நடந்த மோதலில் சுரேந்திர சாய், அவரது சகோதரர் உத்யந்த சாய் மற்றும் அவரது மாமா பலராம் சிங் ஆகியோர் கைது செய்யப்பட்டு ஹசாரிபாக் சிறைக்கு அனுப்பப்பட்டனர் , அங்கு பலராம் சிங் இறந்தார். மன்னர் நாராயண் சிங் 1849 இல் இறந்தார். நாராயண் சிங்கிற்குப் பிறகு ஆண் வாரிசு இல்லாததால் , டல்ஹவுசி பிரபு 1849 இல் சம்பல்பூரை இணைத்தார். 1857 ஆம் ஆண்டு எழுச்சியின் போது சிப்பாய்கள் சுரேந்திர சாயையும் அவரது சகோதரர் உத்யந்த சாயையும் விடுவித்தனர். சுரேந்திர சாயின் தலைமையில் சம்பல்பூரில் ஆங்கிலேயர்களுக்கு எதிரான எதிர்ப்பு தொடர்ந்தது. அவருக்கு அவரது சகோதரர்கள், மகன்கள், உறவினர்கள் மற்றும் சில ஜமீன்தார்கள் ஆதரவு அளித்தனர் .

எழுச்சி

சாய் 1827 ஆம் ஆண்டு தனது 18 வயதில் ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் போராடத் தொடங்கினார். 1840 ஆம் ஆண்டு முதல் முறையாக அவர் கைது செய்யப்பட்டு ஹசாரிபாக் சிறைக்கு அனுப்பப்பட்டார். 1857 கிளர்ச்சியின் போது போராளிகளால் அவர் ஹசாரிபாக் சிறையிலிருந்து தப்பினார். அவர் தனது நடவடிக்கைகளை ஒடிசாவின் மலைப்பாங்கான பகுதிகளுக்கு நகர்த்தி, 1862 இல் சரணடையும் வரை எதிர்ப்பைத் தொடர்ந்தார். சரணடைவதற்கு முன்பு அவர் ஹசாரிபாக்கில் 17 ஆண்டுகள் சிறையில் கழித்தார், இறுதிக் கைதுக்குப் பிறகு அவர் இறக்கும் வரை தொலைதூர ஆசிர்கர் மலைக்கோட்டையில் 19 ஆண்டுகள் காவலில் வைக்கப்பட்டது உட்பட 20 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்தார்.

அவரை அடக்குவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் 1857 ஆம் ஆண்டு இந்தியக் கலகம் 1858 ஆம் ஆண்டின் இறுதியில் சரிந்தது, இந்தியா முழுவதும் ஆங்கிலேயர்களால் சட்டம் ஒழுங்கு மீட்டெடுக்கப்பட்டது , ஆனால் அவர் தனது புரட்சியைத் தொடர்ந்தார். ஆங்கிலேயர்களின் இராணுவ வளங்கள் அவருக்கு எதிராகத் தூண்டப்பட்டன, மேலும் இந்தியாவின் பிற இடங்களில் கிளர்ச்சியை அடக்குவதில் பெருமை பெற்ற மேஜர் ஃபார்ஸ்டர், கேப்டன் எல். ஸ்மித் மற்றும் பிற ஜெனரல்கள் அவரது புரட்சியை முறியடிக்க சம்பல்பூருக்கு கொண்டு வரப்பட்டனர். ஆனால் அனைத்து முயற்சிகளும் தோல்வியடைந்தன, சுரேந்திர சாய் நீண்ட காலமாக ஆங்கிலேயர்களின் உத்தியை முறியடிப்பதில் வெற்றி பெற்றார். முழு இராணுவ மற்றும் சிவில் அதிகாரமும், சுரேந்திர சாயையும் அவரது ஆதரவாளர்களையும் அடக்குவதற்கான ஒரு ஆணையரின் அதிகாரமும் கொண்ட புகழ்பெற்ற ஜெனரலான மேஜர் ஃபார்ஸ்டர், சம்பல்பூரில் மூன்று ஆண்டுகள் ஆட்சி செய்த பின்னர் 1861 இல் பிரிட்டிஷ் அதிகாரத்தால் நீக்கப்பட்டார். அவரது வாரிசான மேஜர் இம்பேயால் சாயை தோற்கடிக்க முடியவில்லை. ஆங்கிலேயர்கள் கிளர்ச்சியாளர்களின் முழு உணவுப் பொருட்களையும் கைப்பற்றினர், அவர்களுக்கு உணவு மற்றும் பிற வாழ்க்கைத் தேவைகளுக்கான அனைத்து வளங்களையும் நிறுத்தினர். மேஜர் இம்பே வன்முறைப் போர் என்ற கருத்தை கைவிட்டு, இந்திய அரசாங்கத்தின் ஒப்புதலுடன் அமைதி மற்றும் நல்லெண்ணக் கொள்கையை எச்சரிக்கையுடன் பின்பற்றினார். பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நேர்மை மற்றும் நேர்மையின் மீது முழு நம்பிக்கை வைத்து சுரேந்திர சாய் சரணடைந்தார். இருப்பினும், இம்பேயின் மரணத்திற்குப் பிறகு, சூழ்நிலைகள் திடீரென மாறின, பிரிட்டிஷ் நிர்வாகிகள் அவர் மீதான தங்கள் விரோதத்தை மீண்டும் தொடங்கினர்.

கடைசி நாட்கள்

சம்பல்பூர் புதிதாக உருவாக்கப்பட்ட மத்திய மாகாணங்களின் அதிகார வரம்பிற்குள் 1862 ஏப்ரல் 30 அன்று கொண்டுவரப்பட்டது; வீர் சுரேந்திர சாய் விரைவில் சரணடைய முடிவு செய்தார். இருப்பினும், அவர் ஏமாற்றமடைந்ததாகவும், புதிய அமைப்பு பழைய தாராளமயக் கொள்கையை மாற்றியமைத்ததாகவும் கூறப்படுகிறது. வீர் சுரேந்திர சாயின் சரணடைதல் புரட்சியை முடிவுக்குக் கொண்டுவரவில்லை என்பதைக் கண்டறிந்த நிர்வாகிகள். அவர்கள் ஒரு சதித்திட்டத்தை ஒழுங்கமைக்க இறங்கி, வீர் சுரேந்திர சாயையும் அவரது அனைத்து உறவினர்கள், நண்பர்கள் மற்றும் ஆதரவாளர்களையும் திடீரென கைது செய்தனர். பின்னர் சாயும் அவரது ஆறு ஆதரவாளர்களும் ஆசிர்கர் மலைக்கோட்டையில் தடுத்து வைக்கப்பட்டனர். சாய் தனது வாழ்க்கையின் கடைசி பகுதியை சிறைபிடிக்கப்பட்டார். 1884 ஆம் ஆண்டு மே 23 ஆம் தேதி, சுரேந்திர சாய் தனது சொந்த நிலத்திலிருந்து விலகி ஆசிர்கர் கோட்டையில் இறந்தார். இந்தியாவில் பிரிட்டிஷ் பேரரசால் ஆக்கிரமிக்கப்பட்ட கடைசி நிலப்பகுதிகளில் சம்பல்பூர் ஒன்றாகும் , சுதேச அரசுகளை கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை . இது பெரும்பாலும் வீர சுரேந்திர சாயின் முயற்சிகளால் ஏற்பட்டது. அவர் ஒரு சிறந்த வாள்வீரர். அப்பகுதி மக்கள் அவரை அன்பாக பீரா (அல்லது "வீர்" என்றால் துணிச்சலானது) சுரேந்திர சாய் என்று அழைத்தனர்.

# பிரபல டி.வி. நடிகை சுபாஷிணி 'திடீர்' தற்கொலை



பிரபல சின்னத்திரை தொலைக்காட்சி தொடரில் நடித்து வருபவர் சுபாஷிணி (வயது36). இலங்கையை சேர்ந்த இவர் கடந்த 2024-ம் ஆண்டு பெங்களூரை சேர்ந்த பிப்பின் சந்திரன் என்பவரை திருமணம் செய்து கொண்டார்.

சுபாஷிணி படப்பிடிப்பில் கலந்து கொள்வதற்கு வசதியாக சென்னை போரூர் அடுத்த அய்யப்பன்தாங்கல் பகுதியில் அடுக்குமாடி குடியிருப்பில் வீடு ஒன்றை வாடகைக்கு எடுத்து வைத்துள்ளார். இந்த நிலையில் கடந்த 3-ந் தேதி சென்னை வந்த அவர் தொலைக்காட்சி தொடர் படப்பிடிப்பில் கலந்து கொண்டு நடித்து வந்தார்.

நேற்று முன்தினம் இரவு வழக்கம் போல சுபாஷிணி கணவர் பிப்பின் சந்திரனுடன் வீடியோ கால் மூலம் பேசிக் கொண்டிருந்தார். அப்போது கணவன்- மனைவி இடையே திடீரென தகராறு ஏற்பட்டது.

இதில் மனவேதனை அடைந்த சுபாஷிணி திடீரென தனது படுக்கையறையில் தூக்கு போட்டு தற்கொலைக்கு முயன்றார். இதை வீடியோ கால் மூலம் பார்த்து அதிர்ச்சி அடைந்த பிப்பின் சந்திரன் உடனடியாக இதுபற்றி போரூர் போலீசுக்கு தகவல் தெரிவித்தார்.

போலீசார் விரைந்து சென்று சுபாஷிணியின் வீட்டு கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்தபோது அவர் தூக்கில் பிணமாக கிடந்தார். இதையடுத்து அவரது உடலை கைப்பற்றிய போலீசார் பிரேத பரிசோதனைக்காக பூந்தமல்லி அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும் சுபாஷிணி குடும்ப தகராறில் தற்கொலை செய்து கொண்டாரா அல்லது அவரது தற்கொலைக்கு வேறு ஏதும் காரணம் உள்ளதா? என்பது குறித்து சுபாஷிணியின் செல்போனை கைப்பற்றி போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் சுபாஷிணியின் கணவர் பிப்பின் சந்திரனிடமும் போலீசார் விசாரணை நடத்த திட்டமிட்டுள்ளனர்.



நடிகை க்ரித்தி ஷெட்டி தற்போது தமிழ், தெலுங்கில் முன்னணி நடிகையாக இருக்கிறார். அவர் விரைவில் ஹிந்தியிலும் அறிமுகம் ஆக இருக்கிறார்.

இளசுகளை அதிகம் கவர்ந்த நடிகையாக இருந்து வரும் க்ரித்தி ஷெட்டி LIK படத்தின் ரிலீசுக்காக காத்திருக்கிறார். அந்த படம் ஏப்ரல் 10ம் தேதி ரிலீஸ் ஆக இருக்கிறது.

தற்போது க்ரித்தி ஷெட்டி செம ஹாட் உடையில் இருக்கும் லேட்டஸ்ட் ஸ்டில்களை வெளியிட்டுள்ளார்.

# தனுஷுக்கு வில்லனாக போலீஸ் கதாபாத்திரத்தில் நடிக்கும் மம்மூட்டி?





தனுஷ் நடிப்பில் இயக்குனர் விக்னேஷ் ராஜா இயக்கத்தில் உருவாகியுள்ள 'காரா' திரைப்படம் வரும் ஏப்ரல் 30-ம் தேதி வெளியாக உள்ளது.

மமிதா பைஜு, சூரஜ் வெஞ்சாரமூடு ஆகியோர் நடித்துள்ள இந்தப் படம் முழுக்க முழுக்க ஆக்ஷன் பின்னணியில் உருவாகியுள்ளது.

தொடர்ச்சியாகப் பெரிய படங்களை கைவசம் வைத்துள்ள தனுஷின் 55வது திரைப்படம் 'D55' அமரன் பட இயக்குநர் ராஜ்குமார் பெரியசாமி இயக்கத்தில் உருவாகி வருகிறது.

இந்த படத்தில் சாய் பல்லவி, ஸ்ரீ லீலா முக்கிய பாத்திரங்களில் நடிப்பதாக அண்மையில் தகவல் வெளியானது.

இந்த படத்தில் மூத்த மற்றும் முன்னணி மலையாள நட்சத்திரம் மம்மூட்டி நடிக்க உள்ளதாக ஏற்கனவே ஒப்பந்தம் ஆனதாக தகவல் வெளியாகி இருந்தது.

இந்நிலையில் இந்தப் படத்தில் மம்மூட்டி ஒரு கணிக்கமுடியாத போலீஸ் அதிகாரியாக வில்லன் பாத்திரத்தில் நடிக்கிறார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

சென்னையில் நடைபெற்று வரும் படப்பிடிப்பில் மம்மூட்டி கலந்துகொண்டு அவரது காட்சிகள் விறுவிறுப்பாக படமாக்கப்பட்டு வருவதாக கூறப்படுகிறது.

இந்தப் படத்தின் படப்பிடிப்பை இந்த ஆண்டு இறுதிக்குள் முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# ஆபாச இணையதளத்தில் தனது புகைப்படங்கள்: ஜான்வி கபூர் அதிர்ச்சி



முன்னாள் கனவு கன்னி மறைந்த ஸ்ரீதேவியின் மகள் ஜான்வி கபூர் தற்போது பாலிவுட் சினிமாவின் முக்கிய நடிகையாக வலம் வந்து கொண்டிருக்கிறார். 'தேவரா' என்ற தெலுங்கு படத்தில் ஜூனியர் என்.டி.ஆர். ஜோடியாக நடித்து தென்னிந்திய சினிமாவிலும் கால் பதித்துள்ளார்.

ஜான்வி கபூரை விரைவில் தமிழ் சினிமாவில் நடிக்க வைக்க பேச்சுவார்த்தை நடந்து வருவதாக கூறப்படுகிறது. முன்னணி இயக்குனர்கள் 2 பேர் அவரிடம் கதை சொல்லி இருப்பதாகவும் தகவல் வெளியாகி இருக்கிறது.

இதற்கிடையில் ஆபாச இணையதளத்தில் தனது புகைப்படங்கள் இருப்பதைக் கண்டு ஜான்வி கபூர் அதிர்ச்சி தெரிவித்துள்ளார்.

அவர் கூறும் போது, "நான் பள்ளிக்கூடம் படித்த காலத்தில் ஆண் நண்பர்கள் சிலர் ஆபாச இணையதளத்தை பார்த்துக் கொண்டிருந்தனர். அப்போது அதில் எனது புகைப்படமும் இருந்ததை கண்டு அதிர்ந்து போனேன். இதனால் குழப்பத்தில் தவித்தேன். இன்றளவும் எனது போலி ஆபாச படங்கள் இணையத்தில் ஊடுருவி கிடப்பதைக் கண்டு மனம் வலிக்கத்தான் செய்கிறது. சில நேரங்களில் அமைதியின்றியும் தவிக்கிறேன். இதற்கெல்லாம் ஒரு முடிவு கட்ட வேண்டும். அப்போதுதான் பிரபலங்கள் நிம்மதியாக இருக்க முடியும்", என்று குறிப்பிட்டார்.



விஜய் டிவியின் தனம் சீரியலில் ஹீரோயினாக நடித்து வருபவர் சத்யா தேவராஜன். அந்த தொடருக்கு சுமாரான ரெஸ்பான்ஸ் தான் கிடைத்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது சத்யா தேவராஜன் ட்ரெண்டி உடையில் எடுத்த லேட்டஸ்ட் போட்டோஷூட் ஸ்டில்களை வெளியிட்டு இருக்கிறார்.டிவியில் வர ஹோம்லியாக நடித்தாலும், இன்ஸ்டாவில் தொடர்ந்து கிளாமர் ஆகவும் அவர் போட்டோஷூட் ஸ்டில்களை வெளியிட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# தனுஷ் உடனான நட்பு முறிவு



தனுஷ் தயாரிப்பில் 'நானும் ரவுடிதான்' படத்தை இயக்கி திரையுலகில் அனைவரையும் திரும்பிப் பார்க்க வைத்தவர் விக்னேஷ் சிவன். அதனைத் தொடர்ந்து 'தானா சேர்ந்த கூட்டம்', 'காத்து வாக்குல ரெண்டு காதல்' போன்ற படங்களையும் இயக்கியுள்ளார்.

முன்னணி நடிகையான நயன்தாராவை காதலித்து திருமணம் செய்து கொண்ட விக்னேஷ் சிவன், தற்போது பிரதீப் ரங்கநாதன் - கீர்த்தி ஷெட்டி நடிப்பில் இயக்கியுள்ள 'எல்.ஐ.கே.' படம் விரைவில் திரைக்கு வருகிறது.

இதற்கிடையில் தனுஷ் உடனான நட்பு குறித்து விக்னேஷ் சிவன் மனம் திறந்தார்.

விக்னேஷ் சிவன் கூறியதாவது:-

தனுசை எனக்கு மிகவும் பிடிக்கும். நடிகர் என்பதை தாண்டி அவரை நான் உச்சத்தில் வைத்திருக்கிறேன். ஆனால் அவருடன் எனது நட்பு முறிந்து போனதை மிகப்பெரிய இழப்பாக பார்க்கிறேன். நல்ல நட்பு கொண்ட ஒரு உறவை இழந்ததை பலவீனமாகவும் கருதுகிறேன்.

ஏதோ ஒரு இடத்தில் ஏதோ ஒரு தவறை செய்திருக்கிறேன். அதனால்தான் இந்த நட்பு தொடரவில்லையோ என்று கவலைப்படுகிறேன். இன்றைக்கு நான் இந்த இடத்தில் இருக்க காரணமே தனுஷ் தான். அதை மட்டும் என்றும் மறக்க மாட்டேன்.

இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

விக்னேஷ் சிவன், நயன்தாரா, தனுஷ் இடையே நல்ல நட்பு நீடித்தது. திடீரென இவர்கள் நட்புக்குள் விரிசல் விழுந்தது. நயன்தாரா தனது திருமண ஆவணப்படத்தில் 'நானும் ரவுடிதான்' படப்பிடிப்பு சம்பந்தமான சில காட்சிகளை சேர்த்திருந்தார்.

தயாரிப்பாளரான தனது அனுமதி இல்லாமல் இப்படி செய்யக்கூடாது என்று தனுஷ் நீதிமன்றம் வரை சென்று வழக்கு தொடர்ந்தார். அப்போது முதலில் இருவர் இடையே முட்டல்-மோதல் நீடித்து வருகிறது.

இந்த நிலையில் தனுஷ் உடனான நட்பு குறித்து விக்னேஷ் சிவன் தெரிவித்துள்ள கருத்துக்கள் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது.




# திரைவிமர்சனம்

மரகத மலை விமர்சனம்(3 / 5)

ஜமீன்தாராக இருக்கும் மசந்தோஷ் பிரதாப் தனது மனைவி தீப்ஷிகா மற்றும் மகனுடன் வாழ்ந்து வருகிறார். ஜமீந்தாரின் முன்னோர்கள் முதல் தற்போது இருக்கும் சந்தோஷ் பிரதாப் வரை மரகதமலையில், தங்கம் மற்றும் வைரம் போன்ற அளவிட முடியாத செல்வங்களை பாதுகாத்து வருகின்றனர். மேலும் அந்த மலையை அடையும் ரகசிய குறிப்பையும் பாதுகாத்து வருகிறார்கள்.

இந்த குறிப்பை கைப்பற்ற கொள்ளை கும்பல் ஊருக்குள் வர, சந்தோஷ் பிரதாப் அதை மனைவி தீப்ஷிகாவிடம் கொடுத்து தப்பிக்கச் சொல்கிறார். தீப்ஷிகா தனது மகனுடன் காட்டிற்குள் தஞ்சம் அடைகிறார். காட்டிற்குள் நடக்கும் சம்பவங்களில், மகனை இழப்பதுடன் குறிப்பையும் தவறவிடுகிறார்.

அதே நேரத்தில் முனிவரின் சாபத்தால் தீப்ஷிகா கல்லாக மாறுகிறார். மறுபுறம், மகனை பலி கொடுக்க நினைக்கும் ராட்சசன் அவனை கடத்திச் செல்கிறான். மனைவி மற்றும் மகனை தேடி சந்தோஷ் பிரதாப் காட்டிற்குள் வருகிறார். இறுதியில் சந்தோஷ் பிரதாப் மனைவி தீப்ஷிகா மற்றும் மகனை கண்டு பிடித்தாரா? கல்லாக மாறிய தீப்ஷிகா மீண்டும் மனிதராக மாறினாரா? கடத்தப்பட்ட மகன் என்ன ஆனார்? என்பதே படத்தின் மீதிக்கதை.

நடிகர்கள்

பார்த்திபன் கதாபாத்திரத்தில் நடித்து இருக்கும் சந்தோஷ் பிரதாப் சிறப்பான நடிப்பை வெளிப்படுத்தி இருக்கிறார். சண்டைக் காட்சிகள் மற்றும் உணர்ச்சி காட்சிகளில் அவர் தனது பங்கை சரியாக செய்துள்ளார்.

குறிப்பாக கிளைமாக்ஸ் பாடலில் நடன ஆடி கவனிக்க வைத்து இருக்கிறார். நாயகியாக நடித்திருக்கும் தீப்ஷிகா, அழகும் உணர்வும் கலந்த நடிப்பை கொடுத்துள்ளார். தம்பி ராமையா, ஜெகன் ஆகியோரின் காமெடி காட்சிகள் ஆங்காங்கே சிரிக்க வைத்து இருக்கிறது. மற்ற கதாபாத்திரங்கள் தங்களுக்கான கதாபாத்திரங்களை அளவாக செய்து முடித்துள்ளனர்.

**இயக்கம்**

குழந்தைகளுக்கான ஒரு ஃபேண்டஸி கதையை சுவாரஸ்யமாக சொல்ல முயற்சி செய்துள்ளார் இயக்குனர் லதா. கதை நகர்வு எளிமையாகவும், அடுத்து என்ன நடக்கும் என்ற எதிர்பார்ப்பை உருவாக்கும் வகையிலும் அமைந்துள்ளது. மனித குரங்கு, புலி, டிராகன் போன்ற அம்சங்கள் குழந்தைகளை கவரும் வகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. லாஜிக் இல்லாமல் பார்த்தால் படத்தை ரசிக்கலாம்.

**ஒளிப்பதிவு**

பி.ஜி.முத்தையாவின் ஒளிப்பதிவு படத்திற்கு பெரிய பலமாக இருக்கிறது. காட்சியமைப்புகள் கண்களுக்கு விருந்தாக அமைந்துள்ளது.

**இசை**

எல்.வி.முத்து கணேஷின் இசையில் பாடல்கள் கேட்கும் ரகம். பின்னணி இசை படத்திற்கு பலம் சேர்த்து இருக்கிறது.

அருள்தரும் தெய்வம்

## விளம்பர முகவர்கள் & விற்பனை பிரதிநிதிகள் தேவை

- அருள்தரும் தெய்வம் மாதம் இருமுறை பக்தி இதழுக்காக
- பகுதிநேர / முழு நேர வாய்ப்புகள்
- கமிஷன் அல்லது மாத ஊதிய அடிப்படையில்
- மாதம் Rs. 20000 முதல் Rs. 50000/- வரை ஈட்ட சிறந்த வாய்ப்பு

CALL / WHATSAPP: 7789941009

இன்றே இணையுங்கள்!

Sanjay
Cell: 90032 64920

## Real Choice

Retail & Wholesale Dealers In: Designer Sarees, Chudidhar, Laganga, Choli & Wedding Collection

#361, Mint Street, (Opp. New Jain Temple)
Sowcarpet, Chennai-600 079.

Real Choice Chennai | Real Choice Chennai | Real Choice Chennai

## WANTED

Needed female staff to look after children, patients.

Contact

9150989424

## WANTED

### — MARKETING EXECUTIVES —

We are hiring **Marketing Executives** (Male/Female) for immediate openings.

**Full-Time / Part-Time**

**Salary: ₹30,000 - ₹50,000**

Open to all, including Retired / VRS candidates and Job Seekers.

**Location: All Over Tamil Nadu**

Contact: **7789941009**

## WANTED

Retd, VRS, Home Makers, NRIs, Business Person

Contact

8248951872

## WANTED

Site Supervisor required for construction work in Ambattur

Contact:

8428872887

## keerthi foundation

De Addiction Cum Rehabilitation Centre

**INTERNSHIP & JOB OPPORTUNITIES**
**MSW & M.Sc Psychology - Freshers**

Internship:
- Clinical Training
- Counseling Practice
- Case Work

Jobs:
- Social Worker
- Jr Psychologist
- Rehab Counselor

Build Your Career in De-Addiction & Mental Health Care

Call: 9841945060 | 7845027710

www.keerthifoundation.com

## WANTED TELECALLERS

- Work at Home
- Fulltime or Parttime

Salary Rs. 20000 to 50000/-

Call / Whatsapp:
7789941009
9337501889

## Wanted REPORTERS

சட்டமன்ற தொகுதி வாரியாக நிருபர்கள் தேவை

PRGI No. TNBIL/25/A1564

பேப்பர்பாய்

8122664699

தனியார் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் பணிபுரிய ஆட்கள் தேவை.

**Quality Line Inspector**
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diplomo/B.E

**Final Quality Inspector**
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI

**VMC Machine operator**
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma

Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE

## அனைத்து பிரிவினருக்கும்

என் துணை

திருமண தகவல் மையம்

உங்கள் மணமகனை / மணப்பெண்ணைப் பதிவு செய்யவும்.

www.enthunai.com 7871617005
support@enthunai.com 7789941009

அருள்மிகு ஸ்ரீ மாலையம்மன் சமேத அருள்மிகு சுப்பிரமணியர் துணை
அருள்மிகு திருச்செந்தூர் முருகர் துணை

## ஸ்ரீ ஹரி ஜோதிட மையம்

ஜாதகம், திருமணப் பொருத்தம், ஜாமக்கோள் , ஆரூடம் பார்க்கப்படும்.
தாம்பூல பிரசன்னம் , சோழி பிரசன்னம், அஷ்ட மங்கல பிரசன்னம்
மேலும் திருமணம், புத்திர பாக்கியம், கல்வி, தொழில் ஆகியவற்றில் ஏற்பட்ட தடைகளுக்கு ஜோதிடரீதியான தீர்வு செய்யப்படும்.

ஜோதிட நிபுணர் இராஜபாளையம் இராமமூர்த்தி MA Astro
81899 08040 / 93425 03572
harisudhan1968@gmail.com






**விளையாட்டும் அமைதியான வளர்ச்சியும்!**

அறுசீர் மண்டிலம்.

விளையாட்டில் ஆர்வத்தைப்
பயன்படுத்து வீறுடனே
வலிமைதனை வியப்பாக்கு
களிப்போடு விளையாட்டை
விளையாடு காலமெலாம்
உடற்பயிற்சி சீரோடு!
விளையாட்டு மாற்றத்தை
ஏற்படுத்தும் வீரமுடன்
கொண்டிட்டம் கண்டிடுமே
வளர்ச்சிக்கு வித்தாகும்
விளையாட்டு வண்ணமய
உடல்காணும் நினைப்பூட்டு!

சமூகத்தை மாற்றுவதன்
வினையூக்கி சந்தனமாய்
மணந்திடுமே விளையாட்டு
கமழ்கின்ற வேர்வைமணி
உதிர்ந்திடுமே காட்சியிலே
பிழையிருப்பின் காட்டிடுமே!
அமைகின்ற உடற்பயிற்சி
யாகிடுமே அன்புக்கும்
பண்புக்கும் வித்திடுமே
சமைத்திடுவோம்
ஒற்றுமையை விளையாட்டில்
சந்ததமும் விளையாடி
மகிழ்வோமே!



**மாலையைக் கோர்த்திடும் மாது!**

நேரிசை வெண்பா!

காரிகையாள் பூமாலை
கையிலே கோர்த்தெடுத்து
சீருடனே காண்கிறாள்!
சீர்மையும்..பாரினிலே
கோலமுடன் நற்செழிப்பைக்
கொஞ்சியே காட்டிடுவாள்
மாலையைக் கோர்த்திடும்
மாது!
மங்கைத் திருக்கரத்தில்
மாலை தவழ்ந்திட
மங்காப் புகழ்காணும்
மாலையும்..தங்குபுகழ்ச்
சீலமுடன் சீராய்ச்
செழிப்போடு
நங்கையே
மாலையைக்
கோர்த்திடும் மாது!



முனைவர்
இராம.
வேதநாயகம்.

**மார்கெட்டிங் !**

புகைக்கும், மது
விற்பனைக்கும் தான்
மார்க்கெட்டிங் எனும்
வியாபார யுக்தி
தேவைப்படுகிறது...

மரணத்திற்கு
தேவையில்லை...
வியாபார யுக்தி...

புகைப்பவரையும், மது
குடிப்பவரையும், தானே...
அழைத்துக்கொள்கிறது
மயானம் !

எம்.பி.தினேஷ்.
கோவை – 25

**துளிப்பாக்கள் விளைச்சல்**

(1) விதைப்பவன் அறியான்
விதையின் விதி
விளையுமா விளையாதா

(2) விதியோன் அறிவான்
விளைவது தினையா
விதைப்பவன் வினையா

(3) விளையும் நன்னிலத்தின்
மண் அறியும்
விதையின் உயிர்ப்பு

(4) முளை விடும்
செடி அறியும் உயிர்ப்பின்
உயிரோட்டம்

(5) உதிரும் மலர்
உணர்ந்தது இன்று
வாடும் துன்பத்தை

(6) மரம் விட்டு
கழலும் காம்பறியும்
பழம் கனிந்ததென்று

(7) உதிரும் சருகு
உணர்ந்தது இன்று
மண்ணின் ஈரத்தை



(8) மண்ணின்
ஈரம்
உணர்ந்தது
சருகு
தன்னில்
தன்மயமாகுமென்று

சசிகலா விஸ்வநாதன்



**வேண்டவே வேண்டாம் பான்பார்க் குட்கா !**

தடை செய்ப்பட்ட போதும்
சிலர் கடைகளில் மறைத்து
வைத்து விற்கின்றனர் !
மாணவர்கள் பலர் வாங்கி
மென்று மனநோயாளிகள்
ஆகித் தவிக்கின்றனர் !
முகேஷ் இறந்த சோகமான
உண்மைக் கதை
முக்கியமான
திரையரங்குகளில்
காண்கிறோம் ! வாய்
புற்றுநோயை பலர் வலிய
விலை கொடுத்து
வாங்குகின்றனர் !
என்றாவது என்று தொடங்கி
என்றும் வேண்டும்
என்றான்றனர் !
நன்றாக இருக்கும் பற்களை
நாசம் செய்து
கொள்கின்றனர் !
அருகில் இருக்கும்
துணையும் அறவே
வாசத்தை வெறுக்கின்றனர் !
காலையில் தொடங்கி
தொடர்ந்து கண்
மூடித் தூங்கும் வரை
மெல்லுகின்றனர் !
சிந்தித்துப் பார்த்து
செயலினை மாற்று
சிதைக்கும் பாக்கு உனக்கு
எதற்கு ? பான்பார்க் குட்கா
மெல்லும் மனிதர்களை
பார்ப்பவர்கள் மதிப்பதில்லை
உணருங்கள் !
மதிக்கும் மனிதராக இன்றே
மாறுங்கள் ! மதி மயக்கும்
பாக்கை விட்டொழியுங்கள் !
முடியாதது
எதுவுமில்லை உலகில்
முயன்றுடுங்கள்கெட்ட
பழக்கத்தை ஒழியுங்கள்!

கவிஞர் இரா .இரவி !

**ஹைக்கூகள்**

கூட்டிச் செல்கிறது
என்னை மரண சாசனத்தில்
ஒப்பமிட்ட அகால மரணம்
********
உலக அதிசயங்கள்
அனைத்தையும்
பார்த்து விட்டேன் என்
மரணத்தைத் தவிர.
******
வெளியேறும் வண்டியில்
இருந்து உள்வரும்
ஊர்திக்கு தாவுகிறது
மயான வைராக்கியம்.
*****
மரிப்பதற்கு முன்பே
நல்லடக்கம் செய்யப்
படுகின்றன இறந்தவனின்
பன்மொழிகள்
*********
மண்ணைத் தழுவி
மாசாகிறது சமாதிச்
சிலுவயை நனைத்து
புனிதமான மழை நீர்.
""""""""""""""""""""""""""""""""
வைகறை இருள் விலக
ஒவ்வொன்றாகத்தெரிகிறது
மயானச் சமாதிகள
""""""""""""""""""""""""""""""""
சவ ஊர்தி வெளியேறியதும்
சுடுகாட்டில் மீண்டும்
இணையும் இருளும்
தனிமையும்
*******
அநேகம் உண்டு முடிக்க
வேண்டிய பணிகள்
மன்னியுங்கள் என்
மரணத்தை
********
ஒத்திகையின்றி நிகழ்கிறது
ஒவ்வொரு இறப்பிலும்
இறுதி ஊர்வலம்
********
ஆன்மாக்களின்
எதிர்ப்பாரா சந்திப்பு
ஏககால ஜனன–மரணம்
பிரசவத்தில் இறந்த தாய்
""""""""""""""""""""""
இன்னொரு குளிர்காலம்.....
மகளின் உப்பிய வயிறு
குரோஷாவைத்தேடுகிறேன்
********
முட்செடியில் பட்டாம்பூச்சி
விடுவிக்கையில்
அவிழ்கின்றன
பல மொட்டுகள்
********
கண் விழித்தேன்
இருளுடன் தப்பி இருந்தது
நேற்றிரவின் மழை
""""""""""""""""""""""""""""""""
பாதி வழியில் மாயமானது
இறுதி பேருந்தைத்
தவறியவனுக்கு
துணை வந்த
பிறை



முனைவர்
வே.
புகழேந்தி.
பெங்களூரு

**தொ( ல் )லைக்காட்சித் தொடர்கள் !**

அன்பு நெறி அழித்து
வம்பு வெறி வளர்க்கின்றன
தொடர்கள் !

இரண்டு மனைவிகள்
எல்லா நாயகனுக்கும்
தொடர்கள் !

பார்த்திடச் சலிக்கின்றனர்
பார்த்த முகங்களே
தொடர்கள் !

பழி தீர்க்கும் படலம்
பயிற்றுவிகக்கும் பள்ளி
தொடர்கள் !

நல்ல செய்தி கொஞ்சம்
கெட்ட செய்தி அதிகம்
தொடர்கள் !

விளைவித்தது
குடும்பத்தில் குழப்பம்
தொடர்கள் !

மாமியார் மருமகள்
சண்டைப் பயிற்சிக்கூடம்
தொடர்கள் !

அரைத்த மாவையே அரைத்து
அலுப்புத் தட்ட வைக்கும்
தொடர்கள் !

வழக்கொழிந்து வருகின்றன
வழக்கமான பணிகள்
தொடர்கள் !

நியாயப்படுத்தி வருகின்றன
குற்றங்களை
தொடர்கள் !

வருகிறது எரிச்சல்
பேசியதையேப் பேசுகின்றன
தொடர்கள் !

பொறுமையைச் சோதித்து
எருமையாக்கி விடுகின்றன
தொடர்கள் !

நிலை நிறுத்தி வருகின்றன
பெண்ணடிமைத்தனத்தை
தொடர்கள் !

கேப்பையில் நெய் என்கின்றன
பார்ப்போரை
முட்டாளாக்குகின்றன
தொடர்கள் !

ஒழுக்கம் சிதைத்து
ஒழுங்கீனம்
விதைக்கின்றன
தொடர்கள் !

பண்பாட்டைச் சீரழித்து
பலவீனம் வளர்க்கின்றன
தொடர்கள் !

நல்லவர்களையும்
கெட்டவராக்குகின்றன
தொடர்கள் !

கூசாமல் கலக்கின்றன
மனசில் மாசு
தொடர்கள் !

வீட்டிற்குள் வந்து
வேதனை தருகின்றன
தொடர்கள் !

வீரத் தமிழர்களை
வேடிக்கைத் தமிழராக்கின
தொடர்கள் !

பிஞ்சு நெஞ்சங்களில்
நஞ்சு விதைக்கின்றன
தொடர்கள் !

நெடுந்தொடர்கள் என்று
நெடுந்துன்பம் தருகின்றன
தொடர்கள் !

பெண்களை அடிமையாக்கின
ஆண்களும் அடிமையாகினர்
தொடர்கள் !

வசனத்தொல்லை மட்டுமல்ல
விளம்பரத் தொல்லை வேறு
தொடர்கள் !

தயாரிப்பவர்களுக்கு இலாபம்
பார்ப்பவர்களுக்கு நட்டம்
தொடர்கள் !

விவேகமானவர்களையும்
வீணாக்கி விடுகின்றன
தொடர்கள் !

பார்ப்பவர்களுக்குக்
கற்பிக்கின்றனர்
பத்தாம் பசலித்தனம்
தொடர்கள் !

மூடநம்பிக்கைப் பரப்பி
முட்டாளாக்குகின்றன
தொடர்கள் !

போராட்டம் நடத்தி இருப்பார்
பெரியார் இருந்து இருந்தால்
தொடர்கள் !




நெஞ்சு பொறுக்கவில்லை
மனிதநேயர்களுக்கு
தொடர்கள் !

முற்றுப்புள்ளி வையுங்கள்
முன்னேறும் சமுதாயம்
தொடர்கள் !

கவிஞர் இரா .இரவி !

# நூல் விமர்சனம்




நூல்: சோழவந்தான்
ஜெனகை மாரியம்மன் கோவில்
(தல வரலாறு)
நூல் ஆசிரியர் :
பேராசிரியர் முனைவர்
கு.ஞானசம்பந்தன்
நூல் மதிப்புரை :
கவிஞர் இரா.இரவி
வெளியீடு:அமுதம் பதிப்பகம்,
155, டெபுடி கலெக்டர் காலனி,
3வது தெரு, கே.கே. நகர்,
மதுரை–625 020
பக்கங்கள் 100, விலை ரூ. 50

நூலாசிரியர் பேராசிரியர் முனைவர் கு. ஞானசம்பந்தன் அவர்கள் 1982-83 ஆண்டுகளில் இளநிலை ஆய்வாளருக்கான (M.Phil.) பட்டப்படிப்பிற்கு மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து உள்ளார். நூலாசிரியருக்கு நாடகத்துறையில் ஆர்வம் இருந்த காரணத்தால் பல நாடகங்கள் இயற்றி நடித்த அனுபவம் காரணமாக நாடகத்தை ஆய்வு செய்வோம் என்று எண்ணி வீரபாண்டிய கட்டபொம்மன் போன்ற நாடகங்களை பார்க்கத் தொடங்கி இருக்கிறார். நாடகங்கள் பாடல் வடிவிலேயே இருந்ததால் ஆய்வுக்கு பயன்படுத்தவில்லை.

பின்னர் 'ஆண்கள் ஒப்பாரிப் பாடல்கள்' பற்றி ஆய்வு செய்வோம் என்று எண்ணி அதில் இறங்கி இருக்கிறார். அவர்களோ. 'நாங்கள் தனியாகப் பாட வராது, துக்க வீடுகளில் ஒப்பாரி வைப்போம், அதை வந்து பார்த்து குறிப்பெடுங்கள் என்று சொல்லவும், தொடர்ந்து துக்க வீடுகளுக்குச் சென்று ஒப்பாரிப் பாடலை குறிப்பெடுத்து வந்தார். ஆய்வுக்கு அதுவும் சரிப்பட்டு வரவில்லை'. ஐயாவின் அப்பா சொல்லி உள்ளார். நீ பிறந்த ஊருக்கு ஏதாவது செய், இந்த ஜெனகை மாரியம்மன் கோவிலை ஆய்வு செய்து எழுதி என்று சொல்லவும் ஐயாவிற்கு மனதில் பொறி தட்டி எழுதத் தொடங்கி விட்டார். 'சோழவந்தான் ஜெனகை மாரியம்மன் கோவில் வழிபாடும் திருவிழாக்களும்' என்ற தலைப்பில் ஆய்வு செய்திட, மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் அனுமதியும் கிடைத்து விட்டது. அப்பாவை அழைத்துக் கொண்டு கோயில் தர்மகர்த்தா திரு. சி. கன்னியப்ப முதலியார் அவர்களைச் சந்தித்துள்ளார். மூத்த சான்றோர்களான ராக்கப்ப பிள்ளை அவர்களைச் சந்திக்கச் சொல்லி உள்ளார். மதுரை திருமலை நாயக்கர் அரண்மனையில் தொல்லியல் துறையில் பணியாற்றிய அலுவலர்கள் திரு. வேதாசலம், திரு. சத்தியமூர்த்தி இருவரின் உதவியையும் பெற்றுள்ளார். ஆய்வுக்காக கடுமையாக முயற்சி செய்து ஆய்வேடு தயாரித்துள்ளார். திருவிழாத் தொடங்கிய முதல்நாளிலிருந்து பதினெட்டு நாள்களிலும் கோயிலிலேயே இருந்து தகவல் சேகரித்து உள்ளார். பிறந்து வளர்ந்த ஊர் என்பதால் எந்தவித சிரமமின்றி இரவு-பகல் பாராமல் இருந்து ஆய்வு செய்துள்ளார். அப்படி ஆய்வு செய்து சமர்ப்பித்த ஆய்வேட்டை மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் தற்போது பணிபுரிந்து வரும் முனைவர் காமராஜ பாண்டியன், முனைவர் சத்தியமூர்த்தி, முனைவர் கருப்பத் தேவர் இவர்களின் உதவியால் ஆய்வேட்டை தேடிப்பிடித்து எடுத்து, நகல் தந்து, நூலாக வெளியிட அனுமதியும் பெற்று வெளிவந்த நூல் தான் இந்த தலவரலாறு, இந்த நூலில் இருந்து வந்த வருமானத்தை சோழவந்தான் ஜெனகை மாரியம்மன் கோவிலுக்கு வழங்கியது சிறப்பு.

இந்தக் கோவிலுக்கு நான் நேரில் சென்று பார்த்து இருக்கிறேன். நான் நாத்திகனாக இருந்தாலும். இந்தக் கோவிலின் கோபுரம், உள் கட்டமைப்பு மிகவும் ரசித்துப் பார்த்தேன். நான் உதவி சுற்றுலா அலுவலராகப் பணியாற்றிய போது அந்தக் கோவிலில் பொங்கல் விழா நடத்தினோம். கலைநிகழ்ச்சிகள் அக்கோவிலில் தான் நடந்தன. அப்படி நேரில் பார்த்து ரசித்து வியந்த கோவிலின் தல வரலாறு படித்து மேலும் வியந்தேன்.

ஜெனகை என்ற சொல் வந்தது எப்படி என்பதை பல கோணங்களில் ஆய்வு செய்துள்ளார். இராமாயண காலத்தில் ஜனகன். தன் மகள் சீதைக்கு நல்ல மணமகன் வேண்டும் என்று தவம் செய்தான். ஜனகாபுரி என்று இவ்வூர் அழைக்கப்பட்டது. அதனால் ஜெனகை என்று பெயர் வந்து இருக்கலாம் என்று ஒரு செவிவழிச் செய்தி அந்த ஊரில் இருந்துள்ளது. ஜெனகன் என்ற மன்னன் மதுரையை ஆண்டான். அதன் காரணமாக ஜெனகை நாராயணப் பெருமாள் கோவில், ஜெனகை மாரியம்மன் கோவில் என பெயரிடப்பட்டு இருக்கலாம். 'சோழன் உவந்தான்' என்பது மருவி சோழவந்தான் ஆனது என்றும் ஒரு செய்தி இருந்துள்ளது. இப்படி பெயர்க்காரணமே பெரிய ஆய்வாக விளக்கி உள்ளார்கள்.

கோவிலின் சுற்றுப்புறச்சூழல் முன்புறத் தோற்றம், உட்பகுதியின் தோற்றம், கொடிமரமும் விநாயகரும், சிறிய மண்டபமும் கர்ப்பக்கிரகமும், சுற்றுப்பிரகார அமைப்பு சிலைகளும் சில செய்திகளும், கல்லாலான சிற்பங்கள், கடைகள் மூலம் வரும் வருமானம், நவராத்திரி மண்டபம், அர்ச்சகர் நியமித்த விதம், தர்மகர்த்தாக்களும் அரசாங்கமும், ஆரம்பகால பூசாரிகள், தர்மகர்த்தாக்கள் பெயருடன் அவர்கள் ஏற்படுத்திய கோவில் வளர்ச்சிகள், புராணக்கதைகள் - இப்படி அனைத்தையும் கோவிலை அங்குலம் அங்குலமாக அலசி ஆராய்ந்து வடித்துள்ளார். இந்த நூலை படித்துவிட்டு அந்தக் கோவிலைப் பார்த்தால் நன்கு ரசிக்க முடியும். அவ்வளவு நேர்த்தியாக, கோவிலைப் பற்றி மிக விளக்கமாக எழுதி உள்ளார்.

சோழவந்தான் என்ற சிறிய ஊரில் இவ்வளவு நுட்பமான சிறந்த கோவில், அதுவும் பேராசிரியர் முனைவர் கு.ஞானசம்பந்தன் பிறந்த ஊரிலேயே உள்ள கோவிலை உலகறியச் செய்துள்ளார், இந்த நூலின் மூலம் ஐயா அவர்களிடம் ஒரு வேண்டுகோள், உங்களுடைய யூ-டியூப் சேனலில் இந்தக் கோவிலைப் பற்றி ஒருநாள் பேசுங்கள், இன்னும் உலகத்தமிழர்கள் யாவரும் அறிந்து கொள்வார்கள். வழிபாடும் திருவிழாக்களும் என்று தலைப்பிட்டு, வழிபாட்டின் நோக்கம், வழிபாட்டு நெறிகள் யாவும் விளக்கி உள்ளார். திருவிழாக்கள், கடவுள் ஊர்வலம் பற்றி புறநானூறு என்ன சொல்கிறது என்ற விளக்கமும் நூலில் உள்ளது. வைகாசி பெருவிழா அங்கு மிகச்சிறப்பாக நடைபெறுமாம். இப்போதும் வருடாவருடம் அந்தத் திருவிழாவின் போது அக்கோவிலுக்கு செல்வதை வழக்கமாக வைத்துள்ளார். வரிசையாக 18 நாளும் ஒவ்வொரு நாளும் என்ன நடக்கிறது? என்ற விளக்கமும் நூலில் உள்ளது. அனைவரும் வாங்கிப் படித்து அறிந்து கொள்ளுங்கள் இக்கோவிலின் தல வரலாற்றை.




1. எளிமையை ஏற்றுக்
கொள்ளுங்கள்
அது உங்கள் அமைதியான
பாதைக்கு வழிவகுக்கும்

2. கஷ்டங்கள் மட்டும்
இல்லையென்றால் நமக்கு
போராடும் எண்ணமே
இருக்காது

3. உன்னை
பணக்காரனாக்குவது
உன் சம்பளம் அல்ல
உன் செலவு பழக்கம் தான்

4. இதயத்தை கூட
நம்பாதே அது கூட
உன்னிடம் சொல்லாமல்
கொள்ளாமல் ஒரு நாள்
துடிப்பை நிறுத்தி விடும்

5. அதிகாலை எழுந்திரித்து
கூவுவது சேவல் ஆனால்
பேர் வாங்குவது கோழி



6. நல்லவர்
கெட்டவர் என
யாரையும்
தீர்மானித்து
விடாதீர்கள்
சூழ்நிலை
தான்
எல்லோரையும்
புரட்டிப்போட்டு விடும்

நடேஷ் கன்னா
கல்லிடைக்குறிச்சி

**ஆசையே விலகிப்போ**



அடுத்தவீட்டு வசதிகளைப் பார்த்து பார்த்தே
அதுபோல தான்வாழ வேண்டு மென்று
கடுகடுத்து மனைவியவள் தொல்லை தந்து
கணவனையே சொல்லம்பால் குத்து கின்றாள் !
அடுத்தவீட்டு ஆண்மகனோ நேர்மை யின்றி
அதர்மத்தால் பெற்றதந்த வசதி யென்றே
எடுத்துரைத்த கணவனையே எடுத்தெ றிந்தே
ஏளனமாய்த் தீநாக்கால் ஏசு கின்றாள் !

உண்ணுகின்ற உணவுக்கு வறுமை யில்லை
உடல்மறைக்கும் உடைகளுக்கும் பஞ்ச மில்லை
கண்மறைய வாழ்வதற்குச் சொந்த மாகக்
கட்டியுள்ள சிறியவீடும் உள்ள திங்கே
பண்பாக நடுத்தரத்துக் குடும்ப மாகப்
பழியேதும் இல்லாமல் வாழு கின்றோம்
எண்ணத்தில் ஆசையினை வளர்த்துக் கொண்டால்
எண்ணற்ற இன்னல்தான் அறிவாய் என்றான் !

பகட்டாக நாம்வாழ வேண்டு மென்றால்
பகற்கொள்ளை குறுக்குவழி செல்ல வேண்டும்
அகந்தன்னில் இரக்கத்தை அன்பு தன்னை
அகற்றிநஞ்சாய் மனந்தன்னை மாற்ற வேண்டும்
முகம்பார்த்து பேசியவர் தூற்றி நம்மின்
முதுகின்பின் கைகொட்டிச் சிரிப்பர் என்றான்
தகவுடைய இவ்வாழ்வே போதும் ; ஆசை
தவறென்றாள் ! உணர்ந்தவளை அணைத்தான் போற்றி !

பாவலர் கருமலைத்தமிழாழன்

**தன்மானம் காத்திடு!**

போரிட்ட களமெல்லாம் புகழ்க்கொடி ஏற்றியே.. மடிந்தாலும்
மானத்தைக் காப்பவன்! தமிழன்.. தன் மானத்தின் மலராகப்
பூப்பவன்!

பிறந்தாலும் இறந்தாலும் பேர்சொல்ல வேண்டுமென..
கூர்வாளால் மார்பினைக் கிழிப்பவன்.. தமிழன்.!பயந்தே தான்
கிடப்பதைப் பழிப்பவன்!

போர்முரசு கேட்டதும்.. ஓர் மகனை அழைத்துமே.. வேல்
கொடுத்து களம்நோக்கி அனுப்புவாள்..! தமிழ்த்தாய்..
புறமுதுகிட்டாலோ பால் கொடுத்த மார் வெட்டி வீசும் வாள்.!

தாகத்தில் தவித்தாலும் தன்மானத்திற் கிழிவென்றால்..
வடக்கிருந்து உயிர்விட்டுக் காட்டுவான் தமிழன்.! தன்மான
வாழ்வுரிமை மீட்டுவான்!

இனமானம்.தன்மானம். இரண்டுமே விழிகலாம்
இன்னுயிர் அவனுக்குச் சிறிதாம்.! தமிழன்.. களம்காணப்
புறப்பட்டால் தன்மானம் ஒன்றே தாம் பெரிதாம்.!

வே.கல்யாண்குமார்.






## வேண்டாம் கொடிய குளிர்பானம் !



பாட்டிலில் தண்ணீர் வைத்து இருந்தால்
பத்து நாட்களுக்குள் புழுக்கள் வரும் !
பாட்டிலில் உள்ள குளிர்பானத்தில்
புழுக்கள் வரமாலிருக்க மருந்து உண்டு !
புழுக்களுக்கான மருந்து மனிதருக்கு நஞ்சு !
புற்றுநோய் வருவதற்கு வாய்ப்பு உண்டு !
குளிர்பானத்தை ஒன்றில் ஊற்றி அதில்
மனித பல் ஒன்றை போட்டு வைத்தால் !
பத்தே நாட்களில் கரைந்து விடும்
போட்ட பல் அவ்வளவு கொடிய நஞ்சு !
ஆராய்ச்சி செய்து அறிவியலாளர்கள்
அறிவித்தனர் குளிர்ப்பானம் தீங்கென்று !
வெளிநாடுகளில் தடை செய்யப்பட்ட
வீணான பானங்களுக்கு இங்கு அனுமதி !
ஆதாயத்திற்காக ஆளும் அரசியல்வாதிகள்
அனுமதித்தனர் கொடிய குளிர்பானங்களை !
குழந்தைகளும் அறியாமல் கொடிய
குளிர்பானத்தின் அடிமையாகி வருகின்றனர் !
படித்த பொறியாளர்கள் கூட தண்ணீருக்குப்
பதிலாக குளிர்பானம் குடிக்கும் அவலம் !
சொந்தப் பணத்தில் விலை தந்து
சோகத்தை வாங்கி சுகம் இழக்கலாமா ?
உயிரினங்களில் மனதனுக்கு மட்டுமே பகுத்தறிவு
உடன் பயன்படுத்தி சிந்தித்து குளிர்பானம் விலக்கு!
குளிர்பானம் குடிப்பதை உடன் நிறுத்துங்கள் !
குதூகலம் தரும் இளநீர் ,மோர்,பதநீர் பருகுங்கள் !

**கவிஞர் இரா .இரவி !**



## மரம் வளர்ப்போம்

அசோகர் நட்ட
மரங்களெல்லாம் கதவு
ஜன்னல்களாய்
அசோக வனங்களெல்லாம்
ரியல் எஸ்டேட்டுகளாய்
மாறி வரும் போது
மின் கம்பங்களுக்கும்
தொலைபேசிக்
கம்பங்களுக்கும் இனி
வேர்கள் முளைக்குமா?

பசுமையைப்
பஸ்பமாக்கிவிட்டு
மழைவேண்டி
யாகம் நடத்துபவர்களே!
வருணனை அழைக்க
அக்னி தூதுவனா?

மௌன அஞ்சலி
செலுத்துகிறது காற்று
அலட்சியப் புருஷர்கள்
எப்போதோ சூப்பி
எறிந்த கொட்டைகளும்
கருணை கர்த்தாக்களாம்
காக்கைகள் விதைத்தவையும்
சில விருட்சங்களாய்!

இங்கே வெட்டப்பட்ட
கேக்குத்துண்டுகளாய்
விளைநிலங்கள்
பிளவுபட்டுள்ளன
இனி சிந்துவதற்கு
விவசாயிகளிடம்
வியர்வையும் இல்லை
கண்ணீரும் இல்லை!

கருவில் சுமக்காத
பிள்ளைகளாய்
மரங்களை வளர்ப்போம்
மாறுவேடம் பூண்டுவரும்
பருவங்களின் நிஜ
உருவத்தை இனி
மரங்களின் நிழலில்
தரிசிப்போம்!



**கவிஞர்
த.அனந்தராமன்**
துறையூர்

## நிஜமும் கனவும்

நாம் பயணித்த சாலைகள்
இன்றும் கண்முன்
நிற்கின்றன, நம்மை சுமந்து
சுற்றிய வாகனம் இன்றும்
இருக்கின்றது. உயிரற்ற
பொருள்கள் நிஜமாய்
நிலைத்திருக்க, என் உயிரே
நீ மட்டும் ஏன் கனவாய்
மறைந்திருக்கிறாய்...

கல்லும் மண்ணும் காலம்
கடந்து நிற்கின்றன, என்
நெஞ்சில் நீ ? மட்டும்
நினைவாய் மிஞ்சுகின்றாய்.
உருவமற்றவை உறுதியாய்
உள்ளன இங்கே, உருவம்
கொண்ட நீ மட்டும் ஏன்
மாயமானாய் ?



## தாய்மை நிறைவடையும்

குழந்தை கத்தி அழுதால்
தாய் பதவித்து ஓடி வருவாள்
அள்ளி அணைத்து முத்தம்
தந்து முலை கொடுப்பாள்
பால் குடிக்க தான்.
முகம் பார்க்கும்
குழந்தை தாயின்
முகம் பசியை மறந்து
பார்த்து சிரிக்கும் கோடி
கொடுத்தாலும் கிடைக்காத
இன்பம் தாய்க்கு மட்டுமே
கிடைக்கும்.

### பேரின்பம்

தாய்க்கு மட்டுமே
கிடைக்கும் சொர்க்க வாழ்வு
சொந்த வாழ்வு இன்பம்
பேரின்பம் இணைந்தே
கிடைத்திடும் பேரின்ப
மயக்கம்.

### தாய்மை நிறைவடையும்

தாய்க்கு மட்டுமே
தடையில்லாத ஓடோடி வந்து
விடும் தாலாட்டு
ஆராரோ
ஆரிராரோ
நாவாசைத்து
பாடி தாய்மை
நிறைவடையும்
இன்பம்
பெறும்.



**பேராசிரியர் முனைவர்
வேலாயுதம் பெரியசாமி**
சேலம்

## பொறுப்பே பொறுப்பு!

குடும்பப் பொறுப்பு கடுகளவும்
இல்லாமல் கண்டதே காட்சி
கொண்டதே கோலம் என்று
தாறுமாறாய் தடம் புரண்டு
வாழ்ந்தவன் தாலி கட்டி
தாரம் வாய்த்த பின்
தங்கக் கம்பியாய் மாறி
தன்மானம் சிறக்க
தலை நிமிர்ந்து வாழ்ந்து
காட்டியவனை வளமார்ந்து
அறிவேன்... மழைக்குக் கூட
பள்ளிப் பக்கம் போகாமல்
வேலை ஒன்றும் இல்லாமல்
வெட்டியாய் அலைந்து
விவகாரப் பொழுதுகளில்
வீச்சரிவாள் காட்டி
வீரமானவன்... வெளிச்சமாகி
உள்ளூர் தாதாவாய்
உருவெடுத்தவன்...
உடன் வந்த சிலரால்
ஊராட்சி கவுன்சிலராகி
உயர்ந்தவன்...
பதவிக்கு வந்ததும்
பயம் தலைக்கேறி
பவயமாய் நடந்தேறி
பக்குவப் பட்டு
பொறுப்புக்குப் பெருமை
சேர்த்து நாளும் புகழ்
பெற்றவனையும்
நனகறிவேன்...
தேனையும் மீனையும்
திண்ணிய ராமனிடம்
தேடிக் கொண்டு வந்து
சகோதர சங்கமத்தில்
சமமாய் சேர்ந்து சரித்திரம்
படைத்தான் வேடனே
ஆனாலும் வந்து கலந்த
பின்பு குறுக்கம்
தொலைத்து
பெருக்கம் பெற்றான்
கீர்த்தி மிகு குகன்...
பானைச் சோற்றுக்கு
பதமாய்ச்
சொன்ன இவை
அனைத்தையும் இணைத்து
வைத்து ஆய்ந்தால்
இனிய பாடம் எளிதாய்
கிடைக்கும் அன்றோ...
ஆமாம் ஆமாம்...
பொறுப்பு வந்து விட்டால்
யாருக்கும் எளிதாய் இங்கே
பல்லாண்டு பழக்கமே
ஆனாலும் பொல்லாங்கு
போய்விடும்.... பிழைப்
பழக்கங்கள்பொசுங்கிப்
போகும்... பொதுவான
உண்மையிது...
பிசிறில்லா பூமியின்
தொடர் சுற்றுக்கும்
தொன்மைக் காரணமும்
இதுவே காண்...
ஆனாலும் அடிச்சறுக்கல்
இதிலும் உண்டு...
ஓங்கி உயர் புகழ் பெற்றிட்ட
உலகத் தலைவர்கள்
இமயம் தொட்டு உச்சிக்கே
ஏறினாலும் பொறுப்பே
இல்லாமல் பூமிக்குப் பாராமாய்
விளங்கி பாதகம் பல
புரிகின்றனரே...
ஆதாரம் இல்லாத
வெறும் குற்றச் சாட்டா இது?
இல்லை...இல்லை...
பொறுப்போடு இயங்கி
பதவிக்கு நேர்மையாய்
இருந்திருந்தால்
போரென்னும் பொல்லா
அரக்கன் இந்தப் பூமியில்
இப்படி காலம் காலமாய்
நிலைத்து நின்றிருப்பானா?
அனைவரும் சிந்திக்க
வேண்டிய அற்புதத்
தருணமிது...
பொறுப்புடன்
யோசிப்போம்
போர்ப்பகை இல்லா
புத்தம்புது பூமியைப்
படைப்போம்!



**நெல்லை குரலோன்**
பொட்டல் புதூர்



## "மறக்காது வாக்களிப்பீர்"

உரிமை தரும் உன் வாக்கு
உனக்கே உரியது!
உலகம் தழைக்கும்
விதை அது உணர்ந்திடு!

மாசுடன் இருள்சூழின்
மண்ணும் அழியும்!

மக்களாட்சித்தத்துவம்
மங்கும் கவனமிரு!
பொய்யின் புனல்
வந்து பொங்கிடும்
போதும்

பொற்சிந்தை
தளராது நிலைபெற்று
நிமிர்ந்திடு! கையில் விழும்
மைத் துளி கண்ணீரல்ல
காலத்தின் தீர்ப்பென்று
கருதிடு உறுதியாய்!
மாற்றந்தரும் செயலிதை
மறவாது வாக்களி!

இன்று தவிர்த்திடின்
ஜனநாயகம் சுணங்கும்
எதிர்காலம் கசக்கும்!
மண்ணின் மரபை
மதிக்கின்ற வேந்தனே
மக்களின் விருப்பமாய்

வந்திட வேண்டுமெனில்
வாக்கினைப் பதித்திடு
வரலாற்றைச் செதுக்கிடு!
மறக்காது செல்...
தயங்காது வாக்களி
மக்களாட்சி
வாழ்ந்திடணும்!



**முகில் தினகரன்**
கோயமுத்தூர்



சிலுவை சுமக்கும்
இரட்சகனாய் முள்
வேலிகளோடு எனது புதிய
பாதை உருவானது.

உன்னிடம் எல்லாமும் பிடித்து
தான் போனது நீ தந்த
ஏமாற்றங்களையும் சேர்த்து!

மாற்றமும் வேண்டாம்
நீ தந்த ஏமாற்றமும்
வேண்டாம் திரும்ப
என் காதலை
கொடுத்து விடு இறைவா என
கையேந்துவதை தவிர
வேறென்ன செய்ய!

கொக்கரிக்கும் கோபங்களும்,
சின்னஞ்சிறு சச்சரவுகளும்
தற்காலிகமானவை.
என் காதல் மட்டும்
நிரந்தரமானவை என்பதை
எப்போது உணர்வாயோ?
என் கண்மணியே!

உன் பார்வை என்ன
ஆசிட்டா? பார்த்ததும்
கரைகிறேனடி!

நீ சிணுங்கினால் கூட
சிலிர்த்து போய் விடுகிறது
சில்லறை மனசு!

ஈவ் டீசிங் கேஸ் கூட
போட்டுக் கொள்
14 நிமிடம் கடந்தும்
இன்னும் கொஞ்சம்
உன்னை பார்த்து
கொள்கிறேன்!

அவள் மீது ஆள் கடத்தல்
வழக்கு பதிவு செய்யுங்கள்
ஏனெனில் உடல்,உயிர் உருகி
தொலைய வைப்பதால்!

நீ மிரட்டினாலும்
உன்னை மட்டுமே
விரட்டுகிறது காதல் மனசு!

அன்புக்காக கெஞ்ச
வைப்பவர்கள், பாசத்திற்காக
ஏங்க வைப்பவர்கள் எல்லாம்
உண்மையான உறவுகளே
இல்லை இது மாதிரியான
உறவுகளிடமிருந்து
சற்று விலகியே இருங்கள்–
ஏனெனில் இவர்கள் எல்லாம்
மிருகத்தை விட
கொடுமையானவர்கள்.

நீ பேசும்மௌனங்களை
புரிவதற்கு
மனமிருக்கும் போது
பாஷைகள் எதற்கு?

வலி கொடுத்தாள்
வழியும் கிடைத்தது

வண்ணத்துப்பூச்சியை
இரசிப்பது வரம்
வண்ணத்துப்பூச்சியாய்
உருமாறி வாழ்வது சாபம்
நீ ,நீயாய் வாழ்வதே சுகமென
அனுபவப்பாடம் கிடைக்கும்
வரை அற்ப மனிதன்
உணர்வதேயில்லை!

கண்களால் கொல்வதை
எப்போது நிறுத்தப்போகிறாய்?
கொஞ்சம் ரெஸ்ட் கொடு
ஆப்டர் தி ப்ரேக்
அணு,அணுவாய்
சித்ரவதை செய்து
காதலித்து கொன்று விடு!


திறந்த வாசலில்
எதுவும் தெரியாது
மூடிய ஜன்னலில்
இடுக்களின் வழியே தெரியும்
ஓர் பொல்லாத உலகம்!

அந்த கால மூமாக்களை
போன்ற ஆகச்சிறந்த
கதைச்சொல்லிகள் எல்லாம்
ஆண்ட்ராய்டு
பேரக்குழந்தைகளுக்கு
ஏனோ கிடைக்கவில்லை!

வாய் மூடி பேச
கற்றுக்கொள்ளுங்கள்
மனதில் உள்ளதையெல்லாம்
உளறாதீர்கள் பொல்லாத
உலகம் உங்களை
ஜோக்கராக்கி விடும்?
இரகசியம் காக்க
தவறினால்!



**லி.நௌஷாத் கான்**




## மனமும் நல்ல குணமும்...

நீ சந்தா செலுத்தி வாங்கும்
அளவிற்கு அந்த இதழில்
அப்படி என்ன தான்
இருக்கிறது?! என்ற
என் வினாவிற்கு விடையாக
உன் கருத்திலிருந்து என்
கைக்கு மாறியது
அன்பு விஜயகாந்த் புத்தகம்!
எத்தனை எத்தனையோ
விளம்பரங்கள் அதில்
இருப்பினும்
அத்தனையையும்
தாண்டி ஓர் அழகிய
கருணை உள்ளம்
என்னவெல்லாம்
உதவி செய்யும்
எப்படியெல்லாம்
ஈரமுடன் இயங்கும் என்று
அந்தப்புரட்சிக் கலைஞரைப்
பற்றியும் அதனைத் தொடர்ந்து
நீ அவர் ரசிகையாகவும்
இருப்பதை அறிந்து
சிலிர்த்தேன்!
பிறகு தான் எனக்கு
நன்றாகவே புரிந்தது
கா த லி லு ம் கூ ட நீ
சிறந்த வள்ளலாகவே
இயங்குவது!
என் மனதை முழுவதுமாய்
நிரப்பி விட்டது உன்
கா த ல் மட்டுமல்ல
உன்
குணமும் உன்
தலைவரின் நல்ல
மனமும்!



**முத்து ஆனந்த்**
வேலூர்



1. கடலின் நீரை போல பல
உறவுகள் நம்மைச் சுற்றி
உள்ளது ஆனால் தாகத்திற்கு
உதவாது

2. அன்று வீடுகள்
மண்ணாக இருந்தன மனித
உள்ளங்கள் பொன்னாக
இருந்தது இன்று வீடுகள்
பொன்னாக உள்ளது
மனித மனங்கள் கல்லாக
உள்ளது

3. கற்களைக் கண்டு
பயந்தால் சிலையாக முடியாது
வலிகளை கண்டு பயந்தால்
வாழ்க்கையில் ஜெயிக்க
முடியாது

4. நாம் இறந்த பின்பு
எவ்வளவு சீக்கிரம் மறக்க
படுகிறோம் என்பதை
உணர்ந்தால் பிற மனிதர்களை
திருப்தி படுத்துவதை
விட்டுவிட்டு நமக்கான
வாழ்க்கையை நாம்
நாம் வாழ்வோம்


5. எல்லோர் வாழ்விலும்
நாம் வேராக இருக்க முடியாது
சிலர் வாழ்வில் உதிரும்
இலையாகவும்
சிலர் வாழ்வில் வெட்டப்படும்
கிளைகள் ஆகவும் இருந்து
தான் ஆக வேண்டும்
இதுதான் எதார்த்தம்

6. உறவுகள் இரண்டு
வகைப்படும் ஒன்று அன்பை
தரும் மற்றது அனுபவத்தை
தரும் அன்பைத் தரும்
உறவை மனதில் வை
அனுபவத்தை தரும் உறவை
நினைவில் வை

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

# நூல் விமர்சனம்

நூலின் பெயர்: வரலாற்றில் வைணவம்
ஆசிரியர்: கலைமாமணி முனைவர் பாலஇரமணி
வெளியீடு: சாரதா பதிப்பகம்
விலை: ₹160
நூல் கிடைக்குமிடம்: கௌரா புத்தகமையம்
தொடர்புக்கு: 9952034876




வைணவம் பற்றி 10 அத்தியாயங்களாகப் பிரித்து அழகுற விளக்கியுள்ளார். நூலின் இறுதியில் 108 திவ்யதேசங்களின் பட்டியலையும் தந்துள்ளார். போற்றிப் புகழும் நூற்றியெட்டு எனும் இந்த அத்தியாயத்தில்:

ஸ்ரீ அனந்தாழ்வன், திருமலையில் புஷ்ப கைங்கர்யம் செய்த காலத்தில், திருவரங்கத்து வைணவர் ஒருவர் அவரை சந்தித்து, "உண்மையான வைணவனின் இலக்கணம் என்ன?" என்று கேட்டார்.

அதற்கு அனந்தாழ்வானும், "கொக்கு போல, கோழி போல, உப்பு போல, உம்மைப் போல வைணவன் இருக்க வேண்டும்" என்றார்.

நீரில் ஒற்றைக் காலுடன் நிற்கும் கொக்கு ஒன்று," தனக்குத் தேவையற்ற மீன்களை தள்ளிவிட்டுத் தான் எதிர்பார்க்கிற மீனுக்கு காத்திருப்பதைப் போல, உலக இன்பங்களைப் புறந்தள்ளிவிட்டு எம்பெருமான் கைங்கர்யத்தையே எதிர்நோக்கியிருக்க வேண்டும். இதுதான் கொக்கு போலே" என்றார். "கோழி ஒன்று குப்பையைக் கிளறி, இறுதியில் கிடைக்கும் நெல்மணிக்காக மற்றவற்றைக் கொத்திப் புறந்தள்ளுதல் போல, வைணவமும் வேறு மார்க்கங்களைப் புறக்கணித்துவிட்டு, எம்பெருமானின் திருவடிகளைப் பற்றுவதையே குறிக்கோளாக கொள்ளல் வேண்டும். இதுதான் கோழியைப் போலே" என்றார். "சமையலில் உப்பு பெரும்பங்கு வகித்தாலும், நம் கண்ணுக்குப் புலப்படாது சுவையை மட்டுமே அது தருகிறது அது போலவே ஆடம்பரமில்லாமல், நற்செயல்களால் மட்டுமே வைணவன் உயர்ந்து நிற்க வேண்டும். இதுதான் உப்பு போலே" என்றார்.

என்னைப் பார்க்க வந்துவிட்டு, நான் வரத் தாமதமானாலும் அதைப் பொருட்படுத்தாமல் பொறுமை காத்தீர்கள் அல்லவா? இது வைணவனின் இலக்கணத்தில் ஒன்றாகும். உம்மைப்போலே ஒரு வைணவன் எம்பெருமான் கருணையைப் பெற பொறுமையுடன் காத்திருக்க வேண்டும். இதுதான் உம்மைப் போலே" என்ற அனந்தாழ்வானின் விளக்கமே வைணவத்தை சிறக்கச் செய்கிறது.

**ஸ்ரீகாந்த் திருச்சி**


FREE MARRIAGE
INFORMATION CENTER :
இலவச திருமண
தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889



ADIYOGI
REAL ESTATE
WHOLESALE
VADACHENNAI CALL DRIVER
ஆதியோகி
ரியல் எஸ்டேட்
CMDA DTCP அப்ரூவல்
வீட்டுமனைகள் விற்பனை
_CONTACT_
8939228901


Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Call :7871617005


SEVEN STARS
LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
We Build Perfection
Our Services are ...
Freight Forwarding, International Courier,
Customs Clearance, Cargo Movement by Air,
Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town,
Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com



We Are Urgently Hiring!
Marketing Manager
Ad Sales (Print Media)
Package Rs. 4.8 LPA
Company : PADMA DIGITAL BROADCAST PRIVATE LTD
Location : Chennai
Padma Digital a leading name in print media, is looking for a Marketing Manager - Ad Sales to join our dynamic team.
Key responsibilities for Marketing Manager
• Minimum 5 years of experience in print media ad sales
• Proven experience in space selling
• Strong background in field sales and client acquisition
• Excellent communication and negotiation skills
• If you're a results-driven professional with a passion for media sales, we want to hear from you
If you are interested
Do send your resume and portfolio to
padmamediapublications@gmail.com
Call: 9337501889


Bhoopathy Bakery
BAKED EVERYDAY
BISCUIT, CAKE, BUN VARIETIES
WHOLESALE & RETAIL
98845 15409
No:11/16, Gandhi Nagar, E.H Road, Tondiarpet, Chennai - 600 081
NOW AVAILABLE IN
100Kgs.com


Supreme
Car Wash & Detailing
REDEFINING CAR CARE
PREMIUM SERVICE
638364389 9840882711


WANTED:
செக்யூரிட்டி
வேலைக்கு
ஆண்கள் தேவை
• வானகரம் பைபாஸ் ரோடு
• முகப்பேர்
• அம்பத்தூர்
• பட்ரவாக்கம்
• பெரம்பூர்
• மாதவரம்
• திருமுல்லைவாயல்
Ph. 9344183870
Ph. 8807470107
Call now for more details and interview.
APPLY NOW


WANTED
EXPERIENCED
SOCIAL MEDIA
CONTENT CREATORS
94386 10756


LOW COST
MATRIMONY
WEBSITE
CALL: 7789951009


Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500 per day
Work From Home Jobs
Ananda Bhaskar
Rs 8000 - Rs 15000 per month
9337501889
7789941009


WANTED
MARKETING HEAD
REAL ESTATE
Fixed Salary Rs.25000/-
& Above + INCENTIVE
(Monthly up to - 1.5 Lakhs)
Age: 25 to 40 Experienced Only
Office @ Anna Nagar
9790021367


WANTED
COLLECTION EXECUTIVES
TELECALLERS
FOR MNC BANK.
Sal.23,000/-
161, Bells Road, Chennai - 05.
Ct.: 98410 38488 / 93848 17349


ஆட்கள் தேவை
வார சம்பளத்திற்கு
லேபர் வேலைக்கு
ஆட்கள் தேவை
உணவு மற்றும் தங்கும் இடம் இலவசம்
OMR பெருங்குடி
சென்னை
Contact
9790979539



PLOT SALE
ORAGADAM 11L to 23L
TAMBARAM 51L to 69L
OMR 26L to 51L
ECR 52L to 75L
9626777627


முனீஸ்வரர் துணை
கங்கோதரி
எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.
GANGOTHARI ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோதரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அணுகவும்.
97103 48377, 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.


Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


ADVERTISE WITH US!
CONTACT US
9337501889


THINKING to BUY / SELL / RENT a PROPERTY
New / Resale... Residential / Commercial...
*Plots
*Flats
*House
*Villa
*Bungalows
*Farm Land
*Ware Houses
*Factory Sites
*Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call:7871617005


Just499
Pick Any Website
Just ₹499 Only!
Affordable Website Solutions for Every Business
Matrimonial Website
Real Estate Website
E. Commerce Website
Restaurant Website
Shopping Website
News Website
MLM Binary Website
MLM Level Website
MLM Gaming Website
Call: 7789951009
WhatsApp: 7789951009


WE'RE
HIRING
TELECALLERS
SALARY STARTING FROM
RS.20000/- ONWARDS
+91 7871617005


Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 % OFF SPECIAL OFFER
DISCOUNT
90 DAYS
MONEY BACK GUARANTEE


just499
REAL ESTATE SOFTWARE
We Provide Complete Real Estate Software Solutions
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


Just499
JOB WEBSITE SOFTWARE
We Provide Complete Job Portal Software Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com



GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
vilambarampage@gmail.com
7789941009




















**WANTED**

M/F லோடுமேன்,பிக்கர், ஹெல்பர், வர/மாத சம்பளம்: 450-700. உணவு இடம் free day/N8 shift

7540003588










**செக்யூரிட்டி கார்டுகள் தேவை**

கோடம்பாக்கம் சேத்துப்பட்டு புரசைவாக்கம் கோட்டூர்புரம் பகுதிகளில் வேலை செய்ய செக்யூரிட்டி கார்டுகள் தேவை

அணுகவும்: 9840861539












# பல்சுவை களஞ்சியம்



# ஆலையில்லா ஊரில் இலுப்பைப்பூ சர்க்காரை என்பது போல...

கோவைக்காய் வெளிநாட்டில் வளராது அதனால் வெள்ளரிக்காயை புகழ்கிறார்கள்

கொத்தவரங்காய் வெளிநாட்டில் வளராது அதனால் பீன்ஸை புகழ்கிறார்கள்

முருங்கைக்காய் வெளிநாட்டில் வளராது அதனால் புரொக்கோளியை புகழ்கிறார்கள்

தேங்காய் வெளிநாட்டில் வளராது அதனால் பீட்ரூடை புகழ்கிறார்கள்

அரசாணிக்காய் வெளிநாட்டில் வளராது அதனால் உருளைக்கிழங்கை புகழ்கிறார்கள்

பூசணிக்காய் வெளிநாட்டில் வளராது அதனால் முள்ளங்கியை புகழ்கிறார்கள்

வாழைப்பூ அதிகம் வெளிநாட்டில் வளராது அதனால் முட்டைக்கோசைப் புகழ்கிறார்கள்
நிலக்கடலை வெளிநாட்டில் வளராது அதனால் பாதாம் பருப்பை புகழ்கிறார்கள்
மிளகு வெளிநாட்டில் வளராது அதனால் பச்சை மிளகாயை புகழ்கிறார்கள்

கடுகு அதிகம் வெளிநாட்டில் வளராது ஆலிவ் ஆயிலை புகழ்கிறார்கள்

வெளிநாட்டு மோகம் நம்நாட்டை அழித்துக்கொண்டே வருகிறது. தடுப்பார் யார்?

ஏன் கனி தரும் மரங்கள் மட்டும் இல்லை ?

அரசும் மீடியாவும் பிரபலங்களும்...

'மரம் நிழல் தரும், காற்று தரும், மழை தரும்'னு சொல்லுவாங்க...! ஆனா "கனி தரும்னு மட்டும்" சொல்லவே மாட்டாங்க.

ஏன்?
இப்ப சாலையோரம் வைத்திருக்கும் மரம், அரசுப் பள்ளி, மருத்துவமனை, அலுவலகங்கள் இங்கெல்லாம் இருக்கும் மரங்களைக் கவனியுங்கள்....
அங்கு கனி தரும் மரங்கள் எதுவுமே இருக்காது.

ஏன்?
எங்கெல்லாம் புளிய மரம் நிறைய உள்ள சாலைகள் உள்ளதோ அந்தச் சாலைகளையெல்லாம் விரிவு படுத்துகின்றேன் என்று அரசு அந்தப் புளிய மரங்களை வெட்டிவிடும்.

விரிவாக்கத்திற்குப் பின் வெற்றுமரங்களையே நடும்.



அரசும் தொண்டு நிறுவனங்களும் வெற்று மரங்களை மட்டுமே நடும்.

பொதுமுடக்கத்தில் பல ஆயிரம் பேர் பல கல் தொலைவு சாலையில் பசியோடு நடந்து சென்றனர்.

அப்பொழுதும் கூட அந்த மக்கள் காய் கனி மரங்கள் இருந்தால் பசிக்கு உணவாகுமே என்று சிந்திக்கவில்லை.
எனக்குத் தெரிந்து ...

ஏன் கனி தராத மரங்களை மட்டுமே நடுகின்றனர் என எவரும் சிந்திக்கவில்லை.

நாமெல்லாம் குரங்கிலிருந்து பிறந்தோம் என்றால் நமது முதன்மையான உணவே பழம்தானே.

ஆனால் நாமே சிந்திக்கவில்லையே.

மா பலா நாவல் அத்தி கொய்யா.... என்று எத்தனை மரங்கள் உள்ளன. அவையெல்லாம் ஏன் நடப்படவில்லை..?

நம் சிந்தனையை எப்படி மழுங்கடித்தனர்.
காரணம்...
MMMC: Mass Media Mind Control.

"மரம் கனி தரும்" என்ற வரியை எல்லா வகையிலும் மறைத்தனர்.

தொடர்ந்து மரம் நிழல் தரும் காற்று தரும் மழை தரும்

என்று மட்டுமே சொன்னார்கள்.... அதை மட்டுமே மனிதனும் நினைத்துக் கனியை மறந்தான். கனி நமக்கான ஊட்டச்சத்து நிறைந்த உணவு .

ஆனால் இதையெல்லாம் தடுத்து கார்ப்பரேட், ஊட்டச்சத்து உணவு என்று கண்ட குப்பைகளை நம்மிடம் திணிக்கிறது.

அதையெல்லாம் ஏதோ 'ராயல் ஃபேமிலி' போல 'ஸ்டைலா' வாங்கித் தின்னு உடம்பு நாசமாப் போனதுதான் மிச்சம்.
கார்ப்பரேட்டுக்கோ பெரும் இலாபம்.
நல்லா புரிஞ்சிக்குங்க...
'இயற்கையிலிருந்து நாம் இலவசமாக எதையும் பெற்றுவிடக்கூடாது' என்று கார்பரேட் தெளிவா செயல்படுறாங்க.
மண்ணில் பிறந்த அனைத்து உயிரினங்களுக்கும் இயற்கையாகவே உணவு படைக்கப்பட்டிருக்கிறது.

அதை முழு முற்றாகத் தடுத்து,

'பணத்தால் மட்டுமே எதையும் வாங்க முடியும்' என்ற நிலையை உருவாக்குகிறது கார்ப்பரேட்..

நீங்கள் கற்பனை பண்ணிப் பாருங்கள்...

கருவை மரங்கள் உள்ள இடங்களிலும் மற்றும் அனைத்து இடங்களிலும் மா, பலா, வாழை, நாவல் போன்ற மரங்கள் இருந்தால் இந்த இடமே அருமையாகக் காட்சி அளிக்கும்.
தை மாதங்களில் பூத்துக் குலுங்கும்.
உணவுப் பஞ்சம் என்ற ஒன்றே இருக்காது.
மனிதன் மட்டுமின்றி ஏராளமான பறவைகள், விலங்குகள், பூச்சிகள் போன்ற பல்வேறு உயிரினங்களுக்கும் உணவாகும்.

நம் மனநிலையை மகிழ்வாக இருக்கும். உண்மையான இன்பத்தை நாம் உணரலாம்.

நீங்கள் மீண்டும் மீண்டும் இதே போல் கற்பனை செய்து வெளி உலகத்துக்கு வந்து பாருங்கள்....

அப்பொழுது 'உங்களுக்குத. தெரிவதெல்லாம் கிரிக்கட் மைதானங்களும் கருவை மரங்களும் மற்ற வெற்று மரங்களும் உள்ள வறண்ட பூமியைத்தான்.'

ஓர் உயர்ந்த மண்ணை இப்படி நரகமாக்கிவிட்டு ஊடகங்கள் சொல்வன மட்டுமே உலகில் உள்ளதாகவும் நடப்பதாகவும் நம்புவது அறியாமையின் உச்சம்.

அவை ஒட்டுமொத்த உண்மையையும் மறைத்துள்ளன.
ஊடகம் ஓர் ஈவு இரக்கமற்ற மாபெரும் பயங்கரவாதி.
கார்ப்பரேட் அறிவாளியல்ல...
நாம் சிந்திக்கவில்லை. அவ்வளவே.

'மனிதன் சிந்திக்காதவரை' இவை எல்லாம் தொடர்ந்து கொண்டேதான் இருக்கும்.

இப்படிக்கு..
பலன் தரும் #கனிமரங்களாகிய நாங்கள் மற்றும்
எங்கள் கனிமரக் குடும்பத்தார் !!!



# மீம்ஸ்









# விடுகதை

| | |
|---|---|
| முதுகிலே சுமை தூக்கி முணு முணுக்காமல் அசைந்து வரும் அது என்ன? | நத்தை |
| ஊர் சுற்ற கூட வருவான் ஆனால் உள்ளே வரமாட்டன் அவன் யார்? | செருப்பு |
| உரச உரச குழைவான், பூச பூச மனப்பான் அவன் யார்? | சந்தனம் |
| தொப்பி போட்ட காவல் காரன், உரசி விட்டால் சாம்பல் ஆவான் அவன் யார்? | தீக்குச்சி |
| கரைந்து போகுது வெள்ளி தட்டு | தேய் பிறை |
| சிறு தூசி விழுந்ததும் குளமே கலங்கியது அது என்ன? | கண் |



# ஜோக்ஸ்

பையன்: தரகரே! பொண்ணு கருப்பா இருந்தாலும், சிவப்பா இருந்தாலும் பரவாயில்லை...

ஆனா பொண்ணு கண்டிப்பா ஸ்மார்ட் போன் வச்சிருக்கணும்..

தரகர்: என் சார்?

பையன்: ஏனா ஸ்மார்ட் போன் வச்சிருக்க பொண்ணு தான் குனிஞ்ச தலை நிமிராம போகும்..

##############################

பெண்: ஹலோ இது கஸ்டமர் கேர் தானே?

கஸ்டமர் கேர்: ஆமாம் சொல்லுங்க மேடம்.

பெண்: என் அஞ்சு வயது பையன் சிம் கார்டை விழுங்கிட்டான்.

கஸ்டமர் கேர்: ஐயோ பாவம் அப்படினா உடனே டாக்டர்கிட்ட கூட்டிடு போங்க மேடம்.

பெண்: இல்லை அந்த சிம்ல 95 பைசா பேலன்ஸ் இருந்துச்சி அவன் பேசும் போது காசு போகுமா சார்?

கஸ்டமர் கேர்: ????

##############################

Wife: ஏங்க சமையல்காரியை நிறுத்திட்டு இனி நானே சமைக்கிறேன் எனக்கு எவ்ளோ சம்பளம் கொடுப்பீங்க?

Husband: உனக்கு எதுக்குடா சம்பளம் நீ சமைக்க ஆரமிச்சிட்டாலே என் இன்சூரன்ஸ் பணம் மொத்தமும் உனக்குத்தானே...

##############################

கணவன் :
வொய்ஃபுக்கு(wife) அர்த்தம் தெரியுமா? வித்அவுட் இன்பர்மேஷன் ஃபைட்டிங் எவ்ரிதிங் ( without information fighting everthing)

மனைவி : அதுக்கு அர்த்தம் அப்படி இல்லைங்க ! வித் இடியட் ஃபார் எவர் ( with idiot for ever)

கணவன் : தேவைதான்டி எனக்கு !

##############################

கணவர்:
இது மாதிரி என்கிட்டே தொடர்ந்து சண்டை போட்டுக்கிட்டே இருந்தா ஒரு நாள் மிருகமா மாறிடுவேன் ஜாக்கிரதை !

மனைவி: அட நீங்க வேற எலியைப் பார்த்தெல்லாம் நான் பயப்பட மாட்டேன்!

##############################

மனைவி : என்னை, பெண் பார்க்க வந்தன்னிக்கு, நீங்க டிபனை தொடவே இல்லையே ஏன்?"

கணவன் : ரெண்டாவது 'ஷாக்' எதுக்குன்னு, தான்..!

##############################

"தரகரே... நீங்க ஒரு பெரிய விஷயத்தை மறைச்சிட்டீங்க."

"என்ன சொல்றீங்க?"

"பெண் அஞ்சடி உயரம்னு சொன்ன நீங்க, மூணு அடி அகலம் இருப்பாள்னு சொல்லவே இல்லையே..."





# சமையல் அறை ஸ்பெஷல்



## முட்டை குழம்பு

முட்டை குழம்பு செய்ய தேவையான பொருட்கள்:
முட்டை 3
வெங்காயம் 1 (நறுக்கியது)
தக்காளி 1 (நறுக்கியது)
கொத்தமல்லி சிறிதளவு (பொடியாக நறுக்கியது)
கரம் மசாலா 1 டீஸ்பூன்
உப்பு தேவையான அளவு
எண்ணெய் 2 டேபிள் ஸ்பூன்
தாளிக்க:
பட்டை 1/2
கறிவேப்பிலை சிறிதளவு
கிராம்பு 1
அரைக்க தேவையான பொருள்:
தேங்காய் துருவல் 2 டேபிள் ஸ்பூன்
வரமிளகாய் 2
பூண்டு 4-5 பற்கள்
இஞ்சி 1/2
மல்லி 1/2 டீஸ்பூன்
மிளகு 1 டீஸ்பூன்
சீரகம் 1 டீஸ்பூன்
பருப்பு உருண்டை குழம்பு செய்வது எப்படி
முட்டை குழம்பு வைப்பது எப்படி

செய்முறை விளக்கம்:
முட்டை குழம்பு செய்வது எப்படி

கிராமத்து ஸ்டைலில் சுவையான முட்டை குழம்பு



செய்ய முதலில் ஒரு பாத்திரத்தில் முட்டை வேக வைப்பதற்கு சிறிதளவு தண்ணீர் ஊற்றி, முட்டைகளைப் போட்டு வேக வைத்து முட்டையின் மேல் இருக்கும் ஓடுகளை உடைக்க வேண்டும்.

பிறகு முட்டையை நீளவாக்கில் இரண்டாக வெட்டி தனியாக வைக்கவும்.

இப்போது அடுப்பில் ஒரு வாணலியை வைக்கவும். வாணலியில் மேல் அரைக்க கொடுத்துள்ள அனைத்து பொருட்களையும் லேசாக வறுத்து எடுத்துவிட்டு, மிக்ஸியில் சிறிதளவு தண்ணீர் சேர்த்து பேஸ்ட் போன்று அரைத்து எடுத்துக்கொள்ளவும்.

அதன் பிறகு அடுப்பில் இன்னொரு வாணலியை வைத்து, அதில் சிறிதளவு எண்ணெய் ஊற்றி எண்ணெய் காய்ந்ததும், அதனுடன் பட்டை, கறிவேப்பிலை மற்றும் கிராம்பு சேர்த்து தாளிக்கவும்.

தாளித்த பிறகு அதில் நறுக்கி வைத்துள்ள வெங்காயம், தக்காளி சேர்த்து பொன்னிறத்திற்கு வதக்கவும்.

வதக்கிய பிறகு உப்பு மற்றும் அரைத்து வைத்துள்ள பேஸ்ட் சேர்த்து நன்றாக கிளறிவிட்டு, 3-4 நிமிடம் வரை கொதிக்கவிட்டு இறக்க வேண்டும்.
பின் அதில் 1/2 -1 கப் அளவிற்கு தண்ணீர் ஊற்றி கொதிக்கவிடவும். அதில் கரம் மசாலா மற்றும் வேக வைத்துள்ள முட்டைகளை சேர்த்து, 5 நிமிடம் கொதிக்கவிட்டு இறக்கினால் சூப்பரான சுவையான கிராமத்து ஸ்டைல் முட்டை குழம்பு தயார்.. இப்போது சாதத்தில் சுட சுட முட்டை குழம்பை ஊற்றி பரிமாறலாம்.

## சமையல் டிப்ஸ்



* பக்கோடா, வடை முதலியவை செய்யும் பொழுது சிறிது சோம்பு அதிகமாக சேர்த்தால் ருசி தூக்கலாக இருக்கும்.

* வெங்காயம் வதக்கும்போது சிறிது சர்க்கரை சேர்த்தால் வெங்காயம் நன்கு வதங்கும். சர்க்கரை வெங்காயத்தில் உள்ள ஈரப்பதத்தை உறிஞ்சி மென்மைப்படுத்தும்.

* எந்த வகையான இனிப்பு பலகாரம் செய்தாலும் சர்க்கரைக்கு பதில் வெல்லம் அல்லது சிறிது தேன் கலந்து செய்தால் சுவை அதிகமாக இருக்கும்.

* பால்கோவா செய்யும்போது இரண்டு ஸ்பூன் கோதுமை மாவை துணியில் கட்டி பாலில் வைத்தால் பால்கோவாவின் நிறம் கிரீம் போல் கிடைக்கும்.

* இரண்டு ஐஸ் கட்டிகள் மற்றும் கல் உப்பை மிக்ஸியில் சேர்த்து அரைத்தால் பிளேடு கூர்மையாக மாறும்.

* பழங்கள் வைத்திருக்கும் கூடையில் சிறிது கிராம்பு போட்டு வைத்தால் பழங்கள் நீண்ட நாட்களுக்கு சுவை மாறாமல் இருக்கும்.

* இட்லிக்கு மாவு அரைக்கும்போது சிறிது பழைய சாதம் மற்றும் அவல் சேர்த்து அரைத்தால் இட்லி மிருதுவாகவும், மென்மையாகவும் இருக்கும்.

* சேமியா பாயசம் செய்யும்போது சேமியா குழைந்து விட்டால் இரண்டு சொட்டு எலுமிச்சை சாறு சேர்த்தால் சேமியா தனித்தனியாக பிரிந்து விடும்.

* எண்ணெய் பலகாரங்களை வைக்கும் டப்பாவில் உப்பை ஒரு துணியில் முடிச்சு போட்டு வைத்தால் காரல் வாடை வராது. நீண்ட நாட்களுக்கு மொறுமொறுப்பாக இருக்கும்.

* தேங்காயை தண்ணீரில் நனைத்து உடைத்தால் தேங்காய் சரிபாதியாக உடையும்.

* சப்பாத்திக்கு மாவு பிசையும்பொழுது சிறிது வெதுவெதுப்பான நீர் மற்றும் பால் சேர்த்து பிசைந்தால் சப்பாத்தி நீண்ட நேரம் மிருதுவாக இருக்கும்.

* தயிர் மிகவும் புளித்து விட்டால் ஒரு டம்ளர் நீர் ஊற்றி 10 நிமிடம் கழித்து அந்த நீரை வடித்து விட்டால், புளிப்பு நீருடன் சென்று விடும். புளிப்பில்லாத தயிர் கிடைக்கும்.

* மீன் குழம்பு செய்யும்போது சிறிது கடுகை வறுத்து அரைத்து மீனில் தடவி ஐந்து நிமிடம் கழித்து குழம்பில் சேர்த்தால் மீன் உடைந்து போகாது.

## ஆந்திரா ஸ்டைல் பூண்டு பருப்பு பொடி செய்வது எப்படி..?

நம் அனைவருக்குமே ஆந்திரா ஸ்டைல் உணவுகள் அனைத்தும் பிடிக்கும். அதிலும் குறிப்பாக ஆந்திரா என்றால் திருப்பதி லட்டும், பருப்பு பொடி தான் நம் நினைவிற்கு வரும். அந்த அளவிற்கு மிகவும் பிரபலமானது ஆந்திரா உணவு வகைகள். பருப்பு பொடி செய்து வைத்துக்கொண்டு சூடான சாதத்தில் போட்டு நெய் ஊற்றி சாப்பிட்டால் அவ்வளவு அருமையாக இருக்கும்.
இதற்காகவே, பலபேர் வீட்டில் பருப்பு பொடி தீராமல் பார்த்துக்கொள்வார்கள். அந்த வகையில் நீங்கள் வீட்டிலேயே ஆந்திர ஸ்டைலில் பூண்டு பருப்பு பொடி செய்ய விரும்பினால், இப்பதிவு உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும். இப்பதிவில் ஆந்திரா ஸ்டைல் பூண்டு பருப்பு பொடி செய்வது எப்படி.? என்பதை விவரித்துள்ளோம்.






## மொச்சை கொட்டை காரக்குழம்பு

பொதுவாக பயிரில் அதிகப்படியான சத்துக்கள் நிறைந்துள்ளது. அந்த பயிறு வகைகளில் ஒன்றான மொச்சை கொட்டையை வைத்து சுவையான காரக்குழம்பு எப்படி செய்வது என்பதைத் தான் இப்பதிவில் பார்க்கப்போகிறோம். மொச்சை குழம்பு பல பேர் வைத்திருக்க மாட்டீர்கள். கிராமங்களில் தான் இந்த மொச்சை குழம்பு அடிக்கடி செய்வார்கள். ஓகே வாருங்கள் இந்த மொச்சை கொட்டை காரக்குழம்பு சுவையாக செய்வது என்று இப்பதிவில் படித்து தெரிந்து கொள்ளலாம்.



மொச்சை குழம்பு செய்ய தேவையான பொருட்கள்:
வெள்ளை மொச்சை- தேவையான அளவு
கத்திரிக்காய் 4
தேங்காய்- சிறிதளவு
வெல்லம்- சிறிதளவு
நல்லெண்ணெய்- தேவையான அளவு
வெந்தயம்- 1/2 ஸ்பூன்
கடுகு- 1/2 ஸ்பூன்
கருவேப்பிலை- 2 கொத்து
பூண்டு- 15 பல்லு
காய்ந்த மிளகாய்- 3
தக்காளி- 2
சின்ன வெங்காயம் 30
புளி- சிறிதளவு (எலுமிச்சை அளவு)
உப்பு- தேவையான அளவு
மஞ்சள் தூள்- 1/2 டீஸ்பூன்
மிளகாய் தூள்- 2 ஸ்பூன்
குழம்பு தூள்- 3 ஸ்பூன்
பெருங்காயத் தூள்- 1/2 டீஸ்பூன்
மசாலா செய்ய தேவையான போட்கள்:
கடலைப்பருப்பு- 1 ஸ்பூன்
மிளகு- 1 ஸ்பூன்
வெந்தயம்- 1/2 ஸ்பூன்
சீரகம்- 1 ஸ்பூன்

முதல் நாள் இறவே மொச்சையை தண்ணீரில் ஊறவைத்து விடுங்கள். மறுநாள் குழம்பு வைப்பதற்கு முன் புளியை ஊறவைத்து கரைத்து கொள்ளுங்கள்.
அதன் பின், ஒரு கடாயில் எண்ணெய் ஊற்றி எண்ணெய் காய்ந்ததும் அதில் கடுகு, வெந்தயம் சேர்த்து கொள்ளவும். கடுகு, வெந்தயம் பொரிந்ததும் அதனுடன் சின்ன வெங்காயம் சேர்த்து வதக்க வேண்டும். பிறகு அதனுடன் காய்ந்த மிளகாய், பூண்டு சேர்த்து கொள்ளுங்கள்.
அதன் பின் அடுப்பை குறைவாக வைத்து அதனுடன் தக்காளி மற்றும் கருவேப்பிலை சேர்த்து நன்றாக வதக்கி கொள்ளுங்கள்.
மொச்சை குழம்பு செய்வது எப்படி
இவை அனைத்தும் நன்றாக வதங்கியதும் அதில் ஊறவைத்த மொச்சை மற்றும் நறுக்கி வைத்த கத்திரிக்காய் சேர்த்து வதக்கவும்.
பாகற்காய் குழம்பு கசப்பில்லாமல் இப்படி செய்யுங்க..! யாரும் வேண்டான்னு சொல்ல மாட்டாங்க...!
அடுப்பில் உள்ள பொருட்கள் வதங்கியதும், அதில் புளி கரைசலை சேர்த்து அதனுடன், மஞ்சள் தூள், மிளகாய் தூள், குழம்பு தூள் போட்டு நன்றாக கலந்து விடவும். பிறகு தேவையான அளவு தண்ணீர், உப்பு மற்றும் பெருங்காயத்தூள் சேர்த்து கொதிக்க விடவும்.
பிறகு அதனுடன் சிறிதளவு தேங்காயை அரைத்து சேர்த்து கொள்ளுங்கள். இப்போது அதில் ஒரு சிறிய அளவில் வெல்லத்தை சேர்த்து 5 நிமிடம் கொதிக்க விடுங்கள்.
பிறகு ஒரு வாணலில் சீரகம், வெந்தயம், மிளகு, கடலைப்பருப்பு சேர்த்து பொன்னிறமாக வறுத்து எடுத்துக் கொள்ளுங்கள். இதை 5 நிமிடம் கழித்து ஒரு மிக்சி ஜாரில் போட்டு அரைத்துக் கொள்ளுங்கள்.

## அரிசி மாவில் சுவையான ஸ்வீட் செய்வது எப்படி?



அரிசி மாவு ஸ்நாக்ஸ்:
ஹலோ ஃப்ரண்ட்ஸ்..! இன்றைய பொதுநலம் பதிவில் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் விரும்பி சாப்பிடக்கூடிய அரிசி மாவில் சுவையான ஸ்வீட் வீட்டிலே எப்படி செய்யலாம்னு பார்க்கலாம் வாங்க..!

வையான பொருட்கள்:
அரிசி மாவு 1 கப்
பால் 1 கப்
சர்க்கரை 1/2 கப்
தேங்காய் துருவல் 1/2 கப்
ஏலக்காய் தூள் சிறிதளவு

அரிசி மாவில் ஸ்வீட் செய்வது எப்படி செய்முறை விளக்கம் 1:
முதலில் அரிசி மாவு 1 கப் எடுத்துக்கொள்ளவும். அடுத்து இந்த ரெசிபி ரெடி பண்ண கடாயில் 1 கப் பால் சேர்த்துக்கொள்ள வேண்டும்.
பால் சுவை பிடிக்காதவர்கள் தண்ணீர் கூட சேர்த்துக்கொள்ளலாம்.
இந்த பால் மிதமான அளவிற்கு சூடு வந்தால் போதும். அதன்பிறகு பாலுடன் சர்க்கரை 1/2 கப் சேர்த்து மிதமான சூட்டில் வைத்து நன்றாக கிளற வேண்டும்.


அரிசி மாவில் ஸ்வீட் செய்வது எப்படி செய்முறை விளக்கம் 2:
Rice Flour Sweet: அடுத்து தேங்காய் துருவல் 1/2 கப், பாலுடன் சேர்த்து நன்றாக கிளறிக்கொள்ள வேண்டும்.
அடுத்து வாசனைக்காக சிறிதளவு ஏலக்காய் தூள் சேர்த்துக்கொள்ளுங்கள்.
ஏலக்காய் தூள் சேர்த்தபிறகு இதனையும் நன்றாக கிளற வேண்டும்.

அரிசி மாவில் ஸ்வீட் செய்வது எப்படி செய்முறை விளக்கம் 3:
அரிசி மாவு ரெசிபி: அடுத்து அந்த பாலில் எடுத்துவைத்துள்ள அரிசி மாவை இதனுடன் சேர்க்க வேண்டும். மிதமான சூட்டில் வைத்தே இதை நன்றாக கிளறிவிட வேண்டும்.
அடுத்து நன்றாக கிளறிய பிறகு அடுப்பை நிறுத்தி கொள்ளலாம். 1 மணி நேரம் இதை மூடிவைக்க வேண்டும். நன்றாக ஆறியபின் தனியாக ஒரு பவுலில் மாற்றிக்கொள்ளவும்.
அடுத்து இந்த மாவை சப்பாத்தி மாவின் பதம் போல் நன்றாக பிசைந்து எடுத்துக்கொள்ள வேண்டும்.

அரிசி மாவில் ஸ்வீட் செய்வது எப்படி செய்முறை விளக்கம் 4:
அரிசி மாவு ரெசிபி: அடுத்து சப்பாத்தி மாவின் பதம் போல் வந்த பிறகு உருண்டையாக உருட்டி அதை தட்டி கொள்ளவும்.
மாவை உருண்டை வடிவில் தட்டிய பிறகு பாத்திரத்தின் மூடி அல்லது குக்கி கட்டரால் கட் செய்துகொள்ளவும்.
எல்லா மாவையும் இதே போல் செய்து தனியாக ஒரு தட்டில் எடுத்துவைத்து கொள்ளவும்.

அரிசி மாவில் ஸ்வீட் செய்வது எப்படி செய்முறை விளக்கம் 5:
அரிசி மாவு ஸ்நாக்ஸ்: அடுத்து இந்த அரிசி மாவில் நட்ஸ் வகைகளையும் சிறிதாக நறுக்கி சேர்த்து செய்தால் இன்னும் சுவை கிடைக்கும்.
இப்போது தனியாக தட்டில் எடுத்து வைத்ததை வேக வைக்க வேண்டும்.

இந்த பகுதியில்
உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்



whatsapp No
8122664699

## செஞ்சித்தொகுதி திமுக வேட்பு மனுத்தாக்கல்





**விழுப்புரம், ஏப்.07:** விழுப்புரம் மாவட்டம் செஞ்சி சட்டமன்றத் தொகுதி மதச்சாற்பற்ற முற்போக்கு கூட்டணி திமுக சார்பில் செஞ்சி மஸ்தான் எம் எல் ஏ வட்டாச்சியர் அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர் தமிழரசனிடம் தனது வேட்புமனுவை தாக்கல் செய்தார். செஞ்சி ஒன்றிய சேர்மேன் விஜயகுமார் காங்கிரஸ் கட்சி மாவட்டத் தலைவர் ரங்கபூபதி வேட்புமனுவை தாக்கல் செய்ததைத் தொடர்ந்து மேல்மலையனூர் ஒன்றியச் செயலாளர் நெடுஞ்செழியன் மற்றும் கழகத்தொண்டர் பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். **அகரம் ராமதாஸ் செய்தியாளர்**

## குடியாத்தம் தனி தொகுதி அதிமுக வேட்பாளர் பரிதா புருஷோத்தமன் வேட்புமனு தாக்கல்!



**வேலூர், ஏப். 07:** தேசிய ஜனநாயக கூட்டணி குடியாத்தம் தனி தொகுதி அதிமுக வேட்பாளர் ஜி. பரிதா புருஷோத்தமன் 6ம் தேதி தனது வேட்பு மனுவினை தொகுதி தேர்தல் அலுவலரும், வருவாய் கோட்டாட்சியருமான செல்வி. சுபலட்சுமியிடம் தாக்கல் செய்தார். இந்த வேட்பு மனு தாக்கலின் போது அதிமுக குடியாத்தம் நகர கழக செயலாளர் ஜே. கே. என். பழனி, பேரணாம்பட்டு ஒன்றிய கழகச் செயலாளர் பொகளூர் பிரபாகரன், பாரதிய ஜனதா கட்சியின் தொகுதி பொறுப்பாளர் மகேஷ், பாட்டாளி மக்கள் கட்சியின் மாவட்ட செயலாளர் ஜி.கே.ரவி, மேலும் மாற்று வேட்பாளர் சம்பத், அதிமுக பேரணாம்பட்டு நகரக் கழகச் செயலாளர் சீனிவாசன், புதிய நீதி கட்சி மாவட்ட செயலாளர் பி. செந்தில்குமார், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் மாவட்ட தலைவர் எஸ்.அருணோதயம், குடியாத்தம் தொகுதி கழக தேர்தல் பொறுப்பாளர் சதீஷ் சங்கர் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த வேட்புமனு தாக்கலின் போது இரட்டை இலை தழைத்தது. முரசு சத்தமே இன்றி முடங்கிப் போனது. திமுகவினர் குடியாத்தம் தொகுதியில் பணியாற்றாமல் பக்கத்து தொகுதிகளான கே.வி.குப்பம் மற்றும் அணைக்கட்டு ஆகிய தொகுதிகளுக்கு பணியாற்ற சென்று விடுகின்றனர்.

இதனால் தனித்து விடப்பட்ட நிலையில் தேமுதிக வேட்பாளர் சுற்றித் திரிகிறார். இதனால் வெற்றி வாய்ப்பு என்பது மதில் மேல் பூனை போல மாறி உள்ளது குடியாத்தம் தொகுதியில் என்று சொன்னால் அது மிகையல்ல.

## அக்ரி S. S கிருஷ்ணமூர்த்தி மனு தாக்கல் செய்தார்



திருவண்ணாமலை மாவட்டம் கலசப்பாக்கம் சட்டமன்ற தொகுதி அஇஅதிமுக தலைமையிலான திருவண்ணாமலை தெற்கு மாவட்ட கழக செயலாளர், வேட்பாளர், அக்ரி S. S கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கலசப்பாக்கம் தாலுக்கா அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் மனு தாக்கல் செய்தார். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.

## ஏ.பி.நந்தகுமார் அணைக்கட்டு வட்டாட்சியர் அலுவலகத்தில் தனது வேட்பு மனுவை தாக்கல்



வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தொகுதி திமுக வேட்பாளர் மற்றும் வேலூர் மாவட்ட திமுக செயலாளர் ஏ.பி. நந்தகுமார் அணைக்கட்டு வட்டாட்சியர் அலுவலகத்தில் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார்.

## ராசிபுரத்தில் தாமரை மலரும் பாஜக வேட்பாளர் பிரேம்குமார் நம்பிக்கை



**இராசிபுரம், ஏப்.07:** ராசிபுரம் (தனி) சட்டமன்றத் தொகுதியில் தாமரைச்சின்னத்தை வெற்றிப்பெறச் செய்வேன் என பாஜக வேட்பாளர் டாக்டர் பிரேம்குமார் தெரிவித்தார்.

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் (தனி) சட்டமன்றத் தொகுதியில் பாஜக வேட்பாளராக போட்டியிடும் டாக்டர் பிரேம்குமார், வேட்புமனு தாக்கல் செய்ததைத் தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்து பேசினார். அப்போது, ராசிபுரம் தொகுதியில் சேவை செய்ய வாய்ப்பு வழங்கிய பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் மற்றும் வருங்கால முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி ஆகியோருக்கு நன்றி தெரிவித்தார்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் மக்களுக்கு தேவையான நலத்திட்டங்கள் மற்றும் வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படவில்லை என திமுக அரசை அவர் குற்றம்சாட்டினார். இதனால் தமிழக மக்கள் இந்த ஆட்சியை மாற்ற முடிவு செய்துள்ளதாகவும் கூறினார்.

மேலும், பிரதமர் நரேந்திர மோடி நாடு முழுவதும் செய்த சாதனைகள் மற்றும் எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான முந்தைய ஆட்சியின் சாதனைகளை மக்களிடம் எடுத்துரைத்து வீடு தோறும் பிரச்சாரம் மேற்கொள்ள உள்ளதாக தெரிவித்தார்.

27 தொகுதிகளில் ராசிபுரம் தொகுதியை பாஜகவுக்கு வழங்கியுள்ள நிலையில், தனது மீது வைத்த நம்பிக்கையை காக்கும் வகையில் தாமரைச் சின்னத்தை வெற்றிப்பெறச் செய்வேன் என உறுதியுடன் பிரேம்குமார் தெரிவித்தார்.

பாஜக மாநில துணைத் தலைவர்கள் கே.பி. இராமலிங்கம், வி.பி.துரைசாமி, பாஜக நலத்திட்ட பிரிவின் மாநில துணைத் தலைவர் லோகேந்திரன், அதிமுக நகர செயலாளர் பாலசுப்பிரமணியம் உள்ளிட்ட கூட்டணி கட்சியினர் கலந்து கொண்டனர்.

## 2026 பொதுத் தேர்தல் குறித்து விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய ஒட்டி வில்லைகளை ஆட்டோக்களில் ஒட்டி விழிப்புணர்வு



**திருவண்ணாமலை, ஏப்.07:** திருவண்ணாமலை மாநகராட்சியில் உள்ள ஈசானிய மைதானத்தில் தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு க. தர்ப்பகராஜ் இ. ஆ. ப.அவர்கள் தேர்தல் குறித்து ஆட்டோக்களில் தேர்தல் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய ஒட்டி வில்லைகளை ஒட்டி விழிப்புணர்வு ஏற்படுத்தினார். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## துரைமுருகன் காட்பாடி வட்டாட்சியர் அலுவலகத்தில் வேட்புமனுவை தாக்கல்



**வேலூர், ஏப்.07:** காட்பாடி சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளரும், முன்னாள் அமைச்சரும், திமுக பொதுச் செயலாளருமான துரைமுருகன் காட்பாடி வட்டாட்சியர் அலுவலகத்தில் வேட்புமனுவை தாக்கல் செய்தார். அவருடன் வேலூர் தொகுதி எம்.பி .கதிர் ஆனந்த், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாநில அமைப்பாளர் நீல.சந்திரகுமார், முன்னாள் வேலூர் மாநகர காங்கிரஸ் கமிட்டி தலைவர் டீக்காராமன் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## 28 பேர் வேட்பு மனு தாக்கல்



வாணியம்பாடி சட்டமன்ற தொகுதியில் வேட்பு மனு தாக்கல் கடைசி நாளான நேற்று திமுக, பாமக, தவெக, அஇதிமுக, நதக, பகுஜன் சமாஜ் , அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சை வேட்பாளர்கள் 28 பேர் வேட்பு மனு தாக்கல் செய்தனர்

## திட்டக்குடி அரசியல் களம் வேட்புமனு தாக்கல் செய்த அரசியல் கட்சித் தலைவர்கள்



**கடலூர், ஏப். 07:** தமிழக சட்டமன்ற தேர்தல் வாக்குப்பதிவு வருகிற 23-ந் தேதி நடைபெறுகிறது. இந்த தேர்தல் களத்தில் தி.மு.க. கூட்டணி, அ.தி.மு.க. கூட்டணி, நாம் தமிழர் கட்சி, த.வெ.க. என 4 முனை போட்டி நிலவுகிறது. தேர்தல் போட்டி களத்தில் குதித்துள்ள வேட்பாளர்கள் வீதிவீதியாக சென்று தீவிர ஓட்டு வேட்டையில் ஈடுபட்டு உள்ளனர்.

அவர்களை ஆதரித்து அந்தந்த கட்சி தலைவர்களும், முக்கிய நிர்வாகிகளும் சூறாவளி பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். சட்டமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்புமனு தாக்கல் கடந்த 30-ந்தேதி தொடங்கியது. இந்நிலையில் கடைசி நாளான நேற்று திமுக வேட்பாளர் சி.வெ. கணேசன், அதிமுக வேட்பாளர் முருகுமாரன், அய்யா பாட்டாளி மக்கள் கட்சி சத்யா, உள்ளிட்ட பல்வேறு கட்சி வேட்பாளர்கள் மற்றும் டம்மி வேட்பாளர்கள் நேற்று கூட்டணி கட்சி ஆதரவாளர்களுடன் வெடி மேளம் தாளங்களுடன் ஊர்வலமாக சென்று பெரியார் அண்ணா சிலைக்கு மாலை அணிந்து மரியாதை செலுத்தினர் தொடர்ந்து திட்டக்குடி தொகுதிக்கான தேர்தல் நடத்தும் அதிகாரி தமிழ்மணியிடம் வேட்புமனுவை தாக்கல் செய்தார்கள்.

தேர்தல் அசம்பாவிதம் ஏற்பாடாக இருக்க திட்டக்குடி போலீஸ் துணை சூப்பிரண்டு பார்த்திபன் தலைமையிலான போலீசார் பாதுகாப்பணியில் ஈடுபட்டனர்.

## மயிலம் தொகுதி அதிமுக வேட்பாளர் வேட்புமனு தாக்கல்



விழுப்புரம் மாவட்டம் மயிலம் சட்டமன்றத் தொகுதி தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பில் அதிமுக வேட்பாளர் முன்னாள் அமைச்சர் சிவி.சண்முகம் எம்பி வேட்பு மனுவை தாக்கல் செய்தார். அகரம் ராமதாஸ் செய்தியாளர்




## ஸ்ரீராமர் பட்டாபிஷேகத்தை முன்னிட்டு உற்சவம் மூர்த்திகள் திருவிதி உலா



**கள்ளக்குறிச்சி, ஏப்.07:** கள்ளக்குறிச்சி ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் திருக்கோயிலில் ஸ்ரீ ராம நவமி உற்சவம் ஸ்ரீ ராமர் பட்டாபிஷேகத்தை முன்னிட்டு உற்சவமூர்த்திகள் வண்ண வண்ண மலர் அலைகளால் ஆலங்கரித்து, தங்க ஆபரணங்களுடன் அலங்காரத்தில் திருவீதி உலா நடைபெற்றது. ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் கலந்து கொண்டு ஸ்ரீ ராமரை வேண்டி அருள் பெற்றனர். வெகு சிறப்பாக நடைபெற்றது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## 2026 பொது தேர்தல் நடைபெறவுள்ளதை முன்னிட்டு ஜனநாயக திருவிழா அழைப்பிதழ் வழங்கும் நிகழ்ச்சி





**திருவண்ணாமலை, ஏப்.07:** திருவண்ணாமலை மாவட்டம் பண்டிதப்பட்டு ஊராட்சியில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 நடைபெற உள்ளதை முன்னிட்டு திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு. க. தர்ப்பகராஜ் இ.ஆ.ப.அவர்கள் வாக்காளர்கள் தேர்தலில் 100% வாக்களிப்பது வலியுறுத்தும் வகையில் ஜனநாயக திருவிழா அழைப்பிதழ் மங்கள வாத்தியங்களுடன் வாக்காளர்களுக்கு வழங்கி தேர்தல் நாளில் அனைவரும் வாக்களிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## காயிதே மில்லத் அவர்களின் நினைவு தினம்



கண்ணியமிகு காயிதே மில்லத் அவர்களின் நினைவு தினத்தை ஒட்டி அவரது உருவப்படத்திற்கு எஸ் புதூர் கடை வீதியில் மயிலாடுதுறை மாவட்ட தமிழர் முன்னேற்ற பேரவை சார்பாக மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. அருகில் மாவட்ட தலைவர் ஐயா பிள்ளை, மாவட்ட செயலாளர் மில்கியோன் , மாநில கொள்கை பரப்பு துணை செயலாளர் கவிஞர் பாலை மதியழகன் உள்ளிட்டோர் உள்ளனர்.

# சுற்றுலா: ட்ரெக்கிங் போக ஆசையா... இந்த அற்புதமான மலைக்கு உடனே கிளம்புங்க!

நகரத்தின் டிராபிக் மற்றும் வேலைப்பளுவில் சிக்கித் தவிக்கும் பலருக்கும் விடுமுறை வந்தால்எங்காவதுஇயற்கைஎழில் சூழ்ந்த அமைதியான இடத்திற்குச் செல்ல வேண்டும் என்ற எண்ணம் நிச்சயம் தோன்றும். அப்படி ஒரு அருமையான ட்ரிப் பிளான் உங்களிடம் இருந்தால், காபி எஸ்டேட்டுகளுக்குப் பெயர் போன கர்நாடகாவின் சிக்கமகளூர் மாவட்டத்தில் உள்ள ஒரு அட்டகாசமான ட்ரெக்கிங் ஸ்பாட் உங்களுக்காகவே காத்துக்கொண்டிருக்கிறது.

முடிகெரே (MUDIGERE) என்ற ஊருக்கு அருகில் அமைந்திருக்கும் இந்த மலையின் பெயர் எட்டின புஜா (ETTINA BHUJA). அடர்ந்த காட்டுக்குள் ஒரு த்ரில்லான நடைப்பயணம் செல்ல விரும்பும் இயற்கை காதலர்களுக்கு இது நிஜமாகவே ஒரு மாபெரும் சொர்க்கம் தான். இந்த அழகிய மலையைப் பற்றிய பல சுவாரஸ்யமான தகவல்களைப் பார்க்கலாம் வாங்க.





வித்தியாசமான பெயர்!

கன்னட மொழியில் 'எட்டின புஜா' என்றால் காளை மாட்டின் திமில் என்று அர்த்தம். தூரத்தில் இருந்து பார்க்கும் போது இந்த மலையின் உச்சிப் பகுதி அப்படியே ஒரு மாட்டின் திமில் போலவே காட்சியளிப்பதால் தான் இதற்கு இந்த விசித்திரமான பெயர் வந்தது. இங்கு மலையேற்றம் செய்வது சுலபமான ஒரு விஷயம்.

இதுவரை மலையேற்றமே செய்யாத புதியவர்கள் கூட ரொம்ப ஈஸியாக இதன் உச்சியை அடைந்துவிடலாம். மேலே செல்வதற்கு மொத்தம் இரண்டு பாதைகள் உள்ளன. நன்யாபைரேஸ்வரா கோவிலில் இருந்து தொடங்கும் பாதையைத் தேர்ந்தெடுத்தால் பயணம் எளிதாக இருக்கும். மற்றொரு வழி சிஷிலா என்ற கிராமத்தின் வழியாகச் செல்கிறது.

முன்பதிவு & கட்டுப்பாடுகள்!

இந்த மலைக்குச் செல்ல நீங்கள் திடீரென வண்டியை எடுத்துக்கொண்டு நேராகப் போய்விட முடியாது. கர்நாடக மாநில சுற்றுலாத்துறையின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் உங்களின் விவரங்களைப் பதிவு செய்து கட்டாயம் ஒரு முன் அனுமதி டிக்கெட் வாங்குவது மிக மிக அவசியம். வார நாட்களில் 250 ரூபாயும், சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் 300 ரூபாயும் நுழைவுக் கட்டணமாக வசூலிக்கிறார்கள்.

ஆன்லைன்டிக்கெட்இல்லாமல் சென்றால் வனத்துறையினர் உங்களை உள்ளே அனுமதிக்க மாட்டார்கள். காட்டுக்குள் எந்த ஒரு பெட்டிக்கடையும் இருக்காது என்பதால், தேவையான தண்ணீர் மற்றும் ஸ்நாக்ஸ் போன்றவற்றை நீங்களே தவறாமல் கொண்டு செல்ல வேண்டும். முக்கியமாகத் தீப்பெட்டி, சிகரெட், மதுபானங்கள் மற்றும் ஸ்பீக்கர்களைக் காட்டுக்குள் கொண்டு செல்லக் கடுமையான தடை உள்ளது.

த்ரில்லான அனுபவம்!

ஆரம்பத்தில் ஒரு அகலமான மண் பாதையாகத் தொடங்கும் இந்த பயணம், போகப் போக கரடுமுரடான கற்கள் நிறைந்த ஒரு சிறிய ஒற்றையடிப் பாதையாக மாறிவிடும். பாதையின் இருபுறமும் அடர்ந்த மரங்கள் மற்றும் செடிகள் இருப்பதால் அட்டைப் பூச்சிகளின் தொல்லை கொஞ்சம் அதிகமாகவே இருக்கும். அதற்காகக் கட்டாயம் ஒரு நல்ல ஷூ அணிந்து செல்வது உங்களைப் பாதுகாக்கும்.

கொஞ்சம் கஷ்டப்பட்டு மலையின் உச்சியை அடைந்துவிட்டால், மேகங்களைக் கிழித்துக்கொண்டு நிற்கும் அந்த பிரம்மாண்டமான காட்சி நீங்கள் பட்ட கஷ்டங்கள் அனைத்தையும் மறக்கச் செய்துவிடும். அக்டோபர் முதல் மார்ச் மாதத்திற்குள் இங்கு செல்வது உங்களுக்கு ஒரு வேற லெவல் அனுபவத்தைக் கொடுக்கும். இங்கு வர நினைப்பவர்கள் பெங்களூரில் இருந்து பஸ் பிடித்து முடிகெரே என்ற ஊருக்கு வந்து, அங்கிருந்து ஜீப் மூலம் மலையடிவாரத்தை ஈஸியாக அடையலாம். ரயிலில் வருவது உங்களின் நேரத்தை வீணாக்கிவிடும்.

எந்த ஒரு பெரிய செலவும் இல்லாமல், இயற்கையோடு ஒன்றிணைந்து ஒரு மன அமைதியைத் தேடும் நபர்களுக்கு இந்த எட்டின புஜா மலைப்பயணம் ஒரு மிகச் சிறந்த தேர்வாக இருக்கும். மலையேற்றம் முடிந்து கீழே இறங்கும் போது, ஏதோ ஒரு பெரிய இமயமலையில் ஏறிச் சாதித்து விட்டோம் என்ற ஒரு அற்புதமான ஃபீலிங் உங்களுக்குள் நிச்சயம் ஏற்படும்.

## வேலைவாய்ப்பு கார்னர்

### இந்திய உள்கட்டமைப்பு நிதி நிறுவனத்தில் உதவி மேலாளர் வேலை

பணி: Manager (Grade B) - 4 தகுதி: எல்எல்பி, சிஏ, சிஎம்ஏ, ஐசிடபுள்யுஏ. நிறுவனச் செயலாளர்(சிஎஸ்), பொறியியல் துறையில் பிஇ, பி.டெக் போன்ற ஏதாவதொரு தகுதியுடன் 2 ஆண்டு பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

பிரிவு: Manager(Grade B) Environment and Social Safeguard தகுதி: பொறியியல், முதுகலை, சுற்றுச்சூழல் மேலாண்மை, சுற்றுச்சூழல் அறிவியல் துறையில் பட்டம் அல்லது பட்டயம்; சமூகப் பணி, சமூகவியல், மானிடவியல், பொருளியல் மேம்பாட்டுச் சேவைகள் ஆகிய துறைகளில் எம்.எஸ்சி அல்லது முதுகலைப் பட்டம் பெற்றிருப்பதுடன் 2 ஆண்டுகள் பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

பணி: Assistant Manager (Grade A) தகுதி: எல்எல்பி, சிஏ, சிஎம்ஏ, ஐசிடபுள்யுஏ போன்ற ஏதாவதொரு தகுதியுடன் 2 ஆண்டு பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

பணி: Environment and Social Safeguard தகுதி: பொறியியல் துறையில் ஏதாவதொரு பிரிவில் இளங்கலைப் பட்டம் பெற்றிருக்க வேண்டும் அல்லது Social Works, Sociology, Anthropology, Economics Development Servi9ces, Environmental Management,Environmental Science பிரிவில் முதுநிலைப் பட்டம் பெற்றிருப்பதுடன் 2 ஆண்டுகள் பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

வயதுவரம்பு: 28.2.2026 தேதியின்படி 21 முதல் 30-க்குள் இருக்க வேண்டும்.

அரசு விதிகளின்படி உச்ச வயதுவரம்பில் எஸ்சி, எஸ்டி பிரிவினருக்கு 5 ஆண்டுகளும், ஓபிசி பிரிவினருக்கு 3 ஆண்டுகளும் தளர்வு வழங்கப்படும்.

தேர்வு செய்யப்படும் முறை: ஆன்லைன் எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு மூலம் தகுதியானவர்கள் தேர்வு செய்யப்படுவர்.

விண்ணப்பக் கட்டணம்: பொது, ஓபிசி பிரிவினர்களுக்கு ரூ.600. எஸ்சி, எஸ்டி, மாற்றுபத்திறனாளி பிரிவினர்களுக்கு ரூ.100. கட்டணத்தை ஆன்லைன் மூலம் செலுத்த வேண்டும்.

விண்ணப்பிக்கும் முறை: www.iifC1.in என்ற அதிகாரப்பூர்வ இணையதளத்தின் மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.

ஆன்லைனில் விண்ணப்பிப்பதற்கான கடைசி நாள்: 10.4.2026

## சென்னையில் மாதிரி வாக்குச்சாவடி அமைக்கப்பட்ட 3 விழிப்புணர்வு கண்காட்சி பேருந்துகள்

**சென்னை, ஏப்.7:**

வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் சென்னை மாவட்டத்தில் 16 சட்டமன்றத் தொகுதிகளிலும் 23ந் தேதி அன்று வாக்குப்பதிவு நாளில் வாக்காளர்கள் எவ்வாறு வாக்குச்சாவடி மையங்களில் தங்களது வாக்கினை பதிவு செய்வது என்பது குறித்து விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில், மாதிரி வாக்குச்சாவடி அமைக்கப்பட்ட 3 பேருந்துகள் நேற்று முதல் சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளில் வாக்காளர்கள் அதிகம் கூடுமிடங்களில் வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இப்பேருந்துகளில் தத்ரூபமாக வாக்குச்சாவடி தலைமை அலுவலர், வாக்குப்பதிவு அலுவலர்-1, வாக்குப்பதிவு அலுவலர்-2, வாக்குப்பதிவு அலுவலர்-3 ஆகியோரின் பணி, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் மூலமாக வாக்களிப்பது போன்று மாதிரி வாக்குச்சாவடி அமைக்கப்பட்டுள்ளது. மேலும், வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்களும் வழங்கப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தலை முன்னிட்டு, சென்னை மாவட்டத்திற்கு உட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளிலும் 100% வாக்களிப்பதன் அவசியத்தை வலியுறுத்தி வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், "தேர்தல் திருவிழா தமிழ்நாட்டின் பெருவிழா" எனும் தேர்தல் விழிப்புணர்வு கண்காட்சிப் பேருந்து மற்றும் வாகனங்கள் மார்ச் 26ந் தேதி அன்று தொடங்கி வைக்கப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது என்பது நினைவிருக்கலாம்.

## விஜய்யை விமர்சிக்கும் 'டிஎன் 2026' படம்: த.வெ.க. நிர்வாகிகள், தொண்டர்கள் கொதிப்பு

**சென்னை, ஏப்.7:**

'விஜய் நடித்துள்ள ஜன நாயகன் படத்திற்கு தடை விதித்துள்ள தணிக்கை வாரியம், அவரை அசிங்கப்படுத்தும் டிஎன் 2026' படத்தை எப்படி வெளியிடலாம்?' என ஆதவ் அர்ஜுனா கேள்வி எழுப்பியுள்ளார்.




இயக்குநர் உமாபதி எஸ் ராமையா இயக்கத்தில் நடிகர்கள் நட்டி நட்ராஜ் முன்னணி கதாபாத்திரத்தில் நடிக்க, நடிகர்கள் எம். எஸ். பாஸ்கர், தம்பி ராமையா உள்ளிட்டோர் நடித்த அரசியல் திரைப்படம் டிஎன் 2026. முழுநீள அரசியல் நகைச்சுவைத் திரைப்படமாக உருவான படம். 10 ஆம் தேதி திரைக்கு வருமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்படத்தின் டீசர் வெளியானது. இதில் "சினிமாக்கார பயல்கள் தமிழ்நாட்டில் வாழலாம், ஆளலாமா?, நடிகர்களுக்கு அரசியல் தெரியாதா?, எம்ஜிஆர் எல்லாம் எப்படி முதல்வர் ஆனார்? எங்கள் தலைவருக்கும் அதே மாஸ் இருக்கிறது!" போன்ற வசனங்கள் இடம்பெற்றுள்ளன.

விஜய்யின் அரசியல் வருகையை விமர்சிக்கும் வகையில் இந்த படத்தில் காட்சிகள் இடம் பெற்று இருப்பதாகக் கூறப்படுகிறது.

இதைப்பார்த்து, அவரது ரசிகர்கள் சமூக வலைத்தளங்களில் காரசாரமாக பதிவிட்டு வருகிறார்கள். நட்டி நட்ராஜ்ஜின் தோற்றம் விஜய் போன்றும், தம்பி ராமையாவின் தோற்றம் தவெக பொதுச்செயலர் என். ஆனந்த் போன்றும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதனால், சமூக வலைத்தளங்களில் இந்த படம் குறித்த விவாதம் நடந்து வருகிறது.

இந்தப் படம் த.வெ.க.வினரை கோபப்படுத்தி உள்ளது. படத்துக்கு எதிராக விமர்சித்து வருகின்றனர். மேலும், படத்தை பார்க்க வேண்டாம் என கட்சியினருக்கு நிர்வாகிகள் அறிவுறுத்தி உள்ளனர்.

## 2025-26-ம் நிதியாண்டில் 3,405 பெட்டிகளை தயாரித்து சென்னை ஐசிஎஃப் சாதனை

**சென்னை, ஏப். 7:**

ரயில் பெட்டித் தயாரிப்பில் உலகப் புகழ்பெற்ற இணைப்புப் பெட்டி தொழிற்சாலை (ஐ.சி.எஃப்.) பயணிகளின் தேவை மற்றும் காலத்துக்கு ஏற்ப, அதிநவீன ரயில் பெட்டி, சுற்றுலாவுக்கான ரயில் பெட்டி உட்பட 50-க்கும் மேற்பட்ட வகைகளில் 600 வடிவமைப்புகளில் ரயில் பெட்டிகளை தயாரித்து வருகிறது.

இதுதவிர வந்தே பாரத் ரயில், அம்ரித் பாரத் ரயில்களும் தயாரித்து வழங்கப்படுகின்றன. சமீபத்தில் இங்கு 80 ஆயிரமாவது ரயில் பெட்டி தயாரிக்கப்பட்டது. இந்த ஆலையில் 2025-26-ம் நிதியாண்டில் அதிக பெட்டிகள் தயாரித்து சாதனை படைக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஐசிஎஃப் அதிகாரிகள் கூறியதாவது: 2025-26-ம் நிதியாண்டில் மட்டும் 3,405 ரயில் பெட்டிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. கடந்த 2024-25-ம் நிதியாண்டில் 3007 ரயில் பெட்டிகள் தயாரிக்கப்பட்டன. இதனுடன் ஒப்பிடும்போது தற்போது 13.2 சதவீதம் உற்பத்தி உயர்ந்துள்ளது.

புதிய ரயில் பெட்டிகளில் வந்தே பாரத் தூங்கும் வசதி பெட்டிகள், வந்தே பாரத் ரயிலில் அமரும் நாற்காலி பெட்டிகள், மின்சார மற்றும் மெமு ரயில்களின் குளிர்சாதனப் பெட்டிகள் உள்ளிட்டவை மட்டும் 2,548 பெட்டிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. 22 அம்ரித் பாரத் ரயில்களுக்குரிய பெட்டிகளும் இதில் அடங்கும். கொல்கத்தா மெட்ரோவுக்கு உரிய ரயில் பெட்டிகளும் தயாரிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு அவர்கள் கூறினர்..

## முழுமையாக நிரப்பாத வேட்புமனுவை தாக்கல் செய்த தவெக வேட்பாளர்

**ஸ்ரீவைகுண்டம், ஏப். 7:**

ஸ்ரீவைகுண்டத்தில் முழுமையாக நிரப்பாமல் தவெக வேட்பாளர் தாக்கல் செய்த வேட்புமனுவை தேர்தல் நடத்தும் அதிகாரி வாங்க மறுத்து திருப்பி அனுப்பிய சம்பவம் நகைப்பை ஏற்படுத்தியது.

தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் தொகுதி தவெக வேட்பாளர் அன்னை வி.ஜி.சரவணன். இவர், நேற்று முன்தினம் பிற்பகல் 2.55 மணிக்கு மேல் ஸ்ரீவைகுண்டம் வட்டாட்சியர் அலுவலகத்துக்கு வந்து, தேர்தல் நடத்தும் அதிகாரி செந்தில்வேல் முருகனிடம் தனது வேட்புமனுவை வழங்கினார். அதை தேர்தல் நடத்தும் அதிகாரி மற்றும் அலுவலர்கள் பார்வையிட்டனர்.

அப்போது, மொத்தம் 5 பக்கங்கள் கொண்ட வேட்புமனுவில் 4 பக்கங்கள் முழுமையாக நிரப்பப்படாமல் இருப்பது தெரியவந்தது. வேட்புமனுவில் அப்பகுதியில் வசிப்பவர்களின் வழிமொழிதல், முன்மொழிதல் மற்றும் அவர்களது முழு விவரங்கள் இணைக்கப்பட வேண்டும். அவையும் இணைக்கப்படவில்லை. மேலும், வேட்பு மனுவில் வேட்பாளரின் கையெழுத்து கூட இல்லாதது தெரியவந்தது.

இதையடுத்து, தேர்தல் நடத்தும் அதிகாரி வேட்புமனுவை சரவணனிடமே திருப்பி வழங்கினார். 'வேட்புமனு மாலை 3 மணி வரை மட்டுமே பெறப்படும். மனுவை பெறுவதற்கு இன்னும் 2 நிமிடங்களே உள்ளதால் அதற்குள் பூர்த்தி செய்து வழங்க வேண்டும். இல்லையென்றால் திங்கட்கிழமை (நேற்று) வந்து மனுதாக்கல் செய்யுங்கள்' என தேர்தல் அதிகாரி தெரிவித்தார்.

## வேட்பாளர்களின் குற்றவியல் வழக்குகள் குறித்து ECINET தளத்தைப் பயன்படுத்தி தெரிந்து கொள்ளலாம்

**சென்னை, ஏப்.7:**

தேர்தல் ஆணையம்துணை இயக்குநர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

அஸ்ஸாம், கேரளா, புதுச்சேரி, தமிழ்நாடு மற்றும் மேற்கு வங்காள சட்டப்பேரவைகளுக்கான பொதுத் தேர்தல் மற்றும் கோவா, குஜராத், கர்நாடகா, மகாராஷ்டிரா, நாகாலாந்து மற்றும் திரிபுரா ஆகிய மாநிலங்களில் உள்ள 8 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் அட்டவணையை இந்தியத் தேர்தல் ஆணையம் (ECI) கடந்த மாதம் 15ந் தேதி அன்று அறிவித்தது.

ஏப்ரல் 9 அன்று வாக்குப்பதிவு நடைபெறவுள்ள அஸ்ஸாம், கேரளா மாநிலங்கள் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் சட்டப்பேரவைத் தேர்தல்கள் மற்றும் 4 மாநிலங்களில் நடைபெறும் இடைத்தேர்தல்களில் மொத்தம் 1,955 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். வேட்பாளர்களின் குற்றவியல் வழக்குகள், சொத்துக்கள் மற்றும் கடன்கள், கல்வித் தகுதிகள் மற்றும் வேட்பாளர்களின் அதிகாரப்பூர்வ சமூக ஊடக கணக்குகள் பற்றிய தகவல்களைப் பெற குடிமக்கள் ECINet-ன் "உங்கள் வேட்பாளரைத் தெரிந்துகொள்ளுங்கள் (KYC)" தொகுதியைப் பயன்படுத்தலாம்.

பயனர்கள் ECINet-ன் "தேர்தல் நடத்தை" பகுதியின் கீழ் KYC தொகுதியை அணுகலாம். வேட்பாளர்கள் சமர்ப்பித்த முழுமையான உறுதிமொழிப் பத்திரத்தையும் (படிவம் 26) அவர்கள் ECINet மூலம் பதிவிறக்கம் செய்யலாம். ECINET வாக்காளர்களுக்கு வாக்காளர் பதிவு, வாக்காளர் பட்டியல் தேடல், உங்கள் விண்ணப்பங்களைக் கண்காணித்தல், தேர்தல் அதிகாரிகளுடன் தொடர்புகொள்ளுதல், வாக்குச்சாவடி நிலை அலுவலருடன் (BLO) அழைப்பை முன்பதிவு செய்தல், e-EPIC பதிவிறக்கம், வாக்குப்பதிவு போக்குகள் மற்றும் குறைகளைத் தீர்ப்பது போன்ற சேவைகளை ஒரே பாதுகாப்பான தளத்தில் வழங்குகிறது.

இது நிகழ்நேரத் தகவல் அணுகல் மற்றும் புகார் தீர்வுக்கான ஒற்றைச் சாளரத் தளத்தையும் வழங்குகிறது. இதில் விதிமீறல்களைப் புகாரளிக்க cVIGIL மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான அணுகக்கூடிய தேர்தல் சேவைகளை உறுதி செய்ய Saksham போன்ற கருவிகளும் அடங்கும். இத்தகவலை துணை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.
"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்
94452 65389

# புதுவையில் மகளிருக்கு இலவசப் பேருந்து, இளைஞர்களுக்கு ரூ. 2,000, மருத்துவக் காப்பீடு ரூ. 20 லட்சம்!

**புதுடெல்லி, ஏப்.7:**

புதுவையில் பிரசாரம் மேற்கொண்ட காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி தேர்தல் வாக்குறுதிகளை அறிவித்தார்.

புதுவையில் காங்கிரஸ், திமுக கட்சிகளிடையே நீண்ட இழுபறிக்குப் பிறகு தொகுதி உடன்பாடு ஏற்பட்டு, மொத்தமுள்ள 30 பேரவைத் தொகுதிகளில் காங்கிரஸுக்கு 16-ம், திமுகவுக்கு 14-ம் ஒதுக்கீடு செய்யப்பட்டன.

புதுவை யூனியன் பிரதேசத்தில் வரும் 9 ஆம் தேதி சட்டப் பேரவை தேர்தலுக்கான வாக்குப் பதிவு நடைபெறும் நிலையில் ஏப்.7 ஆம் தேதியுடன் பிரசாரம் முடிவடைகிறது.

காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி தேர்தல் அறிவிப்புக்குப் பிறகு



முதல்முறையாக இன்று புதுவை வந்த நிலையில் லாஸ்பேட்டை பகுதியில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் பேசினார்.

"இந்த மாநிலத்தை ஆளுகிறவர்கள் மண்ணின் மைந்தர்கள் இல்லை. இங்கு நடக்கின்ற அரசு மக்களின் எண்ணங்களை உள்வாங்கும் அரசு இல்லை. வெளியில் இருந்து வந்தவர்களின் எண்ணங்களை திணிக்கின்ற அரசு.

பாஜக அவர்களது சித்தாந்தங்களை திணிக்கும் அரசாக உள்ளது. மக்களின் எண்ணங்களை நிறைவேற்றும் அரசாக இல்லை ஆளுநரை வைத்து நாடகம் நடத்தும் அரசாக உள்ளது. நூற்றுக்கணக்கான தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன.

பாஜக அரசு தொடர்ந்தால் மின்துறை உள்ளிட்ட அனைத்தும் அதானி குழுமத்திடம் விற்றுவிடும். இங்கு ஊழல் மட்டுமல்ல, ஜனநாயகத்தை குழிதோண்டி புதைக்கும் வகையில் போலி மருந்து விவகாரம் உள்ளது. போலி மருந்துகள் அதிகம் தயாரிக்கப்பட்டு ஊழல், லஞ்சம் அதிகரித்துள்ளது. எதைத் தொட்டாலும் கமிஷன் அரசாக உள்ளது. இங்குள்ள வழிபாட்டுத் தலங்கள், பள்ளிக்கூடங்கள் அருகில் மதுபானக் கடைகள் திறக்கப்படுகின்றன. டெண்டர்களிலும் ஊழல் இருக்கிறது. காரைக்கால் துறைமுகமும் மின்வாரியமும் அதானியிடம் விற்கப்பட்டுள்ளது

எங்கே பார்த்தாலும் ஊழல், லஞ்சம் உள்ளது. அவர்கள் எல்லாருக்கும் அது தெரியும். ஆனால் அதைபற்றி அவர்கள் கவலைப்பட மாட்டார்கள்.

காங்கிரஸ் ஆட்சிக்கு வந்ததும் கீழ்க்காணும் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும்.

1. வேலை இல்லாத இளைஞர்களுக்கு மாதம் ரூ. 2,000 வழங்கப்படும்.

2. ஆட்சிக்கு வந்ததும் அரசு மற்றும் தனியார் துறையில் 30,000 வேலைவாய்ப்புகள் வழங்கப்படும்.

3. மகளிருக்கு இலவச பேருந்து சேவை அமல்படுத்தப்படும்.

4. அரசு வேலைக்கான வயது வரம்பு 40 ஆக உயர்த்தப்படும்.

5. புதுவையில் உள்ள ஒவ்வொரு குடும்பமும் வருடத்திற்கு ரூ. 20 லட்சம் மருத்துவக் காப்பீடு வழங்க உறுதி செய்யப்படும்.

6. புற்றுநோய், சிகிச்சை உள்ளிட்ட எவ்வளவு பெரிய நோயாக இருந்தாலும் ரூ. 20 லட்சம் காப்பீடு வழங்கப்படும்.

மக்களின் எண்ணங்களை நிறைவேற்றும் அரசாக எங்களுடைய இருக்கும். மண்ணின் மைந்தர்கள் ஆட்சி செய்யும் அரசாக இருக்கும். எங்களது கூட்டணி கட்சிக்கு வாக்களித்து வெற்றிபெற செய்யுங்கள் என்று பேசினார்.

# க்ரைம் கார்னர்

## இயற்கை உபாதை கழிக்க சென்ற இளம்பெண்ணுக்கு புதருக்குள் நேர்ந்த கொடூரம்...

**சென்னை, ஏப்.7:**

சென்னை, மடிப்பாக்கத்தைச் சேர்ந்தவர் ஜெயபுரீ (61). கடந்த 29-ம் தேதி மாலை, கர்ப்பிணி மருமகளுடன் வீட்டினருகே திலகர் அவென்யூ 1-வது மெயின் ரோடு வழியாக நடந்து சென்று கொண்டிருந்தார்.

அப்போது, பின் தொடர்ந்து வந்த, வழிப்பறி கொள்ளையன் ஜெயபுரீ கழுத்தில் அணிந்திருந்த 2 பவுன் தங்க தாலிச் செயினை பறித்துக் கொண்டு தப்பியோடினார். இது தொடர்பாக அவர் மடிப்பாக்கம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்படி, போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்தனர். சிசிடிவி கேமரா காட்சிகள் அடிப்படையில் நடத்தப்பட்ட விசாரணையில், ஜெயஸ்ரீயிடம் நகை பறிப்பில் ஈடுபட்டது மடிப்பாக்கம், பஜார் மெயின் ரோடு பகுதியைச் சேர்ந்த தமிழ்வாணன் (23) என தெரிய வந்தது.

தலைமறைவாக இருந்த அவரை போலீஸார் நேற்று முன்தினம் கைது செய்தனர். விசாரணையில், கள்ளக்குறிச்சியைச் சேர்ந்த தமிழ்வாணன் பொறியியல் படித்து, சென்னையில் தங்கி தனியார் கட்டுமான நிறுவனத்தில் இன்ஜினியராக வேலை செய்து வருவதும், ஆன்லைனில் வாங்கிய கடனை திரும்ப செலுத்த பணம் தேவைப்பட்டதால், நகைபறிப்பில் ஈடுபட்டதும் தெரிய வந்தது. இதையடுத்து, அவர் சிறையில் அடைக்கப்பட்டார்.

## காதலிக்கு செலவு செய்த பணத்தை திருப்பிக் கேட்டதால் கல்லூரி மாணவரை காரில் கடத்தி தாக்குதல்

**சென்னை, ஏப்.7:**

கடலூர் மாவட்டம், ஸ்ரீமுஷ்ணம் பகுதியைச்சேர்ந்தவர் சசிகுமார் (19). மதுரவாயல் பகுதியில் உள்ள கல்லூரி ஒன்றில் படித்து வருகிறார். இவருக்கு இன்ஸ்டாகிராம் மூலம் ரித்திகா என்பவர் அறிமுகமாகி, பின்னர் இருவரும் காதலித்து வந்துள்ளனர். ரித்திகா இன்ஸ்டாகிராமில் நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு பணம் தேவைப்படுவதாக சசிகுமாரிடம் கேட்டபோது, அவர் அவ்வப்போது சிறிது சிறிதாக மொத்தம் ரூ.1.87 லட்சம் கொடுத்தாரம் இந்நிலையில் ரித்திகா வேறொரு நபரைக் காதலிப்பது சசிகுமாருக்கு தெரியவந்து, இதுகுறித்து அவர் கேட்டபோது, தகராறு ஏற்பட்டு இருவரும் பிரிந்துவிட்டனர். இது ஒருபுறம் இருக்க கல்லூரிக்கு கட்டணம் செலுத்த வைத்திருந்த பணத்தை சசிகுமார் ரித்திகாவுக்கு சிறிது சிறிதாக கொடுத்ததால், கல்லூரிக்கு பணம் கட்ட முடியாமல், கல்லூரி நிர்வாகம் அவரை வெளியேற்றியது. இதனால் வேதனையடைந்த சசிகுமார், ரித்திகாவிடம் தான் கொடுத்த பணத்தை திருப்பித் தருமாறு கேட்டபோது, பணம் தர மறுத்துள்ளார். இந்நிலையில், கடந்த 1-ம் தேதி இரவு தாம்பரம் அருகே காரில் இருந்த ரித்திகா உள்ளிட்ட 4 நபர்கள் மற்றும் அங்கிருந்த சுமார் 5 பேர் சேர்ந்து சசிகுமாரை தகாத வார்த்தைகளால் பேசி, தாக்கி, அருகிலிருந்த சாக்கடைக்குள் தள்ளிவிட்டு தப்பினர். [illegible] போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்தனர். இதில் சசிகுமாரை கடத்தி தாக்கிய கிழக்கு தாம்பரத்தைச் சேர்ந்த ரித்திகா (21) உள்ளிட்ட 4 பேரை கைது செய்தனர்.

## வங்கி லாக்கரில் இருந்து வாடிக்கையாளர்களின் நகைகளை திருடிய முன்னாள் பெண் அதிகாரி மீண்டும் கைது

**சென்னை, ஏப்.7:**

சென்னை வேளச்சேரி 100 அடி சாலையில் உள்ள தனியார் வங்கியில் கடந்த டிச.5-ம் தேதி பர்தா அணிந்தபடி பெண் ஒருவர் வந்தார். தன்னை சர்மிளா பானு என அறிமுகம் செய்து கொண்டார். தனது கணவர் அப்துல் இந்த வங்கியில் கணக்கு வைத்துள்ளார். அதேபோல, தனக்கும் கணக்கு தொடங்க வேண்டும் என கேட்டுள்ளார். இந்த நிலையில், அவர் வங்கியில் நகையை விட்டுச் சென்றது வங்கியின் முன்னாள் ஊழியரான வேளச்சேரியைச் சேர்ந்த பதமப்ரியா (38) என்பது போலீஸ் விசாரணையில் தெரியவந்தது. இவர், லாக்கரில் வைக்கப்படும் நகைகளை மேற்பார்வையிடும் அதிகாரியாக இருந்துள்ளார். அப்போது, தணிக்கை செய்வதாக கூறி வாடிக்கையாளர்களின் நகைகளை சிறிது சிறிதாக திருடி உள்ளார். இந்த குற்றத்துக்காக கைது செய்யப்பட்டவர் ஜாமீனில் வெளியே வந்துள்ளார். இந்த வழக்கு சென்னை மத்திய குற்றப்பிரிவுக்கு மாற்றப்பட்ட நிலையில் அந்த பிரிவு போலீஸார் அவரை மீண்டும் கைது செய்துள்ளனர்.

# விளையாட்டு செய்திகள்

## பெண்கள் ஆசிய கோப்பை கால்பந்து: இந்திய அணியை வீழ்த்தியது ஆஸ்திரேலியா

12-வது பெண்கள் ஆசிய கோப்பை கால்பந்து (20 வயதுக்கு உட்பட்டோர்) போட்டி தாய்லாந்தில் நடந்து வருகிறது. இதில் பங்கேற்றுள்ள 12 அணிகள் 3 பிரிவாக பிரிக்கப்பட்டு மோதி வருகின்றன. லீக் முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் டாப்-2 இடத்தை பிடிக்கும் அணிகளும், 3-வது இடத்தை பெறும் சிறந்த இரு அணிகளும் கால்இறுதிக்கு தகுதி பெறும். 'சி' பிரிவில் அங்கம் வகிக்கும் இந்தியா நேற்று தனது 2-வது லீக்கில் ஆஸ்திரேலியாவை எதிர்கொண்டது. இதில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய ஆஸ்திரேலியா 5-0 என்ற கோல் கணக்கில் இந்தியாவை தோற்கடித்து கால்இறுதியை எட்டியது. அந்த அணியில் ஸ்கை ஹால்மாரிக்ஸ் (38, 39 மற்றும் 48-வது நிமிடம்), டேனிலா புருட்டஸ் (54-வது நிமிடம்), டெய்சி பிரவுன் (90-வது நிமிடம்) ஆகியோர் கோல் போட்டனர். முதல் ஆட்டத் தில் ஜப்பானிடம் 0-6 என்ற கணக்கில் தோற்ற இந்திய அணி கடைசி லீக்கில் வருகிற 8-ந்தேதி சீனதைபேயை சந்திக்கிறது.

## எங்கள் அணி 200 ரன்கள் கடந்தது ஆச்சரியம் அளிக்கிறது; சென்னை கேப்டன் ருதுராஜ்

19வது ஐபிஎல் கிரிக்கெட் தொடர் நாட்டின் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று பெங்களூருவில் நடந்த 11வது லீக் ஆட்டத்தில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு, சென்னை சூப்பர் கிங்ஸ் அணிகள் மோதின. இதில் முதலில் பேட்டிங் செய்த பெங்களூரு 20 ஓவர்கள் முடிவில் 3 விக்கெட்டுகள் இழப்பிற்கு 250 ரன்கள் குவித்தது. இதையடுத்து களமிறங்கிய சென்னை 19.4 ஓவரில் 207 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. இதன் மூலம் பெங்களூருவுக்கு எதிரான ஆட்டத்தில் சென்னை 43 ரன்கள் வித்தியாசத்தில் படுதோல்வியடைந்தது. இந்நிலையில் தோல்விக்குப்பின் சென்னை கேப்டன் ருதுராஜ் கெய்க்வாட் கூறுகையில், உண்மையில் சொல்லப்போனால் எங்கள் அணி 200 ரன்கள் கடந்தது எனக்கு ஆச்சரியம் அளிக்கிறது. இதற்கு சர்பிராஸ், ஓவர்டன், பிரசாந்த் வீர், துபே ஆகியோருக்கு எனது பாராட்டுகள்' என்றார்.

## நகமுராவுடன் டிரா செய்த பிரக்ஞானந்தா! வைஷாலி, திவ்யாவுக்கு முதல் வெற்றி!

கேண்டிடேட்ஸ் செஸ் போட்டியின் 6-ஆவது சுற்றில் இந்தியாவின் ஆர்.பிரக்ஞானந்தா 'டிரா' செய்தார். அவரின் சகோதரி ஆர்.வைஷாலி, நடப்பு மகளிர் உலகக் கோப்பை சாம்பியன் திவ்யா தேஷ்முக் ஆகியோர் அந்த சுற்றில் வெற்றி பெற்றனர். சைப்ரஸில் நடைபெறும் இந்தப் போட்டியில், ஓபன் பிரிவு 6-ஆவது சுற்றில் பிரக்ஞானந்தா வெள்ளை நிற காய்களுடன் அமெரிக்காவின் ஹிகரு நகமுராவை எதிர்கொண்டார். விரைவாகவே இறுதிக்கட்டத்தை எட்டிய இந்த ஆட்டம், 23-ஆவது நகர்த்தலில் டிரா ஆனது. இதர ஆட்டங்களில், உஸ்பெகிஸ்தானின் ஜாவோகிர் சிண்டாரோவ் - சீனாவின் வெய் யியை தோற்கடித்தார். அமெரிக்காவின் ஃபாபியானோ கரானா - ரஷியாவின் ஆண்ட்ரே எஸிபென்கோ, நெதர்லாந்தின் அனிஷ் கிரி - ஜெர்மனியின் மத்தியாஸ் புளூபம் ஆகியோர் மோதலும் டிராவில் முடிந்தது.

# நீதித் துறை உள்கட்டமைப்பு அத்தியாவசியமானது: உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி சூர்ய காந்த்!

**புதுடெல்லி, ஏப்.7:**

நீதித்துறை உள்கட்டமைப்பு அத்தியாவசியமானது என்று உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி சூர்ய் காந்த் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தார்.

இதுதொடர்பாக தெலங்கானா மாநிலம், ஹைதராபாதில் புதிய உயர்நீதிமன்ற வளாக கட்டுமானத்துக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சியில் அவர் பங்கேற்றுப் பேசியதாவது: கடந்த சில மாதங்களில் மட்டும் உத்தர பிரதேசம், ஹிமாசல பிரதேசம், ஆந்திரம், அஸ்ஸாம், தெலங்கானாவில் நீதிமன்ற வளாக கட்டுமானத்துக்கு அடிக்கல் நாட்டியுள்ளேன். நீதித் துறை உள்கட்டமைப்பு அத்தியாவசியமானது. இந்த உள்கட்டமைப்பை வலுப்படுத்த



வேண்டும் என்பதை மாநில அரசுகள் உணர்ந்துள்ளன.

தற்போது தெலங்கானாவில் 100 ஏக்கர் பரப்பளவில் கட்டப்படும் புதிய உயர்நீதிமன்ற வளாகம் நாட்டில் உள்ள சிறந்த நீதிமன்ற வளாகங்களில் ஒன்றாக இருக்கும் என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் உச்சநீதிமன்ற நீதிபதிகள் பி.எஸ். நரசிம்மா, உஜ்ஜல் புயான், எஸ்.வி.பாட்டீல், அலோக் ஆராதே, தெலங்கானா உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி அபரேஷ் குமார் சிங் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# மாநிலங்களவை எம்.பி. பதவி கொடுக்காமல் ஏமாற்றிவிட்டார் இபிஎஸ்: பிரேமலதா விஜயகாந்த் குற்றச்சாட்டு

**திருவண்ணாமலை, ஏப்.7:**

மாநிலங்களவை உறுப்பினர் பதவி கொடுப்பதாகக் கூறி, அதிமுக பொதுச்செயலர் எடப்பாடி பழனிசாமி ஏமாற்றிவிட்டார் என்று தேமுதிக பொதுச்செயலர் பிரேமலதா விஜயகாந்த் குற்றஞ்சாட்டினார்.

திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோயிலில் ஞாயிற்றுக்கிழமை சுவாமி தரிசனம் செய்த அவர், பின்னர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: தமிழகம் முழுவதும் தேமுதிகவுக்கும், கூட்டணிக் கட்சிகளுக்காகவும் தேர்தல் பிரசாரம் மேற்கொண்டு வருகிறேன். இந்தத் தேர்தலில் எங்கள் கூட்டணி 200 தொகுதிகளுக்கு மேல் வெற்றி பெற்று மீண்டும் மு.க.ஸ்டாலின் முதல்வராக பதவி ஏற்பார்.

எடப்பாடி கே.பழனிசாமி முன்னாள் முதல்வர், இன்று எதிர்க்கட்சித் தலைவர், அவருடைய வார்த்தைகள் கண்ணியமாக, மதிக்கக் கூடிய வகையில் இருக்க வேண்டும். அவர் அடுத்தவர்களை குறைகூறுவதற்கான பலனை தேர்தல் முடிவு வரும் மே 4-ஆம் தேதியன்று அடைவார்.



உங்களுடன் தானே நாங்கள் கூட்டணியில் இருந்தோம். நாங்கள் இருக்கும் போது எங்களுடைய அருமை உங்களுக்குத் தெரியவில்லை. நாங்கள் கூட்டணியை விட்டு போனதும் வயிற்றெரிச்சல் ஏற்படுகிறது.

பழனிசாமி தேமுதிகவுக்கு மாநிலங்களவை உறுப்பினர் பதவி தருவதாக அவரே கையொப்பமிட்டு கொடுத்திருக்கிறார். ஆனால், அவர் நான் கொடுக்கவே இல்லை என்கிறார்.

அரசியலில் மரியாதை காரணமாக கண்ணியத்தை கடைப்பிடித்து நான் இதுவரை அதை வெளிக்காட்டவில்லை. ஆனால், இன்று அவர் கையொப்பமிட்ட கடிதத்தை காட்ட வேண்டிய நிலைக்கு என்னை அவர் ஆளாக்கியுள்ளார்.

நீங்களே பாருங்கள் என்று கூறி கடிதத்தை காண்பித்து, பழனிசாமியும், நானும் 2024-ஆம் ஆண்டு கையொப்பமிட்டுள்ளோம். அப்போது, ஆண்டைக் குறிப்பிடாமல் கடிதம் அளிக்கிறீர்களே என்று கேட்டபோது, அவர் எம்ஜிஆர், ஜெயலலிதா காலத்தில் இருந்து ஆண்டைக்குறிப்பிடுவதில்லை. என்னுடைய வார்த்தை தான் முக்கியம் என்றார். அவர் கூறிய வார்த்தையை நாங்கள் நம்பினோம். ஆனால் அவர் நம்பிக்கைக்கு புறம்பாக பேசி வருகிறார்.

விருத்தாசலம், சேலம், பேனாகரம், தருமபுரி தொகுதிகளில் எங்களுக்கும், பாமகவுக்கும் தான் போட்டி. அன்புமணி தவறாக பிரசாரம் செய்வதாக கேள்விபட்டேன். கண்ணியத்தோடு பேசவேண்டும். ஜாதி, குடும்பம் பற்றி தவறாக பேசுவதை அன்புமணியும், எடப்பாடி பழனிசாமியும் நிறுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.

# வணிகச் செய்திகள்

## தங்கம் விலை பவுனுக்கு ரூ.1,120 குறைவு

**சென்னை, ஏப்.7:**

22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை நேற்று (ஏப்.6) சென்னையில் பவுனுக்கு ரூ.1,120 என குறைந்தது. இன்றைய தங்கம், வெள்ளி நிலவரம் குறித்து விரிவாக பார்ப்போம்.

மேற்காசிய போர், சர்வதேச பொருளாதார சூழல், கச்சா எண்ணெய் விநியோகத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்பு, அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு சரிவு, தங்கத்தின் மீதான முதலீடு, உலக பங்குச் சந்தை முதலீடுகள் உள்ளிட்டவற்றின் அடிப்படையில், தங்கத்தின் விலை நிர்ணயிக்கப்படுகிறது. மறுபக்கம் உலக அளவில் தங்கத்தை இறக்குமதி செய்யும் நாடுகளில் இந்தியா முன்னணியில் உள்ளது. இதனால் இந்தியாவில் தங்கம் விலை உயர்ந்தும், குறைந்தும் வருகிறது.

இந்தச் சூழலில் சென்னையில் இன்று காலை வர்த்தகம் தொடங்கியதும் தங்கம் விலை சரிந்தது. 22 காரட் ஆபரணத் தங்கம் கிராமுக்கு ரூ.140 மற்றும் பவுனுக்கு ரூ.1,120 என விலை குறைந்தது. இதனால் ஒரு கிராம் ரூ.13,810-க்கும், ஒரு பவுன் ரூ.1,10,480-க்கும் விற்பனை ஆகிறது.

24 காரட் தங்கம் பவுனுக்கு ரூ.1,216 குறைந்து, ஒரு பவுன் ரூ.1,20,528-க்கு விற்பனை ஆகிறது. 18 காரட் தங்கம் பவுனுக்கு ரூ.920 குறைந்து, ஒரு பவுன் ரூ.92,160-க்கு விற்பனை ஆகிறது. வெள்ளி விலையில் இன்று மாற்றமின்றி ஒரு கிராம் ரூ.255-க்கும், கட்டி வெள்ளி கிலோ ரூ.2,55,000-க்கும் விற்பனை ஆகிறது.

# தமிழகத்தில் சூரிய சக்தி மின் உற்பத்தி அதிகரிப்பு: மின் வாரிய அதிகாரிகள் தகவல்

**சென்னை, ஏப்.7:**

தமிழகத்தில் சூரிய சக்தி மின் உற்பத்தி அதிகரித்துள்ளதாக மின் வாரிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாடு மின் வாரியம் சூரிய ஒளி, காற்றாலை போன்ற புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வாயிலாக மின் உற்பத்தி செய்ய முக்கியத்துவம் அளித்து வருகிறது. தமிழகத்தில் தற்போது சூரிய ஒளி மின் நிலையங்களின் உற்பத்தி திறன் 12,352 மெகாவாட்டாகவும், காற்றாலைகளின் திறன் 10 ஆயிரம் மெகாவாட்டாகவும் உள்ளது.

தமிழகத்தின் மின் தேவை தினமும் சராசரியாக 350 மில்லியன் யூனிட்கள் என்ற அளவில் இருக்கும். ஆனால் கோடை காலங்களில் அதிகரித்து காணப்படும். முன்னதாக தமிழகத்தின் அதிகபட்ச மின் நுகர்வு என்பது கடந்த 2024-ம் ஆண்டு ஏப்.30-ம் தேதி 454 மில்லியன் யூனிட்களாக பதிவானது. இந்த ஆண்டு கோடை காலம் மற்றும் தேர்தல் நடைபெறவுள்ளதால் மின் நுகர்வு உச்சத்தைத் தொடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வெயிலின் தாக்கம் அதிகரித்து மின் நுகர்வு அதிகரித்தாலும், சூரிய சக்தி மின் உற்பத்தியும் அதிகரித்துள்ளதாக மின் வாரிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து அவர்கள் கூறியதாவது: வெயில் காலம் தொடங்கியது முதல் வீடுகள், அலுவலகங்கள் என அனைத்து பகுதிகளிலும் குளிர் சாதனங்களின் பயன்பாடு அதிகரித்துள்ளது. வெயில் அதிகரித்ததால் சூரிய ஒளி மின் உற்பத்தி கடந்த மார்ச் 24-ம் தேதி 54.8 மில்லியன் யூனிட், 27-ம் தேதி 55.6 மில்லியன் யூனிட்களாக இருந்தது. இதற்கு முன் கடந்த ஆண்டு ஆகஸ்ட் 20-ம் தேதி 53.9 மில்லியன் யூனிட்கள் உற்பத்தியே அதிகபட்சமாக இருந்தது. சூரிய சக்தி மின்சாரம் மாநிலத்தின் தற்போதைய மின் தேவையில் 13 சதவீதத்தை பூர்த்தி செய்கிறது. இது வணிக மற்றும் வீட்டுபயன்பாட்டுக்கு தொடர்ந்து மின்சாரம் வழங்கி உதவுகிறது. கடந்த 2022-ம் ஆண்டு சூரிய சக்தி உற்பத்தி திறன் 5 ஆயிரம் மெகாவாட்டாக இருந்த நிலையில் தற்போது 12 ஆயிரம் மெகாவாட்டாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு பிப்ரவரியில் சூரிய சக்தி வாயிலாக 1,745 மில்லியன் யூனிட்கள் உற்பத்தி செய்யப்பட்ட நிலையில் இந்த ஆண்டுகூடுதலாக 40 மில்லியன் யூனிட்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு கூறினர்.

# மேற்காசிய போரால் இந்திய பொருளாதார வளர்ச்சி 6%ஆக குறையும்! மூடீஸ் ஆய்வு நிறுவனம் கணிப்பு!

**புதுடெல்லி, ஏப்.7:**

இது தொடர்பாக மூடீஸ் நிறுவனம் வெளியிட்டுள்ள ஆய்வு அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

மேற்காசிய போரால் சமையல் எரிவாயு (எல்பிஜி) கடல்வழியாக வருவதில் பிரச்னை ஏற்பட்டுள்ளது. அதன் விலையும் உயர்ந்துள்ளது. இது உணவுப் பொருள் தயாரிப்பு தொடங்கி பல்வேறு விலைகளில் எதிரொலிக்கும். மேலும், இந்தியா பெருமளவில் உரத் தேவையை இறக்குமதி மூலம் எதிர்கொள்கிறது. இதிலும் போரின் தாக்கம் வலுவாக உள்ளது.




சுமார் ஒரு மாதத்துக்கு மேல் நீடித்துவரும் போர் இன்னும் முடிவுக்கு வராத சூழலில், நாட்டின் பொருளாதாரத்தில் பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்தும். உற்பத்திச் செலவு அதிகரிப்பைக் காரணமாக வைத்து ஏற்படும் விலைவாசி உயர்வு என்பது மக்களின் நுகர்விலும் பாதிப்பை ஏற்படுத்தும். இதன் தொடர் விளைவு உற்பத்தியையும் பாதிக்க வாய்ப்புள்ளது. எனவே, 2026-27-இல் இந்தியாவின் பொருளதார வளர்ச்சி 6 சதவீதமாக குறையும். இதற்கு முன்பு 6.8 சதவீதமாக கணிக்கப்பட்டிருந்தது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த பிப்ரவரி 28-இல் ஈரான் மீது அமெரிக்கா, ஈஸ்ரேல் ராணுவத் தாக்குதலை தொடங்கியதில் இருந்து இப்போது வரை கச்சா எண்ணெய் விலை 50 சதவீதம் உயர்ந்துள்ளது. இதையடுத்து, இந்திய எண்ணெய் நிறுவனங்கள் கடும் இழப்பை எதிர்கொண்டுள்ள சூழலில், கடந்த மாத இறுதியில் டீசல் மீதான ரூ.10 கலால் வரி முழுமையாக நீக்கப்பட்டது. பெட்ரோல் மீதும் கலால் வரி ரூ.10 குறைக்கப்பட்டது.

சீனா, பாகிஸ்தான், இலங்கை உள்பட பல்வேறு நாடுகள் பெட்ரோல், டீசல் விலையை உயர்த்திய நிலையில் இந்தியாவில் மட்டும் விலை உயர்த்தப்படவில்லை. அதே நேரத்தில் எரிவாயு விலை மட்டும் உயர்த்தப்பட்டது. இதைத் தொடர்ந்து, கடந்த 2-ஆம் தேதி பெட்ரோலிய ரசாயன (பெட்ரோ கெமிக்கல்) பொருள்கள் இறக்குமதிக்கு வரிவிலக்கை மத்திய அரசு அறிவித்தது. இதன்மூலம், பெட்ரோலிய ரசாயனப் பொருள்களைச் சார்ந்துள்ள பிளாஸ்டிக் உற்பத்தி, பேக்கேஜிங், ஜவுளி, மருந்து உற்பத்தி, ரசாயன உற்பத்தி, வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி மற்றும் பிற உற்பத்தி சார்ந்த துறைகள் விலை உயர்வின் தாக்கம் ஏற்படாமல் பலனடைந்துள்ளன.

எனினும், இந்த வரி விலக்கு காரணமாக அரசுக்கு ரூ.1,800 கோடி வரை இழப்பு ஏற்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

## தலைக்கவசம் அணியாத 19,603 வாகன ஓட்டிகள்: ரூ.1.9 கோடி வசூலித்த காவலர்!

**குருகிராம், ஏப்.7:**

ஹரியானா மாநிலத்தில் ஏற்படும் பெரும்பாலான விபத்துகளில் உயிரிழப்பு அல்லது காயங்கள் ஏற்படுவதற்கு தலைக்கவசம் அணியாததே காரணமாக உள்ளது. இதையடுத்து மாநிலம் முழுவதும் சாலை போக்குவரத்து விதிமுறைகள் குறித்தும் பாதுகாப்பான பயணம் குறித்தும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

இந் நிலையில், குருகிராமில் போக்குவரத்து இணைக் கமிஷனராக பிரதீக் கெலாட் நியமிக்கப்பட்டார். அவர் பொறுப்பேற்ற பிறகு சாலை விதிகளை மீறுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார். அதன்படி, மார்ச் மாதத்தில் மட்டும் போக்குவரத்துக் காவலர் ஒருவர், தலைக்கவசம் அணியாமல் சென்ற 19,603 பேருக்கு அபராதம் விதித்துள்ளார். அதில் ரூ.1.9 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது. இது குறித்து குருகிராம் போக்குவரத்துத் துறை அதிகாரிகள் கூறியதாவது: சாலை விதிமீறலில் பெரும்பாலானவை தலைக்கவசம் அணியாமல் செல்வதாகவே உள்ளது. அதைக் கட்டுப்படுத்த இப்போது விழிப்புணர்வு பிரச்சாரம் செய்யப்படுகிறது. பெரும்பாலான விபத்துகளில் உயிரிழப்பு அல்லது காயம் ஏற்படுவதற்கு இரு சக்கர வாகன ஓட்டிகள் தலைக்கவசம் அணியாமல் இருப்பதே காரணமாக உள்ளது. சாலைகளில் வாகனங்களை ஓட்டும் போது ஒரு ஒழுங்குமுறை, ஒழுக்கத்தை பின்பற்ற வேண்டும். தற்போது விதிமீறலில் ஈடுபடும் வாகன ஓட்டிகளிடம் அபராதம் வசூலிக்கப்படுகிறது.

## 400 ரூபாய் கடனுக்காக இளைஞர் கொலை: டெல்லியில் சிறுவர்கள் செய்த கொடூரம்

**புதுடெல்லி, ஏப்.7:**

வடகிழக்கு டெல்லியின் தயால்பூர் பகுதியில் உள்ள நியூ முஸ்தபாபாத் பகுதியை சேர்ந்த முகமது கைப் (26) வாழ்ந்து வந்தார். மேலும் இவர் பழைய பொருட்களை சேகரிக்கும் தொழில் செய்து வந்தார். இந்த நிலையில் அதே பகுதியில் உள்ள சிறுவர்களிடம் ரூ. 400 கடன் வாங்கியிருந்ததாகவும், அதை நீண்ட நாட்களாக திருப்பி தராமல் இருந்துள்ளார்.

இந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை, கைப் தனது வேலையை முடித்துவிட்டு திரும்பி கொண்டிருந்தபோது, அந்த சிறுவர்கள் மறித்தனர். மேலும் எங்கள் பணத்தை இப்போதே கொடு என அவர்கள் மிரட்டினர். இதனை தொடர்ந்து கைப் தன்னிடம் இப்போது பணம் இல்லை என்றும், இன்னும் சில நாட்களில் தந்துவிடுவதாகவும் கூறியதாக தெரிகிறது. வெறும் 400 ரூபாய்க்காக தொடங்கிய அந்த வாக்குவாதம், திடீரென வன்முறையாக மாறியது. எதிர்பாராத நேரத்தில், சிறுவர்கள் மறைத்து வைத்திருந்த கத்தியால் கைப்பை சரமாரியாக குத்தினார். இந்த தாக்குதலில் கைப் ரத்த வெள்ளத்தில் கீழே விழுந்தார். சிறுவர்கள் அங்கிருந்து தப்பியோடினர். அக்கம் பக்கத்தினர் அவரை மீட்டு ஜேபிசி மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அப்போது கைப்யை பரிசோதித்த மருத்துவர்கள் ஏற்கனவே இறந்துவிட்டதாக கூறினர். இதனை தொடர்ந்து தயால்பூர் போலீஸார் வழக்கு பதிவு செய்து, சுமார் 16 வயதுடைய அந்த மூன்று சிறுவர்களையும் நேற்று காலை கைது செய்தனர். மேலும் கொலைக்கு பயன்படுத்தப்பட்ட மூன்று கத்திகள் பறிமுதல் செய்ததாக போலீசார் தெரிவித்தனர். அண்மையில் வெளியான பாலிவுட் திரைப்படம் ஒன்றின் தாக்கத்தால் இந்த சம்பவத்தில் சிறுவர்கள் ஈடுபட்டதாக போலீசார் தெரிவித்தனர் மேலும் இந்த கொலை சம்பவத்தை அந்த சிறுவர்கள் தங்கள் மொபைலில் வீடியோ எடுத்து, அதை சமூக வலைதளங்களில் பதிவேற்றியுள்ளனர்.

## கடந்த 2 வாரங்களில் நாடு முழுவதும் 6.6 லட்சம் 5கிலோ சிலிண்டர் விற்பனை

**புதுடெல்லி, ஏப்.7:**

ஹோர்முஸ் நீரிணையில் சரக்குக் கப்பல்கள் பயணிப்பதில் இடையூறுகள் ஏற்பட்டுள்ளபோதிலும் எல்பிஜி சமையல் எரிவாயு தட்டுப்பாடின்றி விநியோகிக்கப்படுவதாகவும் மத்திய எண்ணெய் அமைச்சகம் தெரிவித்தது. இதுகுறித்து அமைச்சகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:-

மார்ச் 23-ஆம் தேதியில் இருந்து எல்பிஜி சமையல் எரிவாயு மையங்களில் 6.6 லட்சம் சிலிண்டர்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. ஒரு நாளைக்கு சராசரியாக 51 லட்சம் 14.2 கிலோ எல்பிஜி சமையல் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்கப்படுகின்றன. இதில் 95 சதவீதம் இணைய வழியில் முன்பதிவு செய்யப்படுகிறது.



சிலிண்டர்களை பதுக்கும் விநியோக மையங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. கடந்த மார்ச் மாதத்தில் இருந்து 50,000 சிலிண்டர்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. 1,400 எல்பிஜி சமையல் எரிவாயு விநியோக மையங்களுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டு 36 விற்பனையாளர்கள் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் நாட்டில் வீடுகளுக்குப் பயன்படுத்தப்படும் எல்பிஜி சமையல் எரிவாயு தட்டுப்பாடின்றி விநியோகிக்கப்படுகிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தேர்தலையொட்டி ரூ.650 கோடி மதிப்பிலான ரொக்கம், போதைப் பொருள் பறிமுதல்

**புதுடெல்லி, ஏப்.7:**

புதுடெல்லி: தமிழகம் உள்ளிட்ட 4 மாநிலங்கள் மற்றும் புதுச்சேரியில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், வாக்காளர்களுக்கு விநியோகிப்பதற்காக கொண்டு செல்லப்பட்ட ரூ.650 கோடி மதிப்பிலான ரொக்கம், போதைப்பொருள் மற்றும் மதுபானங்களை அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளதாகத் தேர்தல் ஆணையம் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்துள்ளது.




இதுகுறித்து தேர்தல் ஆணையம் கூறியுள்ளதாவது: மேற்கு வங்கத்தில் அதிகபட்சமாக ரூ.319 கோடி மதிப்பிலான சட்டவிரோத ரொக்கம், போதைப்பொருள் மற்றும் மதுபானங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இதனைத் தொடர்ந்து, தமிழகத்தில் ரூ.170 கோடி மதிப்பிலான பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

வாக்காளர்களைக் கவரும் வகையில் விநியோகிக்கப்படவிருந்த சட்டவிரோதப் பணப் புழக்கத்தைக் கட்டுப்படுத்த ஆணையம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. தேர்தல் முறைகேடுகள் குறித்த புகார்கள் மீது 100 நிமிடங்களுக்குள் நடவடிக்கை எடுப்பதை உறுதி செய்ய 5,173 பறக்கும் படைகள் அமைக்கப்பட்டுள்ளன.

நிலையான கண்காணிப்புக் குழுக்கள்: இது தவிர, மாநிலங்களின் பல்வேறு எல்லைப் பகுதிகளில் திடீர் வாகனத் தணிக்கை மேற்கொள்வதற்காக 5,200-க்கும் மேற்பட்ட நிலையான கண்காணிப்புக் குழுக்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. கேரளம், அசாம், புதுச்சேரியில் ஏப்ரல் 9-ம் தேதி ஒரே கட்டமாகத் தேர்தல் நடைபெறுகிறது. தமிழகத்தில் ஏப்ரல் 23-ம் தேதி ஒரே கட்டமாகச் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறுகிறது. மேற்கு வங்கத்தில் ஏப்ரல் 23 மற்றும் ஏப்ரல் 29 என இரண்டு கட்டங்களாகத் தேர்தல் நடைபெறவுள்ளன. மேலும், 6 மாநிலங்களில் உள்ள 8 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் ஏப்ரல் 9 மற்றும் 23 ஆகிய தேதிகளில் நடைபெறுகிறது. வாக்கு எண்ணிக்கை மே 4-ம் தேதி நடத்தப்பட்டு முடிவுகள் அன்றைய தினமே வெளியாக உள்ளன.

# “கல்வியறிவு பெற்ற கேரள மக்களை குஜராத் போல ஏமாற்ற முடியாது” - கார்கே பேச்சு

**இடுக்கி, ஏப்.7:**

5 மாநில சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு அரசியல் கட்சிகளின் பிரச்சாரம் நாடு முழுவதும் தீவிரமடைந்துள்ளது. இதில் வரும் 9-ம் தேதி அன்று கேரளா, அசாம் மாநிலம் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்துக்கு ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெறுகிறது. இதனால் அரசியல் கட்சிகள் இந்தப் பகுதிகளில் மிகத் தீவிர பரப்புரையில் ஈடுபட்டுள்ளனர். இந் நிலையில், ஞாயிற்றுக்கிழமை அன்று கேரள மாநிலம் இடுக்கி மாவட்டத்தில் நடைபெற்ற தேர்தல் பரப்புரை கூட்டத்தில் மல்லிகார்ஜுன கார்கே



பேசியதுசர்ச்சை ஆகியுள்ளது. அந்த கூட்டத்தில் அவர் பேசியதாவது: கேரள மக்களை தவறாக வழிநடத்தலாம் என எண்ண வேண்டாம்.

அவர்கள் புத்திசாலிகள், கல்வியறிவு பெற்றவர்கள். பிரதமர் மோடியும், முதல்வர் பினராயி விஜயனும் கல்வியறிவு பெறாத குஜராத் அல்லது பிற பகுதியில் உள்ள மக்களை ஏமாற்றலாம். ஆனால், அது கேரள மக்களிடத்தில் முடியாது” என்றார்.

பாஜக கடும் எதிர்வினை: கார்கேவின் இந்த பேச்சுக்கு பாஜக கடுமையாக எதிர்வினையாற்றி உள்ளது. இது தொடர்பாக குஜராத் மாநில துணை முதல்வர் ஹர்ஷ் சிங்வி எக்ஸ் தளத்தில் ட்வீட் செய்துள்ளார். “தேசம் காந்தி, சர்தார் படேலை பெற்றது குஜராத் மண்ணில் இருந்துதான். தேசத்தின் மிகப் பிரபலமான பிரதமரை நரேந்திர மோடியை வழங்கியதும் குஜராத் மண்தான்.

நீங்கள் 6 கோடி குஜராத் மக்களை அவமதித்து உள்ளீர்கள். குஜராத் மீது இவ்வளவு வெறுப்பு ஏன்? மீண்டும் மீண்டும் குஜராத் மக்களை இப்படி இகழ்வது ஏன்? குஜராத் மக்கள் உங்களை ஆட்சி அதிகாரத்தில் இருந்து அகற்றினர்.

அதற்கு இப்படி பழிவாங்குகிறீர்களா? இந்தப் பேச்சு விரக்தி அல்ல. இது உங்கள் நிலைப்பாட்டை வெளிப்படுத்துகிறது. காங்கிரஸ் கட்சியை குஜராத் மக்கள் புறக்கணித்து வருகின்றனர். அது வருங்காலத்திலும் தொடரும். குஜராத் உங்களை மன்னிக்காது” என அதில் தெரிவித்துள்ளார்.

## ரூ.70 லட்சம் மருந்துகள் திருட்டு: டெல்லியில் 5 பேர் கைது

**புதுடெல்லி, ஏப்.7:**

அரசு மருத்துவனைகளில் ஏழை எளிய மக்களுக்கு இலவசமாக வழங்கப்பட வேண்டிய மருந்துகளைத் திருடி, சட்டவிரோதமாக வெளிச் சந்தையில் விற்பனை செய்து வந்த 5 பேர் கொண்ட கும்பலை டெல்லி காவல் துறையின் குற்றப்பிரிவு போலீஸார் அதிரடியாக கைது செய்தனர்.

டெல்லி தீஸ் ஹசாரி பகுதியில் உள்ள ‘ஜெய் பாரத் டிரான்ஸ்போர்ட்’ வளாகத்தில் டெம்போ மற்றும் சொகுசு காரில் அரசு மருந்துகளை கடத்த முயன்ற மருந்தாளுநர் பினேஷ் குமார் உட்பட 5 பேரை போலீஸார் கைது செய்து விசாரிக்கின்றனர்.

## ஏப்.10-ல் மாநிலங்களவை எம்.பி. ஆகிறார் நிதிஷ் - பிஹாருக்கான புதிய முதல்வர் யார்?

**பாட்னா, ஏப்.7:**

பிஹார் மாநில முதல்வர் நிதிஷ்குமார் மாநிலங்களவைக்குத் தேர்வு செய்யப்பட்டார். இதைத் தொடர்ந்து பிஹாருக்கான அடுத்த முதல்வர் யார் என்று இதுவரை அறிவிக்கப்படவில்லை. இதனால் நிதிஷூம் தனது பதவியை ராஜினாமா செய்யவில்லை.

இந் நிலையில் தனது பிஹார் மாநில சட்ட மேலவை உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்துள்ள நிதிஷ்குமார், விரைவில் முதல்வர் பதவியிலிருந்தும் விலகவுள்ளார். மேலும் அவர் வரும் 10ம் தேதி மாநிலங்களவை எம்.பி.யாக பதவியேற்க உள்ளார் என்று பிஹார் மாநில பாஜக தலைவர் சஞ்சய் சரோகி நேற்று தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து பிஹாரின் புதிய முதல்வராக கூட்டணிக் கட்சியான பாஜகவைச் சேர்ந்த ஒருவர் முதல்வராக பொறுப்பேற்பார் என என்டிஏ வட்டாரங்கள் தெரிவித்தன. புதிய முதல்வர் யார் என்பதை என்டிஏ கூட்டணி முடிவு செய்யவுள்ளது. புதிய முதல்வரைத் தேர்வு செய்யும் குழுவில் நிதிஷ்குமாரும் இருப்பார். மேலும் நிதிஷ்குமாரின் மகன் நிஷாந்த் குமாருக்கு துணை முதல்வர் பதவி வழங்கப்படலாம் எனத் தெரிகிறது. இதனிடையே வரும் 8-ம் தேதி அமைச்சரவைக் கூட்டத்தை முதல்வர் நிதிஷ்குமார் கூட்டியுள்ளார். அதைத் தொடர்ந்து அவர் டெல்லிக்கு செல்வார் என்றும் தெரியவந்துள்ளது. 2-வது வாரத்தில் புதிய முதல்வர் பதவியேற்பு விழா நடைபெறும் எனத் தெரிகிறது.

பிஹாரில் கடந்த 2025-ல் நடைபெற்ற பேரவைத் தேர்தலில் என்டிஏ கூட்டணி மாபெரும் வெற்றி பெற்றது. இதையடுத்து ஐக்கிய ஜனதா தளத்தின் தலைவரான நிதிஷ்குமார் பிஹாரின் முதல்வராக 10-வது முறையாக பொறுப்பேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## “காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் பெண்கள் தொழில் தொடங்க ரூ.50,000” - அசாமில் ராகுல் வாக்குறுதி

**விஸ்வநாத், ஏப்.7:**

அசாம் மாநிலத்தின் விஸ்வநாத் நகரில் நடைபெற்ற காங்கிரஸ் தேர்தல் பிரச்சார கூட்டத்தில் மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி பங்கேற்று பேசியதாவது: அசாம் மாநில நலன், தேயிலை தொழிலாளர்களுக்கு அதிக ஊதியம், மக்களுக்கு எஸ்டி அந்தஸ்து போன்ற வாக்குறுதிகளை பாஜக அரசு நிறைவேற்றவில்லை.

முதல்வர் ஹிமந்த பிஸ்வா சர்மா மற்றும் பாஜகவினர் மக்களை பிரித்து ஊழலில் ஈடுபடுகின்றனர். இந்தியாவில் அதிகமாக ஊழல் செய்யும் முதல்வர் ஹிமந்த பிஸ்வா சர்மாதான். அவர் பொறுப்பற்ற கருத்துக்களை தெரிவித்து மக்களிடையே பிரிவினையை ஏற்படுத்தி வருகிறார்.

அசாம் தலைவர்கள் ஸ்ரீமந்த சங்கர்தேவ், கோபிநாத் பர்தோலாய், பூபென் ஹசாரிகா, அசன் பிர், ஜுபின் கார்க் போன்ற தலைவர்கள் எல்லாம் மக்களிடையே வெறுப்பை பரப்பவில்லை. அவர்கள் மக்களை ஒன்றிணைக்க பணியாற்றினர். காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வந்தால் மக்களை ஒன்றிணைத்து மாநிலத்தில் வளர்ச்சியை ஏற்படுத்தும். காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் 6 பிரிவினருக்கு எஸ்.டி. அந்தஸ்து வழங்கும். தேயிலை தொழிலாளர்களுக்கு ரூ.450 தினக்கூலி வழங்குவோம். பெண்களின் வங்கி கணக்கில் மாதந்தோறும் நிதியுதவி அளிக்கப்படும். பெண்கள் தொழில் தொடங்க ரூ.50,000 வழங்குவோம். அனைத்து குடும்பத்துக்கும் ரூ.25 லட்சம் மதிப்பில் சுகாதார காப்பீடு வழங்குவோம். முதியோர்களுக்கு மாதந்தோறும் ரூ.1,250 உதவித் தொகை வழங்குவோம். இவ்வாறு ராகுல் கூறினார்.

## ரயில் தண்டவாளங்களில் 18,000 டன் குப்பைகள் அகற்றம்: எம்சிடி தகவல்

**புதுடெல்லி, ஏப்.7:**

தலைநகரில் உள்ள தண்டவாளங்களில் தில்லி மாநகராட்சி மேற்கொண்ட சிறப்பு தூய்மை இயக்கத்தின் மூலம் இதுவரை 18,495 டன் குப்பைகள் அகற்றப்பட்டுள்ளதாக அதிகாரிகள் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தனர்.

இது தொடர்பாக வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டதாவது: தலைநகரில் மொத்தம் 102.9 கீ.மீ. நீளமுள்ள ரயில் தண்டவாளங்களில் குப்பைகள் அகற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுவரை 49.74 கி.மீ. தூரத்துக்கான தூய்மை பணிகள் நிறைவடைந்துள்ளன. ரயில்வே அதிகாரிகளுடன் இணைந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 123 இடங்களில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதுவரை 18,495 டன் குப்பைகள் அகற்றப்பட்டுள்ளன. இதில் கரோல் பாக் மற்றும் கேஷவ்புரம் பகுதிகளில் அதிகப்படியாக 4,100 டன் குப்பைகள் அகற்றப்பட்டுள்ளன. இதில் 550 பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டு டிப்பர் லாரிகள், ஜேசிபி இயந்திரங்கள் மற்றும் நவீன இயந்திரங்கள் மூலம் குப்பைகள் அகற்றப்பட்டன. கரோல் பாக் பகுதியில் பெருமளவு குப்பைகளை வெளியேற்ற 20 ரயில் பெட்டிகள் பயன்படுத்தப்பட்டன. மீண்டும் புதிதாக குப்பைகள் கொட்டப்படாமல் தடுக்க ரயில்வே ஓரங்களில் 61 இரட்டை குப்பைத்தொட்டிகள் வைக்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டது. ‘இந்த இயக்கம் பழைய குப்பை தேக்கங்களை அகற்றுவது மட்டுமின்றி, நீண்டகால தூய்மையை உறுதி செய்ய சிறந்த உள்கட்டமைப்பு மற்றும் பொதுமக்களின் பங்களிப்பை உறுதி செய்ய வலியுறுத்துகிறது’ என தில்லி மாநகராட்சி ஆணையர் சஞ்சீவ் கிர்வார் தெரிவித்தார்.

# டிரம்ப் மிரட்டலைத் தொடர்ந்து ஈரான் மீது மீண்டும் ஏவுகணைத் தாக்குதல்; 25 பேர் பலி!

தெஹ்ரான், ஏப்.7:

அமெரிக்க அதிபர் டிரம்ப் மிரட்டலைத் தொடர்ந்து ஈரான் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் மேலும் 25 பேர் பலியாகினர்.

அமெரிக்க-இஸ்ரேல்படைகள் ஈரான் நகரங்கள் மீது நேற்று நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் மேலும் 25 பேர் பலியாகினர். இதற்கு பதிலடியாக இஸ்ரேல் மீது ஈரான் நடத்தியத் தாக்குதலில் 2 பேர் பலியானதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

ஈரான் அரசு நிலைகளின் மீதான தாக்குதல்கள் நிறைவடைந்ததாக இஸ்ரேல் தெரிவித்த போதும் இன்று மீண்டும் ஈரான் குடியிருப்புப் பகுதிகள் மீது ஏவுகணைத்



தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. மேலும், பல்கலைக்கழகம் ஒன்றின் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் தலைநகரான தெஹ்ரானில் சில பகுதிகளுக்கு எரிவாயு விநியோகம் தடைபட்டுள்ளதாகவும் செய்தி வெளியானது.

முன்னதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் ஹோர்முஸ் நீரிணையை 48 மணிநேரத்திற்குள் ஈரான் திறக்காவிட்டால் அவர்களை நரகத்திற்கு அனுப்புவதாக எச்சரித்த நிலையில், அவரது மிரட்டலை நிராகரிக்கும் விதமாக பிராந்தியம் முழுவதும் பேரழிவு ஏற்படும் என்று ஈரான் பதிலளித்துள்ளது.

இதுதொடர்பாக அறிக்கை வெளியிட்ட ஈரான் செய்தித் தொடர்பாளர், "பொதுமக்கள் வசிக்கும் பகுதிகள் மீதான தாக்குதல்கள் தொடர்ந்தால் எங்களின் அடுத்தகட்ட தாக்குதல்கள் மற்றும் நடவடிக்கைகளால் மிகப்பெரிய பேரழிவைச் சந்திக்க நேரும்" என்று எச்சரித்துள்ளார்.

## ஹார்முஸ் ஜலசந்தியை திறக்க முடியாது: ஈரான் திட்டவட்டம்

தெஹ்ரான், ஏப்.7:

அமெரிக்காவும் ஈரானும் தற்காலிக போர்நிறுத்தம் குறித்து பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுவரும் நிலையில், தற்காலிக போர்நிறுத்தத்தின் ஒரு பகுதியாக ஹார்முஸ் ஜலசந்தியை மீண்டும் திறக்க ஈரான் மறுத்துவிட்டது.

மத்திய கிழக்கில் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக போர்நிறுத்த திட்டம் குறித்து அமெரிக்காவும், ஈரானும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகின்றன. ஆனாலும், தற்காலிக போர்நிறுத்தத்தின் ஒரு பகுதியாக ஹார்முஸ் ஜலசந்தியை மீண்டும் திறக்கப் போவதில்லை என்பதை ஈரான் தெளிவுபடுத்தியுள்ளது.

இந்த பேச்சுவார்த்தைகள், உடனடி போர்நிறுத்தம் மற்றும் அதனை தொடர்ந்து ஒரு விரிவான ஒப்பந்தம் என இரண்டு கட்ட செயல்முறையை முன்வைக்கிறது. இந்த திட்டம் குறித்து பாகிஸ்தான் ராணுவத் தளபதி ஆசிம் முனீர், அமெரிக்க துணை அதிபர் ஜே.டி.வேன்ஸ், சிறப்புத் தூதர் ஸ்டீவ் விட்காஃப் மற்றும் ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அரக்சி ஆகியோருடன் தொடர்ந்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஆனால், 'தற்காலிக போர்நிறுத்தத்தின் ஒரு பகுதியாக ஹார்முஸ் ஜலசந்தியை மீண்டும் திறக்க முடியாது. அதேபோல, இதில் ஒரு முடிவை எடுப்பதற்காக ஈரான் எந்த அழுத்தங்களையும் அல்லது காலக்கெடுவையும் ஏற்காது,' என்று ஈரான் தரப்பில் உறுதியாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. முன்னதாக, அமெரிக்கா, ஈரான் மற்றும் மத்தியஸ்தர்கள் இரு கட்ட ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக, 45 நாள் போர்நிறுத்தத்தைப் பரிசீலித்து வருவதாகவும், இது இறுதியில் மத்திய கிழக்கில் மோதலுக்கு நிரந்தர முடிவைக் கொண்டுவர வழிவகுக்கும் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. ஹார்முஸ் ஜலசந்தியை மீண்டும் திறக்க ஈரானுக்கு ட்ரம்ப் ஒரு இறுதிக் காலக்கெடுவை வழங்கியுள்ளார். இந்த காலக்கெடு செவ்வாய்க்கிழமை இரவு 8 மணிக்கு முடிவடைகிறது. மேலும், பேச்சுவார்த்தைகள் தொடர்வதாகவும், ஓர் உடன்பாடு எட்டப்படும் வாய்ப்பு இருப்பதாகவும், பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்தால் ஈரான் மீது கடுமையான நடவடிக்கைகளை எடுப்போம் என்றும் ட்ரம்ப் கடுமையாக எச்சரித்தார்.

## இஸ்ரேல், வளைகுடா நாடுகளில் ஈரான் தீவிர தாக்குதல்: ட்ரம்ப் எச்சரித்த நிலையில் பதிலடி

தெஹ்ரான், ஏப்.7:

"ஹார்முஸ் ஜலசந்தியை மீண்டும் திறக்கவில்லை என்றால் ஈரானுக்கு நரகத்தைக் காட்டுவோம்," என அமெரிக்க அதிபர் ட்ரம்ப் எச்சரித்ததைத் தொடர்ந்து, ஈரான் இன்று (ஏப்ரல் 6) இஸ்ரேல், வளைகுடா நாடுகள் உள்ளிட்ட மேற்கு ஆசியா முழுவதும் தீவிர தாக்குதல்களை நடத்தியதுடன், "பேரழிவை ஏற்படுத்தும் பதிலடித் தாக்குதல்கள் நடத்தப்படும்" என்றும் எச்சரித்துள்ளது. முன்னதாக ட்ரம்ப் விடுத்த எச்சரிக்கையில், "ஈரான் 48 மணி நேரத்துக்குள் அமெரிக்காவுடன் ஒப்பந்தத்தை இறுதி செய்யுங்கள் அல்லது ஹார்முஸ் ஜலசந்தியை திறந்து விடுங்கள். இல்லாவிட்டால் ஈரான் நரகமாக மாறும்" எனத் தெரிவித்திருந்தார். ஆனால், ட்ரம்ப்பின் இந்த எச்சரிக்கையை பொருட்படுத்தாமல், மேற்கு ஆசியாவில் உள்ள அமெரிக்க இலக்குகள் மீது ஈரான் தனது தாக்குதலை தீவிரமாக்கியுள்ளது. இஸ்ரேல், குவைத் மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் மீது இன்று (ஏப்ரல் 6) அதிகாலையில் இருந்தே தொடர்ச்சியான ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல்களை ஈரான் நடத்தியுள்ளது.

ட்ரம்ப்பின் மிரட்டல்களுக்கு பதிலளித்த ஈரான், "எங்கள் எதிரிகள் பொதுமக்கள் இலக்குகளைத் தாக்கினால், மிகவும் பேரழிவை ஏற்படுத்தும் பதிலடித் தாக்குதல்கள் நடத்தப்படும்" என்று எச்சரித்துள்ளது.

ஈரானில் 45 நாள் போர் நிறுத்தத்திற்கு ட்ரம்ப் அழுத்தம் கொடுத்து வருகிறார். ஆனால், ஈரான் அதற்கு ஒப்புக்கொள்ள மறுத்து வருகிறது. ஈரானால் சுட்டு விழத்தப்பட்ட போர் விமானத்தில் இருந்து காணாமல் போன விமானி நேற்று மீட்கப்பட்டதை ட்ரம்ப் பெருமிதமாக தெரிவித்ததுடன், ஈரான் மின் நிலையங்கள் மற்றும் பாலங்கள் உள்ளிட்ட உள்கட்டமைப்புகள் மீது வான்வழித் தாக்குதல்கள் நடத்தப்படும் என்றும் அவர் எச்சரித்திருந்தார். இன்று வளைகுடா நாடுகள் மீது ஈரான் தொடர்ச்சியான தாக்குதல்களை நடத்தியதாகத் தெரிவித்த நிலையில், தங்கள் பகுதியை நோக்கி ஏவப்பட்ட ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்களின் தாக்குதலை தடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளதாக குவைத் கூறியுள்ளது. ஒரு ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதலுக்குத் தங்கள் வான் பாதுகாப்புப் படைகள் பதிலடி கொடுத்ததாக ஐக்கிய அரபு அமீரகமும் திங்களன்று கூறியது. ஈரானிலிருந்து தங்கள் நாட்டை நோக்கி ஏவப்பட்ட புதிய ஏவுகணை தாக்குதலை அடையாளம் கண்டுள்ளதாக இஸ்ரேல் ராணுவமும் தெரிவித்தது.

# அமெரிக்கா - ஈரான் இடையே 45 நாள்கள் போர்நிறுத்த அறிவிப்பு?

நியூயார்க், ஏப்.7:

45 நாள்கள் தற்காலிக போர்நிறுத்த ஒப்பந்தம் தொடர்பாக அமெரிக்காவும் ஈரானும் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக அமெரிக்க செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அமெரிக்கா, இஸ்ரேல் இணைந்து ஈரான் மீது கடந்த பிப்ரவரி 28 முதல் போர் நடத்தி வருகின்றனர். இதற்கு பதிலடியாக ஈரானும் அமெரிக்காவுக்கு ஆதரவாக உள்ள வளைகுடா நாடுகள் மீது தாக்குதல்களை நடத்தி வருகின்றது.

இதன் தொடர்ச்சியாக, ஹோர்முஸ் நீரிணை மூடப்பட்ட நிலையில், அதனைத் திறக்காவிட்டால் ஈரானை நரகத்திற்கு அனுப்புவேன் என இரு நாள்களாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் எச்சரித்து வருகிறார்.

இந்த நிலையில், அமெரிக்கா - ஈரான் இடையே பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாகவும், அதில் 45 நாள்கள் போர்நிறுத்த ஒப்பந்தம் குறித்து அமெரிக்காவும் ஈரானும் பேச்சுவார்த்தை நடத்தி



வருவதாக அமெரிக்க செய்தி நிறுவனமான ஆக்ஸியோஸ் தெரிவித்துள்ளது.

இதன்மூலம், தொடர்ந்து வரும் மோதல்களுக்கு நீண்டகால தீர்வு எட்டப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்கா, இஸ்ரேல் உள்பட அந்தப் பகுதியில் உள்ள வட்டாரங்களை மேற்கோள் காட்டி பாகிஸ்தான், எகிப்து மற்றும் துருக்கி ஆகிய நாடுகள் மத்தியஸ்தம் செய்து வருவதாக அந்த அறிக்கை குறிப்பிட்டுள்ளது. அமெரிக்க தூதர் ஸ்டீவ் விட்காஃப் மற்றும் ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் அப்பாஸ் அராச்சி ஆகியோர் மறைமுக செய்தி பரிமாற்றங்கள் வழியே தகவல் தொடர்பு மேற்கொண்டதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

இரு தரப்பிலும் தொடர்ந்து தாக்குதல்கள் நடைபெற்று வரும் நிலையில் அடுத்த 48 மணிநேரத்தில் போர்நிறுத்த ஒப்பந்தத்தை மேற்கொள்ளும் வாய்ப்பு குறைவாகவே இருப்பதாக சர்வதேச அரசியல் ஆர்வலர்கள் கூறுகின்றனர். காஸா மற்றும் லெபனானில் போர்நிறுத்தம் மேற்கொள்ளப்பட்ட நிலையிலும் ராணுவ நடவடிக்கைகள் மூலம் தாக்குதல்கள் நடப்பதைப் போன்ற நிலைமையைத் தவிர்க்க விரும்புவதாக மத்தியஸ்தம் செய்த நாடுகளிடம் ஈரான் அதிகாரிகள் தெரிவித்துள்ளதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஈரான் உளவுத்துறை தலைவர் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் அறிவிப்பு!

காசா, ஏப்.7:

ஈரான் உளவுத்துறை தலைவர் மஜித் கதேமி கொல்லப்பட்டதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

ஈரான் புரட்சிகர பாதுகாப்புப் படையின் உளவுத்துறை தலைவர் மஜித் கதேமியைக் கொன்றதாக இஸ்ரேல் பாதுகாப்புத் துறை அமைச்சர் இஸ்ரேல் கட்ஸ் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி பேசிய கட்ஸ், "ஈரான் புரட்சிகர பாதுகாப்புப் படையினர் பொதுமக்களைக் கொன்று வருகின்றனர். நாங்கள் அந்த பயங்கரவாதிகளின் தலைவர்களை ஒழித்து வருகிறோம்.

ஈரான் தலைவர்கள் தாங்கள் குறிவைக்கப்படுவோம் என்ற அச்சத்தில் வாழ்ந்து வருகின்றனர். அவர்களை ஒவ்வொருவராக வேட்டையாடுவோம்.

ஈரானின் பெட்ரோகெமிக்கல்



நிலையங்கள் மற்றும் இரும்பு தொழிற்சாலைகள் மீது கடுமையான தாக்குதல்களை நடத்தியுள்ளோம்.

ஈரானின் தேசிய உள்கட்டமைப்பை தொடர்ந்து சிதைப்போம். இஸ்ரேலுக்கு எதிரான தாக்குதல்களை நடத்தி பயங்கரவாதத்தை வளர்க்கும் அரசை ஒழித்துக்கட்டுவோம்" என்றும் அவர் கூறியுள்ளார்.

ஹோர்முஸ் நீரிணையைத் திறக்க ஈரானுக்கு டிரம்ப் காலக்கெடு விதித்ததைத் தொடர்ந்து, ஈரான் மீது இஸ்ரேலும் அமெரிக்காவும் தொடர் தாக்குதல்களை நடத்தி பொதுமக்களைக் கொல்வதாக செய்தி வெளியாகியிருந்தது. இந்த நிலையில், உளவுத்துறை தலைவர் கொல்லப்பட்டது ஈரானுக்கு பின்னடைவை ஏற்படுத்தும் வாய்ப்பிருப்பதாக சொல்லப்படுகிறது.

## ஈரான் மீது தாக்குதல் நடத்த அதிநவீன ஏவுகணைகளை குவிக்கும் அமெரிக்கா



வாஷிங்டன், ஏப்.7:

ஈரான் போரை வேகமாக முடிவுக்கு கொண்டு வரவேண்டும் என்பதில் அமெரிக்கா தீவிரமாக உள்ளது. இதற்காக, தற்போது அதிக சக்திவாய்ந்த ஜேஏஎஸ்எஸ்எம்-இஆர் ஏவுகணைகளை நிலைநிறுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளது.

மற்ற நாடுகளின் பாதுகாப்புக்காக வைக்கப்பட்டிருந்த கையிருப்புகளை குறைத்து, தனது முழு ஏவுகணை பலத்தையும் ஈரான் போருக்காக அமெரிக்கா திசை திருப்பி விட்டுள்ளதாகவே தெரிகிறது. அமெரிக்காவின் பசிபிக் பிராந்தியக் கிடங்குகளில் இருந்த சுமார் ரூ.13.91 கோடி (1.5 மில்லியன் டாலர்) மதிப்புள்ள இந்த ஏவுகணைகளை இடமாற்றம் செய்ய மார்ச் மாத இறுதியில் உத்தரவிடப்பட்டுள்ளது.

அதன் படி, அமெரிக்காவின் மையப்பகுதி மற்றும் பிரிட்டனின் ஃபேர்ஃபோர்டு தளங்களில் இருந்த ஏவுகணைகள் தற்போது மத்திய கட்டளைப் பிரிவின் (சென்ட்காம்) தளங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கைக்குப் பிறகு, அமெரிக்காவிடம் இருந்த 2,300 ஏவுகணைகளில் வெறும் 425 மட்டுமே மற்ற உலக நாடுகளின் பயன்பாட்டிற்காக எஞ்சியிருக்கும். இது 17 பி-1பி போர் விமானங்கள் ஒரே ஒருமுறை தாக்குதல் நடத்துவதற்கு மட்டுமே போதுமானதாக இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

## ட்ரோன் தாக்குதல் புகைப்படத்தை பகிர்ந்ததாக பிரிட்டன் விமானப் பணிப்பெண் துபாயில் கைது

துபாய், ஏப்.7:

அமெரிக்க படைத்தளம் அமைந்துள்ள வளைகுடா நாடுகள் மீது ஈரான் தாக்குதல் நடத்தி வருகிறது. இந்நிலையில், ஈரான் நடத்திய ட்ரோன் தாக்குதலில் ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள துபாய் சர்வதேச விமான நிலையத்துக்கு அருகே உள்ள கட்டிடம் சேதமடைந்துள்ளது.

இதை புகைப்படம் எடுத்துப் பகிர்ந்ததாக 25 வயதுடைய பிரிட்டன் விமானப் பணிப்பெண் துபாயில் கைது செய்யப்பட்டுள்ளார். 'மிடில் ஈஸ்ட் ஐ' செய்தியின்படி, அந்தப் பெண் ஒரு வாட்ஸ்அப் குழுவில் அந்தப் புகைப்படத்தைப் பகிர்ந்து, விமான நிலையம் வழியாகச் செல்வது பாதுகாப்பானதா என்று சக ஊழியர்களிடம் கேட்டுள்ளார். இதனைத் தொடர்ந்து, நாட்டின் கடுமையான சைபர் கிரைம் சட்டங்களின் கீழ் அவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. அவர் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டால், 2 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை மற்றும் 54,000 டாலர் அபராதம் விதிக்கப்படலாம். அதனைத் தொடர்ந்து அவர் நாட்டை விட்டு வெளியேற்றப்படுவார். இதற்கிடையில், பாதுகாப்பு தொடர்பான முக்கியமான காட்சிகளைப் படம்பிடிக்கவோ அல்லது பகிரவோ வேண்டாம் என்று பிரிட்டன் மற்றும் இந்தியத் தூதரகங்கள் தங்களது நாட்டு குடிமக்களுக்கு அறிவுறுத்தி உள்ளன.

## ஈரான் ஒருபோதும் போரை விரும்பியதில்லை: இந்தியாவுக்கான ஈரான் தூதர் பேட்டி

மேற்காசியாவில் காணப்படும் நீண்டகால மோதல் போக்கால், எரிபொருள் தட்டுப்பாடு, விலைவாசி உயர்வு, அத்தியாவசிய பொருட்களின் பற்றாக்குறை உள்ளிட்டவை பரவலாக அதிகரித்து காணப்படுகிறது. ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் மூடியதுடன், அதனை கடந்து செல்லும் எதிரி நாடுகளின் கப்பல்களை தாக்க கூடிய ஆபத்தும் காணப்படுகிறது. இந்நிலையில், இந்தியாவுக்கான ஈரான் தூதர் முகமது பதலி இன்று கூறும்போது, பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் மற்றும் போரை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்று இந்திய அழைப்பு விடுத்திருப்பது என்பது பாராட்டத்தக்க மற்றும் பொறுப்புணர்வுடன் கூடிய ஒன்றாகும். இந்த சூழ்நிலைகளில், இந்தியா போன்ற நாடுகளின் பங்கு அதிக முக்கியத்துவம் வாய்ந்தது என்று நாங்கள் நம்புகிறோம். ஈரான் ஒருபோதும் போரை விரும்பியதில்லை. நாங்கள் ஒருபோதும் எந்த மோதலையும் தொடங்குவதில்லை என்றும் அவர் கூறினார். ஆனால், எங்களுக்கு எதிராக போரில் ஈடுபட்டால், அதன் முடிவு ஈரானின் கைகளிலேயே இருக்கும். இன்று நடந்து வருவது, வெளிநாட்டினரின் ஆக்கிரமிப்புக்கு எதிராக சட்டப்பூர்வ முறையிலான சுய பாதுகாப்பே ஆகும் என்றும் அவர் கூறினார்.

# ஹோர்முஸ் நீரிணை பழைய நிலைக்குத் திரும்பாது: ஈரான்

தெஹ்ரான், ஏப்.7:

அமெரிக்கா, இஸ்ரேல் உடனான போர் தொடங்கியதிலிருந்து ஹோர்முஸ் நீரிணையை ஈரான் மூடியிருந்தது. இதனை, மீண்டும் திறக்கும் முன்னர் அதன் செயல்பாடு தொடர்பான புதிய நிபந்தனைகளை அமல்படுத்த ஆயத்த பணிகளை மேற்கொண்டு வருவதாக ஈரான் புரட்சிகர பாதுகாப்புப் படை தெரிவித்துள்ளது.

எக்ஸ் தளத்தில் இதுதொடர்பாக வெளியிட்ட பதிவில், "பாரசீக வளைகுடாவின் புதிய ஒழுங்குமுறைக்காக ஈரானிய அதிகாரிகள் அறிவித்த திட்டத்தின் செயல்பாடுகள் பற்றிய தயாரிப்புகளை ஈரான் கடற்படை நிறைவு செய்து வருகின்றனர்" எனப் பதிவிட்டுள்ளனர்.




மேலும், "ஹோர்முஸ் நீரிணை குறிப்பாக அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுக்கு, போருக்கு முந்தைய பழைய நிலைக்குத் திரும்பாது" என்றும் எச்சரித்துள்ளனர்.

ஹோர்முஸ் நீரிணையைத் திறக்காவிட்டால் ஈரானின் பாலங்கள், எரிசக்தி நிலையங்கள் மீது கடுமையான தாக்குதல்கள் நடத்தி ஈரானை நரகத்திற்கு அனுப்புவதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் எச்சரித்த நிலையில் இந்த அறிவிப்பை அவர்கள் வெளியிட்டுள்ளனர்.

ஈரான் தற்போது ஹோர்முஸ் நீரிணை வழியே சில நாடுகளின் கப்பல் போக்குவரத்தை மட்டுமே அனுமதித்துள்ளது.

போர் காரணமாக மூடப்பட்டுள்ள ஹோர்முஸ் நீரிணையைத் திறக்க ஈரானுடன் இணைந்து ஓமன் பேச்சுவார்த்தை நடத்தியது.

சமீபத்திய பேச்சுவார்த்தையில், ஈரான் சட்ட வல்லுநர்கள் ஹோர்முஸ் நீரிணையைக் கடக்கும் கப்பல்களுக்கு சுங்கக் கட்டணமும் வரியும் விதிக்க வேண்டும் என முன்மொழிந்துள்ளனர்

# நிறைவு நாளில் வேட்புமனு தாக்கல் செய்த அரசியல் கட்சித் தலைவர்கள்






# ஹோர்முஸ் நீரிணையைக் கடந்த 8-வது இந்திய கப்பல்!

# 19 பேர் மாநிலங்களவை உறுப்பினர்களாக பதவியேற்பு



# தேர்தலையொட்டி ரூ.650 கோடி மதிப்பிலான ரொக்கம், போதைப் பொருள் பறிமுதல்

## அமெரிக்கா - ஈரான் இடையே 45 நாள்கள் போர்நிறுத்த அறிவிப்பு?


தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை 07.04.2026 செவ்வாய்க்கிழமை இலவச இ–பேப்பர்